
# துப்பாக்கி நாட்கள்



சுபா

# 1

# துப்பாக்கி நாட்கள்

புதுதில்லியைக் குளிர் புரட்டிக் கொண்டிருந்தது.

இயற்கை, ஹிமாச்சலத்திலிருந்து இரவல் வாங்கி வந்திருந்த பனியால் நகரை மூடியிருந்தது. நான்கடி தள்ளி என்ன இருக்கிறது என்பதே தெரியாத அளவுக்கு குருட்டுப் பனி. கடிகாரங்கள் அதற்குள் ஏழு மணி ஆகிவிட்டதா என்ன என்று தங்களையே சந்தேகம் கேட்டுக்கொண்டன.

மீரட் செல்லும் சாலையின் அமைதியான ஓர் ஓரத்தில் அந்த லாரி நின்றிருந்தது. ராணுவத்திற்கே உரித்தான இலைப் பச்சை பெயிண்ட் பூசிய லாரியில், ஸ்டியரிங்கிற்குப் பின்னே உட்கார்ந்திருந்த ஆளுக்குச் சமீபத்தில்தான் முப்பது வயது கடந்திருக்கும். ஒன்றரை விரல் நீள சிகரெட்டின் முனை மட்டும் சிகப்பாகத் தெரிந்தது.

அவன் கவனம் அந்தச் சிகரெட்டில் இல்லை. அடர்த்தியான பனியில் எதிரே கண்களைப் பதித்திருந்தான். காதுகளை எந்தக் தீக்குச்சி உரசலுக்கும் கூட உஷாராக வைத்திருந்தான்.

அவ்வளவு நீளமான சாலையில் அத்தனை அமைதியான நேரத்தில், அந்த ஒற்றை லாரி மட்டும் நின்றிருந்தது சற்று விபரீதமாகக்கூட இருந்தது.

வெகு தூரத்தில் இரண்டு வெளிச்சப் பொட்டுகள் அந்தப் பனியின் பிடிவாதத்தில், மெல்ல மிதந்து வந்தன.

அவன் உஷாரானான். பைனாக்குலரை எடுத்து அதன் மூலம் பார்க்க முற்பட்டான். பனி எதிரியாய் குறுக்கே நின்றது.

இக்னீஷனை உயிர்ப்பித்து லாரியை அதன் டீஸல் சக்தியில் விழிப்புறச் செய்தான். லாரி இப்போது மெலிதாக உதறிக்கொண்டது.

அந்த வெளிச்சப் பொட்டுகள் இன்னும் சற்று நெருக்கத்திற்கு வந்ததும் மறுபடியும் பைனாக்குலரை எடுத்தான்.

இப்போது துணி போட்டு மூடிய ஓவியம்போல் அந்த ஜீப் தெரிந்தது.

திருப்தியானான். கியரைப் பொருத்தி லாரியை உடன் சீறிவிட்டுக் கிளம்பினான். விளக்குகளைப் போடாமல் சாலையின் மத்திக்கு வந்து அந்த ஜீப் உஷாராகுமுன் அதன் வேகத்தை எதிர்நோக்கினான்.

பனியின் உதவியில் அவன் ரகசியங்கள் ஜீப்பிற்குத் தெரியவில்லை. கடைசிக் கணத்தில் லாரியை உணர்ந்து விலக முற்பட்டு, குறைந்த பட்சம் பிரேக் அடித்து நிறுத்தத் தலைப்பட்டு ஜீப் பதறி, அதன் டயர்கள் கதறி......

லாரி ஜீப்பை முத்தமிட்டது.

அசுர முத்தம்!

ஜீப்பின் டிரைவர் உடன் இறந்துபோனான். டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவன் நெற்றிப் பொட்டில் அடிபட்டான். மார்பில் தாக்கப்பட்டான். அவனுடைய வலது கால் 180 டிகிரி மடக்கப்பட்டது.



கூச்சலிட வாயைத் திறந்தான். குரல் வருமுன் சாலையில் வீசப்பட்டான். சில மீட்டர்களை உருண்டு, சாலை ஓரச் சரிவில் குப்பையாகப் பரந்து தன் இறுதி வினாடிகளை எண்ணத்தொடங்கினான்.

பனி அப்போதும் ஓயவில்லை. நசுங்கிய ஜீப்பின் மீதும், இறந்துபோன டிரைவர் மீதும், சாலை ஓரத்தில் சரிந்தவன் மீதும் மெள்ள படர ஆரம்பித்தது.

மோதப்பட்ட லாரியிலிருந்து அவன் இறங்கினான். நெருக்கமாக வெட்டப்பட்டிருந்த தலைமுடியை அளைந்து கொண்டான். தன் பழுப்புநிற ஷூக்களை ஒரு முறை சாலையில் தட்டினான். புரண்டு கிடந்த ஜீப்பையும், அதிலிருந்து வீசப்பட்டவர்களையும் மாறிமாறிப் பார்த்தான். புருவம் மேலேறியிருந்தது.

அணிந்திருந்த ஓவர்கோட்டின் மேல் பொத் தானைக் கழற்றினான். உள்ளே போட்டிருந்த சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து நான்காக மடித்த ஒரு பழுப்பு நிறக் காகிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். ஜீப்பை மறுபடி பார்த்தான். அவன் பார்வையில் திருப்தி தெரிந்தது.

'அரசாங்கமும் அரசாங்கமும் மோதிக்கொண்டு விட்டன' என்று ஒரே ஒரு வாக்கியத்தை மனதில் அமைத்துப் பார்த்தான். அவன் வெளிப்படுத்திய கார்பன்-டை-ஆக்ஸைடு பனியின் ஒரு ஸ்பாட்லைட் ஒளிக்கற்றை போல் கீழ்நோக்கிப் பாய்ந்தது.

புதிதாய் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். லாரியில் ஏறி அமர்ந்தான். கிளம்பினான். லேசாகப் பின் வாங்கி, அந்த அரசாங்க ஜீப்பிலிருந்து விலகி, புதுடில்லியைப் பார்த்து நிதானமான வேகத்தில் ஓட்ட ஆரம்பித்தான்.

அரை மணி நேரத்தில் யாரோ ஊதிக் கலைத்தது போல் பனி சுருண்டு காணாமல் போனது.

கனாட் ப்ளேஸ் விழிக்க ஆரம்பித்தது. சாலையோர டீக்கடை, தன் சக்கரங்களில் உருள ஆரம்பித்தது. ஜிப்பா அணிந்த, பான்பீடா சுவைத்த கடைக்காரன், வாயு அடுப்பில் பாலைக் கொதிக்க வைத்தான்.

கர்ஸன் சாலையின் இயற்கையினூடே கான்வாஸ் காலணிகளுடன் வானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு, நாற்பதைத் தாண்டியவர்கள் ஓட்டத்தைத் துவங்கினார்கள்.

சர்க்கிளில் அகலமாய் அப்போதே புத்தகக் கடை ஒன்று திறந்து, சஞ்சிகைகள் வெயில் தேடித் தொங்கின. சர்சர் என்று சில ஸ்கூட்டர்கள் வந்து நிற்க, குஜராத்தி ஆண்கள் அவற்றிலிருந்து இறங்கி காலைவேளையின் முதல் இனிப்பையும், முதல் சாயாவையும், முதல் பான் பீடாவையும் உட்கொள்ளத் தொடங்கினார்கள்.

ஹோட்டலின் மூன்றாவது மாடியில், கலைவாணி போர்வைக்குள் நெளிந்தாள். நெளிந்து விட்டுப் போர்வையை விலக்கினாள். உடனே குளிர் நடுக்கியது. உடம்புக்குக் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டாள். மேல்பற்கள் கீழ்ப்பற்களைத் தந்தி வேகத்தில் பளிச்பளிச் பளிச்பளிச் என்று முத்தமிட்டு முத்தமிட்டு விலகின. சால்வையை இழுத்து இறுக்கிக்கொண்டு எழுந்தாள். திரைகளை விலக்கினாள்.

கண்ணாடிச் சதுரத்தின் வழியாக கீழே தெரிந்த மௌன இயக்கத்தைப் பார்த்தாள். கழுத்தைத் திருப்பிச் சுவர் அலங்காரத்தில் பொருத்தப்பட்ட க்வார்ட்ஸ் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். பதறினாள். நேரமாகி விட்டது. நேரமாகி விட்டது.



ரிசீவரை எடுத்து ரூம் சர்வீஸை அழைத்தாள்.

"டிக்காஷன் காப்பி." என்றாள்.

வாஷ்பேஸின் முன்னால் நின்று கண்ணாடியில் பார்த்துக்கொண்டே பல்துலக்கத் தொடங்கினாள். உடம்பு கொஞ்சங் கொஞ்சமாய்க் குளிருக்குப் பழக்கமாக ஆரம்பித்தது.

பனிக்கட்டியின்மேல் திராட்சைகளை மிதக்க விட்டது போன்ற அகலமான கண்கள், சிற்பங்களுக்குச் சவால்விடும் மூக்கு.

கலைவாணி மெலிந்து நீண்ட நளினமான விரல்களால் நெற்றியில் வந்து புரண்ட கரிய அலைகளை ஒதுக்கி விட்டாள்.

கலைவாணிக்கு அவள் அப்பாவும் அம்மாவும் வைத்த பெயர் சரஸ்வதி. அவர்கள் ஒரு ரயில் விபத்தில் இறந்து போனதும், ஸ்கூல் புத்தகங்களோடு சேர்த்து மாமா தத்து எடுத்துக்கொண்டார். ஸ்கூலை முடித்ததும் கல்லூரிக்குச் சென்னைக்கு அனுப்பி ஹாஸ்டலில் சேர்த்து விட்டார். அப்போதுதான் பரதம் என்ற நாட்டிய மோகம் வந்தது. கால்களில் சலங்கைகளைக் கட்டிக்கொண்டதும், பெயரைக் கலைவாணி என்று மாற்றிக்கொண்டாள். கெஜட்பதிவுக்குத் தெரிவித்தாள்.

அவளுடைய கால்கள் அவளுக்கே அதிசயமாயின, உடம்பின் நெளிவுகள் அவளையே அசத்தின. எனக்கு இவ்வளவு நன்றாக ஆடவருமா என்ன!

தொலைக்காட்சி நிலையம் ஆரம்பத்தில் பத்து நிமிடம் கொடுத்தது. ரசிகர்களின் கடிதங்கள் அரைமணி நேரம் ஒதுக்கவைத்தன. அந்த அடுத்த நிகழ்ச்சி டில்லியின்

கொண்டையிலிருந்து அகில இந்தியாவிற்கும் ஆன்ட்டெனாக்கள் மூலம் வழிந்தது.

இப்போது டில்லிக்கே அழைப்பு. மத்திய சர்க்காரின் அழைப்பு.

கொஞ்சம் பெருமையாய், கொஞ்சம் பயமாய் இருந்தது.

டவலால் முகத்தை அழுத்தித் துடைத்தாள்

ராம்குமார் விழித்திருப்பானா, இல்லை எழுப்ப வேண்டுமா?

ரிசீவரை எடுத்தாள்.

"ரூம் நம்பர் 304க்கு கனெக்ஷன் கொடுங்கள், ப்ளீஸ்!"

தொடர்பு கிடைத்து அவன் குரல் வந்ததும், "குட் மார்னிங். நீங்கள் மிஸ்டர் ராம்குமார்?" என்றாள், குரலை மாற்றிக்கொண்டு.

"யெஸ்?" ராம்குமாரின் தெம்பான குரல் வந்தது.

"கலைவாணி என்பவரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியுமாவா? அவருக்குத் துணையாகத் தானே நான் வந்திருக்கிறேன்....."

"நல்லது. கலைவாணி காலையிலேயே புறப்பட்டுப் போய்விட்டார். உங்களுக்கு ஒரு மெசேஜ் கொடுத்திருக்கிறார்." கலைவாணி போனில் குறும்பாகப் புன்னகைத்துக் கொண்டே பேசினாள்.

"என்னவென்று?"

"நீங்கள் விழித்ததும் மொட்டை மாடிக்கு ஸ்வெட்டர் போடாமல் போய் அரை மணி நேரம் நிற்கச்



சொன்னார். அப்புறம் பச்சைத் தண்ணீரில் குளித்து விட்டு....."

"விளையாடாதே கலைவாணி!"

"நான் கலைவாணி இல்லை. ரிசப்ஷனிஸ்ட்!"

"உன் குரலை நீ எவ்வளவு மாற்றிக்கொண்டாலும் இந்த ராம்குமாரால் அடையாளம் கண்டுகொள்ள முடியும். மேலும் டில்லி வந்ததிலிருந்து இந்தத் தினுசில் நீ விளையாடுவது நூறாவது முறை. இன்னொரு முறை இப்படி விளையாடினால் கல்யாணத்திற்கு முன்னாலேயே உன்னை டைவர்ஸ் செய்துவிடுவேன்."

"ஸாரி ராம்."

"நகத்தைக் கடிக்காதே."

"டெலிபோனில் எப்படித் தெரிகிறது உங்களுக்கு?"

"எட்டு மணிக்கு நீ பரோடா ஹவுஸில் இருக்க வேண்டும். ஞாபகமிருக்கிறதா?"

"இதோ காப்பி வந்ததும் குளித்துப் பத்தே நிமிடத்தில் ரெடியாகி விடுவேன்."

"பத்தே நிமிடத்தில்? கண்ணுக்கு மை எழுதவே அரை மணி நேரம் பிடிக்கும் உனக்கு....."

"அப்படி மை எழுதியதைப் பார்த்துத்தானே ஐயா டமால் என்று விழுந்தீர்கள்! கலைவாணி, நீதான் என் மூச்சு, நீதான் என் விரல், நீதான் என் நகம் என்றெல்லாம் எழுதிய முதல் கடிதத்தை கையோடு கொண்டு வந்திருக்கிறேன். படிக்கட்டுமா?"

இந்த நேரத்தில் அறையின் அழைப்பு மணி உறுத்தாமல் அழைத்தது.

"ஒன் மினிட் ராம்." என்று ரிசீவரை வைத்துவிட்டுக் கதவைத்திறந்தாள். தலைப்பாகை வைத்த சர்வர். ட்ரேயில் ஆவிபறக்காமல் மூடப்பட்ட காப்பி.

மறுபடியும் ரிசீவருக்கு வந்தாள்.

"என்ன செய்கிறாய்?" என்றான் ராம்குமார்.

"காப்பி சாப்பிடுகிறேன். வேண்டுமா?"

"குளிர் எப்படி இருக்கிறது?"

"எலும்பைத் தொடுகிறது" என்று சிலிர்த்தாள்.

"அடடா, கொடுத்து வைத்த குளிர்."

"ஏன்?"

"உன் அனுமதியில்லாமலேயே தொடுகிறதே! கமான் சீக்கிரம் குளித்துத் தயாராகு. இது சபா புரோக்ராம் போல இல்லை. அரசு விருந்தாளிகளுக்கு முன் ஆடவேண்டும்."

"தெரியும்."

"ஓ. கே. கெட் ரெடி." தொடர்பைத் துண்டித்தான் ராம்குமார்.

கலைவாணி பாத்ரூமுக்குள் நுழைந்தாள்.

ராம்குமாரை எப்போது சந்தித்தாள்? எட்டு மாதங்களுக்கு மேல் இருக்கும். அவளுடைய நாட்டிய நிகழ்ச்சிக்கு ரசிகனாய் வந்து, அப்புறம் மெல்ல மெல்ல......

அவன் ஒரு பிரைவேட் கம்பெனியில் இன்ஜினியர். சிவிலா, மெகானிக்கலா என்று கேளுங்கள், கலைவாணிக்குத் தெரியாது. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் ராம்குமாரின் வரிசை தப்பாத பற்கள். நீளமூக்கு.



அவனுடைய அபாரமான உயரம், சிகரெட் பழக்கமில்லாத சிவந்த உதடுகள், நெற்றியில் புரளும் சுருள் முடி, பெரியவர்களிடம் பணிந்து பேசும் குணம். கடைசியாய்ச் சொன்னது கலைவாணியின் மாமாவுக்கு உடனே பிடித்துப் போய்விட, காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டார்.

இன்னும் இரண்டே மாதங்களில் மிஸ் கலைவாணி திருமதி கலைவாணி ராம்குமார் ஆகிவிடுவாள்.

திருமதி கலைவாணி ராம்குமார். திருமதி கலைவாணி ராம்குமார்.

சொல்லியபோதே அவளுக்கு சாக்லெட் சாப்பிடுவது போல இருந்தது.

கலைவாணி பாத்ரூமில் இருந்த அந்த நேரம் ஹோட்டல் காம்பவுண்டிற்குள் அந்த லாரி வந்து நின்றது. அதிலிருந்து குதித்து இறங்கியவனை நீங்கள் ஏற்கெனவே பீச் சாலை விபத்தில் சந்தித்திருக்கிறீர்கள். சிகரெட்டை அணைத்துவிட்டு ரிசப்ஷனை நெருங்கினான்.

"மிஸ் கலைவாணி, சென்னையிலிருந்து வந்திருப்பவர் அறை எண்....." என்று நிறுத்தினான்.

"303" என்றாள் ரிசப்ஷன் பெண்மணி, மானசீகமாய் ஒரு சல்யூட் வைத்து.

"தாங்க்யூ"

அவன் நடையில் தீர்மானம் இருந்தது. லிஃப்டில் ஏறி காரிடாரில் நடந்து '303' கதவைத் தட்டினான். காத்திருந்த நேரத்தில் ஓவர்கோட் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான்.

துப்பாக்கி தயாராக இருந்தது.

## 2

கலைவாணி கண்ணாடி முன் நின்றிருந்தாள். சந்தோஷமாயிருக்கும் போது சன்னமாக ஹம் செய்வது அவள் வழக்கம். இப்போது ஹம் செய்தாள். கதவு தட்டப்பட்டதும், யார் என்று வினாடி யோசித்தாள். கதவை லேசாகத் திறந்து வெளியே பார்த்தாள்.

"மிஸ்டர் வாசுதேவ்!" என்றாள் ஆச்சரியம் தொங்கும் குரலில். கதவை நன்றாகத் திறந்துவிட்டாள்.

கலைவாணியின் குதூகலமான குரலைக் கேட்டதும் வாசுதேவ் ஈறுகள் தெரியச் சிரித்தான். துப்பாக்கிக்கு அவசியமில்லை என்று ஆறுதலடைந்தான்.

"குட்மார்னிங். நீங்கள் தயாராகி விட்டீர்களா என்று பார்க்க வந்தேன்" என்று கலைவாணியின் அறைக்குள் நுழைந்தான். யாரும் எங்கும் ஒளிந்திருக்கவில்லையே என்று சுற்று முற்றும் பார்த்தான்.

"என்ன பார்க்கிறீர்கள், மிஸ்டர் வாசுதேவ்?"

"ஒரு சந்தேகம்"

"இப்போது என்ன சந்தேகம்?" கலைவாணி தலையைச் சற்றே பின்சாய்த்துச் சிரித்தாள்.

"மிஸ்டர் ராம்குமார் இங்கே எங்காவது ஒளிந்திருக்கிறாரா என்று."

கலைவாணியின் முகத்தில் வெட்கம் ததும்பியது "அவருக்கு அடுத்த அறை. அவரும் தயார். இராணுவத்தினர் கூடக் கிண்டல் செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது."



வாசுதேவ் சிரித்தான். "வேடிக்கைக்காக சொன்னேன். எங்கே உங்கள் குரல்?"

"என்னது?"

"நீங்கள் நடனமாடும் போது மேடையில் உட்கார்ந்து பாடுவாளே, அந்த பெண்?"

"பொன்விழியைச் சொல்கிறீர்களா? அவளும் இந் நேரம் தயாராகியிருப்பாள்."

"கார் எந்நேரமும் வந்துவிடும். நான் முதலில் புறப்படுகிறேன். நாம் பரோடா ஹவுஸில் சந்திப்போம். உங்கள் நிகழ்ச்சி சிறப்பாக அமைய என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்."

வாசுதேவ் வேடிக்கையாக அரை சல்யூட் அடித்து விட்டுக் கிளம்பினான்.

ஹோட்டலுக்குள் நுழைந்தபோது இருந்த பரபரப்பு அவனிடம் இப்போது குறைந்திருந்தது.

"என் டிரெஸ் எப்படியிருக்கிறது?"

ராம்குமார் கண்களை அகலமாக்கிக் கொண்டு கேட்டான். விளம்பரத்திலிருந்து அப்படியே எழுந்து வந்தவன் போலிருந்தான். சாம்பல் நிறச்சட்டை. அதி சாம்பல் நிறப் பாண்ட். வெள்ளை ஷூக்கள்.

"எனக்கு ஒரு சந்தேகம்" என்றாள் கலைவாணி "மேடையில் ஆடப்போவது நானா, நீங்களா?"

"நான் மட்டும் ஆட ஆரம்பித்தால் இரண்டே மணி நேரத்தில் உன் மார்க்கெட் கவிழ்ந்து விடும், ஜாக்கிரதை!"

"பயமுறுத்துவதெல்லாம் அப்புறம் இருக்கட்டும். கார் வந்துவிட்டது என்று ரிசப்ஷனிலிருந்து போன்

வந்தது. பொன்விழியையும், நம் நட்டுவாங்க அண்ணனையும் கிளப்பிக்கொண்டு போகிற வழியைப் பார்ப்போம்'' கலைவாணி தன் அறையைப் பூட்டி னாள்.

நீளமான காரிடாரில் நடந்தார்கள். கடைசி அறையில் கதவை மெலிதாகத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தார்கள்.

"குட்மார்னிங் அக்கா."

பொன்விழி கண்ணாடியைப் பார்க்காமல் நெற்றிப் பொட்டைச் சரிசெய்து கொண்டிருந்தாள். அவளுடைய குரலில் சங்கீத மணிகளின் சிலுசிலுப்பு இருந்தது.

பொன்விழியைப் பற்றி இப்போது சொல்லியாக வேண்டும். இந்தப் பெயரை அவளுக்குச் சூட்டியவர்களை நிற்கவைத்துச் சுடவேண்டும் என்று ராம்குமாருக்கு ஆசை. கலைவாணிக்கும் அதே ஆசைதான். பொன்விழியின் கண்கள் இந்த உலகைத் தரிசித்துச் சில வருடங்கள் ஆகிவிட்டன. சிக்கலான மருத்துவச் சொற்களை உப யோகித்த டாக்டர்கள் இனி அவளுக்குப் பார்வை திரும்பாது என்று கைவிரித்துவிட்டார்கள்.

பார்வை போனபின் அவள் குரலில் சங்கீதம் ஊற்றெடுக்க ஆரம்பித்தது. கிராமம் கலந்த தோட்டத்தில் விடியல் நேரத்துப் பட்சிகளின் இசை, பொன்விழிக்கு கொடுத்தது போக மிச்சமிருக்கும் இனிமை. குற்றாலச் சாரல்களில் பொங்கி வரும் தேனவிருயைப் பொன் விழியின் குரலில் கேட்கலாம். மழை ஓய்ந்தபின், பச்சை இலைகளிலிருந்து வழிந்து கீழே பொட் பொட் என்று தெறிக்கும் நீர்த்துளிகளில் பொன்விழியின் சங்கீதம் இருக்கும்.



ஒன்பது வயது. சின்ன உதடுகள், சீரான பற்கள், கவிதை கலந்த மூக்கு. சற்றே மேடிட்ட நெற்றி இருட்டைப் பழிக்கும் நிறத்தில் கூந்தல். சின்ன உதடுகளில் தன்னம்பிக்கை தெறிக்கும் ஒரு நிரந்தரப் புன்னகை.

கலைவாணி டி. வி. ஸ்டேஷனில் அவளைச் சந்தித்ததும், இனி இவள்தான் தனக்குப் பின்னணி என்று தீர்மானித்து விட்டாள்.

"பொன்விழி, அண்ணன் எங்கே?"

''இதோ'' என்று பாத்ரூமிலிருந்து நட்டுவனார் வெளிப்பட்டார். அந்தக் காலையிலேயே வாய் சிவந்தி ருந்தது. பன்னீர்ப் புகையிலையைக் கும்பகோணத்தி லிருந்து அவருக்குத் தருவித்தாக வேண்டும். தளிர் வெற்றிலை காவிரிக்கரை ஓரத்திலிருந்து பறிக்கப் பட்டிருக்க வேண்டும்.

"என்ன சிவப்பிரகாசண்ணே, கிளம்பலாமா?"

"இதோ" என்றார் சிவப்பிரகாசம். வெற்றிலைப் பெட்டியை எடுத்துக் கொண்டார்.

நான்கு பேரும் லிப்டில் இறங்கினார்கள். போர்ட்டி கோவில் ஏராள எண்களோடு அந்த வெள்ளை அம்பாஸிடர் நின்றிருந்தது. நெருக்கமாய் க்ஷவரம் செய்த டிரைவர் கதவை விறைப்பாகத் திறந்து பிடித்தார்.

ராம்குமார் பொன்விழியின் தோளில் கைவைத்து நடத்திக் கொண்டு வந்தான். வரும் வழியில் ரிசப்ஷன் எங்கே இருக்கிறது, ரெஸ்டாரண்ட் எந்தப் பக்கம், ரிசப்ஷனில் யார் யார் நின்றிருந்தார்கள் (பேப்பர் படித்துக் கொண்டே வந்து ஒரு வழுக்கை தூணில் மோதிக் கொண்டது உட்பட) என்று பொன்விழிக்குச் சொல்லிக் கொண்டே வந்தான்.

அவர்கள் ஏறிக்கொண்டதும், கார் ஒரு நேர்க் கோட்டில் கிளம்பி, பரோட்டா ஹவுஸை நோக்கி விரைந்தது.

பரோட்டா ஹவுஸ் என்றதும் ஒரு திருவல்லிக்கேணி சபாவை எதிர்பார்த்திருந்த சிவபிரகாசம் ஏமாற்ற மடைந்தார். சாக்குக்கட்டியில் எழுதிவைக்கும் போர்டு கூட இல்லை.

"அண்ணா! கண்ட இடத்தில் எச்சில் துப்பாதீர்கள். ராணுவ வீரர்கள் சுட்டே விடுவார்கள்." என்றாள் கலை வாணி, சிரித்துக்கொண்டே.

கார் நின்றதும், வாசுதேவ் நரக்நரக் என்று பூட்ஸ்கள் சப்திக்க நடந்து வந்து கதவைத் திறந்து விட்டான். அவன் உடையில் அங்கங்கே நட்சத்திரங்கள், ஈஸ்ட்மேன் கலரில் ஸ்பெக்ட்ரம் பட்டைகள்.

"வாருங்கள்" என்றான் சுருக்கமாக.

பத்தடிக்கு ஒரு துப்பாக்கி ஆசாமி ராணுவச் சீருடையில் நின்றிருந்தார்கள்.

கலைவாணிக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது.

"இங்கே எதற்கு இவ்வளவு காவல்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

வாசுதேவ் கலைவாணிக்கு அருகில் குனிந்தபடியே நடந்தான். நடந்தபடியே சொன்னான்.

"வந்திருப்பவர்கள் அரசு விருந்தாளிகள். ரஷ்யாவில் உயர் பதவியில் இருக்கும் இரண்டு அதிகாரிகள். காம்ரெட் விலாடிமீர். காம்ரேட் சுபோவ்ஸ்க்கி, நம் நாட்டில் அவர்களுக்கு எந்த ஆபத்தும் நிகழாமல் திருப்பியனுப்பும் பொறுப்பு ராணுவத்தைச் சேர்ந்தது."



பரோட்டா ஹவுஸின் பின்புறம் இன்னொரு சின்னக் கதவு திறக்கப்பட்டது.

"மன்னியுங்கள். உள்ளே போகுமுன் உங்களைச் சோதிக்கவேண்டும்."

அவர்களிடம் எந்தவித ஆயுதமும் இல்லை என்று உறுதி செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டார்கள். சிவப்பிர காசத்தின் வெற்றிலைப்பெட்டியை மட்டும் வைத்துக் கொண்டார்கள்.

"நிகழ்ச்சி முடிந்தபின் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார்கள்.

"மிஸ் கலைவாணி....அதோ க்ரீன் ரூம். நாட்டிய உடையை அணிந்து தயாரானதும் சொல்லுங்கள். மிஸ்டர் ராம்குமார், உங்களுக்கு முன் வரிசையில் சீட்போடப் பட்டிருக்கிறது. பொன்விழி, நீ என்னுடன் வா..."

பொன்விழியின் கையைப் பற்றிக்கொண்டு வாசுதேவ் மேடையின் குறுக்கே நடந்தான்.

மேடையில் கரும்பச்சை கார்ப்பெட் விரித்திருந்தது. எங்கிருந்தோ ஒரு நடராஜர் சிலை தருவிக்கப்பட்டு ஒற்றைக் காலைத்தூக்கி நின்றிருந்தது. சிலைக்கு அருகில் சில ஊதுவர்த்திகள் ராணுவ அதிகாரத்திற்குக் கட்டுப் பட்டு ஊசிபோல் புகையைக் கோடிழுத்துக் கொண்டி ருந்தன. மேலேயிருந்து சரம் சரமாக மல்லிகைகள் தொங்கின.

"இங்கே உட்கார் டார்லிங்" ராணுவ மிடுக்கை மீறிய ஓர் இதமான குரலோடு வாசுதேவ் பொன்விழியை மைக்கின் எதிரே உட்கார்த்தினான்.

"தாங்க்யூ அங்க்கிள்."

சபையின் பாலிமர் நாற்காலிகள் முற்றிலும் நிரம்பவில்லை. சுமார் ஆயிரம் பேர்களை ஒரே நேரத்தில் சாப்பிடக்கூடிய அந்த ஆடிட்டோரியத்தில் இப்போது நூற்றுக்கும் குறைவான ஆசாமிகளே இருந்தார்கள். அதிலும் மெஜாரிட்டி ராணுவம்.

முன்வரிசையில் உட்கார்ந்திருந்த காம்ரேட்கள் (அவர்களின் பெயர்கள் கலைவாணியின் நாக்குக்கும் பல்லுக்கும் சவால் விட்டன) தோலுரித்த தக்காளிகள் போல் இருந்தார்கள். கலைவாணி ஆடும்பொழுது சந்தோஷமாய் ஆமோதித்தார்கள். அவ்வப்போது பக்கத்தில் குனிந்து ரகசியமாய் ஏதோ சிரிப்பைப் பரிமாறிக் கொண்டார்கள்.

அவர்களுக்கு இருபுறத்திலும் ராணுவ அதிகாரிகள் உட்கார்ந்திருந்தார்கள். எந்நேரமும் துப்பாக்கிகளைப் பிரயோகிக்கத் தயாராயிருந்தனர். ஓர் ஓரத்தில் ராம்குமார் இருந்தான். கலைவாணியைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

பொன்விழியின் சஞ்சாரக் குரலுக்கு ஈடுகொடுத்து வயலின்களும், புல்லாங்குழலும் போட்டியிட்டன. டில்லி வானொலியிலிருந்து வந்திருந்தனர். பார்வையாளர்கள் நினைத்து நினைத்து கைதட்டி ஆரவாரித்தனர்.

இடது கோடி மூலையில், நாற்காலியில் முற்றிலும் உட்காராமல் பார்த்துக்கொண்டிருந்த ஆசாமி, கூட்டத்தோடு கலக்காமல் சுற்றி நடப்பதைக் கவனமாக மனத்தில் பதித்துக்கொண்டிருந்தான். வெகு குறிப்பாகக் கலைவாணியையும், ராம்குமாரையும் கண்களால் உழுதுகொண்டிருந்தான். வாசுதேவன்மீது அவன் பார்வை படியும் போதெல்லாம் இடது கண்ணுக்குக் கீழே மெல்லிசான துடிப்பு வந்தது. அவன் அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடி அதை மறைத்தது.



கிட்டத்தட்ட எண்பது நிமிடங்கள் நிகழ்ச்சி தொடர்ந்தது. அது முடிந்தவுடன் இரு ரஷ்ய விருந்தாளிகளும் மேடை ஏறினார்கள். காம்ரேட் விலாடிமீர் நேரே வாத்திய கோஷ்டியின் அருகே சென்றார். பொன்விழியைத் தொட்டு எழுப்பி அணைத்துக்கொண்டு ராணுவக் காமிராக்களுக்குப் போஸ் கொடுத்தார். அதிலும் திருப்தி வராதவர் போல தன் கையிலிருந்த வாட்ச்சைக் சுழற்றி பொன்விழியின் மணிக்கட்டில் அணிவித்தார். அவர் ரஷ்ய மொழியில் சொன்னதை மொழி பெயர்ப்பாளர் விளக்கினார். "என்னிடம் அதிகாரம் இருந்தால் இவளுடைய தேன் குரலுக்கு என் ஊரையே எழுதி வைத்துவிடுவேன்."

பொன்விழியின் கண்களில் இரு நீர் முத்துக்கள் திரண்டன.

கறுப்புக்கண்ணாடி ஆசாமி எழுந்து முதலில் வெளியேறினான். பச்சைவர்ணம் அடித்த ஒரு ஜீப்பை அண்டினான். டெலிபோன் போல இருந்த சமாச்சாரத்தை எடுத்துக் குறிப்பிட்ட ஒலிவரிசையை தீட்டிக் கொண்டான்.

"நாட்டிய நிகழ்ச்சி முடிந்து விட்டது." என்றான். ஸ்பீக்கர் கரகரத்துவிட்டுப் பேச ஆரம்பித்தது.

"நாட்டிய நிகழ்ச்சி! முட்டாள்! ரஷ்யர்கள் வந்த நேரம் பார்த்து திடீர் என்று ஒரு கலைவாணி, ஒரு ராம்குமார் சென்னையிலிருந்து வந்தால் அது வெறும் கலைநிகழ்ச்சி இல்லை என்று என் உள்மனம் எச்சரிக்கிறது. நீ ஜீப்பை விட்டு விட்டு ஒரு மோட்டார் சைக்கிளில் அவர்களைத் தொடர்ந்து போ. அவர்கள் விடும் ஒவ்வொரு மூச்சுக்கும் எனக்கு ரிப்போர்ட் தேவை."

தொடர்பு அறுந்தது.

அவன் திரும்பிப் பார்த்தபோது கலைவாணியும் ராம்குமாரும், வாசுதேவும் தனியே ஒரு காரில் ஏறிக் கொள்வது தெரிந்தது. மற்றவர்கள் வேறு வண்டியில் ஏறிக்கொண்டனர்.

கலைவாணி ஏறிக்கொண்ட கார் ஹோட்டல் செல்லும் பாதையிலிருந்து விலகி வேறு திசையில் விரைந்தது.

# 3

வாசுதேவ் காரை மிக அனாயாசமாகச் செலுத்தினான். அந்த இலைப்பச்சை அம்பாஸிடர் டில்லியின் சுறுசுறுப்பான போக்குவரத்தில் விடுவிக்கப்பட்ட அம்பு போல் சீறியது.

டில்லி கார்ப்பரேஷன் பஸ்கள் சடார் சடார் என்று நடுச் சாலையில், அங்கங்கே நின்று பிரயாணிகளைத் திணித்துக்கொள்ள, வாசுதேவ் மிகக் கடைசி வினாடிகளில் அந்த பஸ்களை விட்டு விலகினான்.

எதிரில் வந்த ஒரு ஃபட் ஃபட்டில் அமர்ந்திருந்த ஒரு சல்வார் கம்மீஸ் அணிந்த குண்டான பெண்மணி மோத வருகிறாற்போல் வந்த அம்பாஸிடரைப் பார்த்துவிட்டு கண்களை மூடிக் கொண்டாள். மூச்சை இழுத்துப் பிடித்தாள். வாயைப் பிளந்துப் பெரிதாக்கி, 'அரே பாப்ரே' என்று சொல்வதற்குள் அம்பாஸிடர் மறுபடி அந்த ஃபட் ஃபட்டைத் தவிர்த்து நேர்கோட்டில் விரைய ஆரம்பித்தது.



கலைவாணி காரின் பின் கண்ணாடி வழியாக அந்த சல்வார்கமீஸ் பெண்ணைப் பார்த்தாள். அந்த பெண் ஃபட் ஃபட்டிலிருந்து தலையை மட்டும் நீட்டிக் கத்திக் கொண்டிருந்தாள்.

"நாம் இவ்வளவு வேகமாகப் போக வேண்டுமா மிஸ்டர் வாசுதேவ்?" என்று வினவினாள்.

வாசுதேவ் ரியர்வ்யூ மிர்ரர் வழியாகக் கலைவாணியைப் பார்த்தான்.

"ஸாரி" என்றான். "சில தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் வேகம் தேவைப்படுகிறது" என்றான். ரியர் வ்யூ மிர்ரர் வழியே பின்னால் தெரிந்த சாலையைப் பார்த்தான். அந்த அம்பாஸிடருக்குப் பின்னால் ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. பஸ்ஸுக்கு பின்னால் சில கார்கள் வந்து கொண்டிருந்தன.

வாசுதேவ் "ஓ. கே." என்று ஒருமுறை உரக்கச் சொன்னான். தோள்களை மிக லேசாகக் குலுக்கிக் கொண்டான். காரின் வேகத்தைக் குறைத்தான்.

அவர்கள் இப்போது திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட புது தில்லியிருந்து விலகி இருந்தார்கள். சாந்தினி சௌக்கின் ஒரு சாலையில் நுழைந்திருந்தார்கள்.

சாந்தினி சௌக்கின் சாலையை அங்கங்கே எருமைகள் கடந்தன. பாலகங்காதரத் திலகர் போல் தலைப்பாகை கட்டிய உத்திரப்பிரதேசத்து ஆசாமிகள் கடந்தார்கள். அந்த வீதி மிக நெரிசலாக இருந்தது. அங்கங்கே சிவப்புச் சிவப்பாய் வெற்றிலை எச்சில்கள். பிளாட்ஃபாரங்களில் கான்வாஸ் கூடாரம் அமைத்துச் சப்பாத்தி சப்ஜி, பாவ்பாஜி ஏழைகளுக்காக விற்பனையாகிக் கொண்டிருந்தன. நீண்ட டம்ளர்களின் தண்ணீர்

கலக்காத பாலை அந்த நேரத்திலேயே மக்கள் அருந்தினார்கள். பிஸ்கெட் கலர் கதர்ஜிப்பா அணிந்த பீடாக் கடைகாரர்கள் சிவந்த வாயுடன் சிரித்து வெற்றிலை மடித்தார்கள். தாடிவைத்த முதியவர்கள் பிளாட்ஃபாரத்தில் அமர்ந்து ஹுக்கா பிடித்தார்கள்.

"டில்லி எப்படி இருக்கிறது?" என்று கேட்டான். வாசுதேவ்.

"இன்டரஸ்டிங்" என்று சொல்லிய ராம்குமார், காரை நெருங்கி வந்து பிச்சைகேட்ட முக்காடு அணிந்த பெண்மணிக்கு எட்டணா நாணயம் கொடுத்தான்.

"மிஸ் கலைவாணி உங்களுக்கு இப்போது திருப்தியாய் இருக்குமே!"

"ஏன்?"

"காரின் வேகம் எவ்வளவு குறைந்திருக்கிறது. பார்த்தீர்களா?" கேட்டுக் கொண்டே வாசுதேவ் காரை இடப் பக்கம் திருப்பினான்.

பழைய வீடுகள் அணிவகுத்திருந்த தெரு. சில வீடுகளில் செங்கற்கள் பெயர்ந்திருந்தன. அந்தத் தெரு, மக்கள் வசிக்கும் அந்தஸ்தை இழந்திருந்தது. அந்தத் தெருவின் இறுதியில் இருந்த ஒரு காம்பௌண்டிற்குள் காரைச் செலுத்தி நிறுத்தி, வாசுதேவ் காரைவிட்டு இறங்கினான்.

"ப்ளீஸ் கெட்-டவுன்" என்றான் கலைவாணியைப் பார்த்து.

"நாம் ஹோட்டலுக்குப் போகிறோம் என்று நினைத்தேன்."

"போகத்தான் போகிறோம். இடையில் ஒரு சின்ன வேலை."



"அதற்கு நாங்கள் அவசியமா என்ன?"

"ஆம்" என்றான் வாசுதேவ் சுருக்கமாக.

ராம்குமார் முதலில் காரைவிட்டு இறங்கி கலைவாணிக்காகக் காத்திருந்தான். காலைவாணி ஒரு கணம் தயங்கினாள். காரைவிட்டு இறங்கினாள்.

அந்த வீடு, தில்லியை சுல்தான்கள் ஆட்சி செய்த காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். அங்கங்கே காரை பெயர்ந்து இருந்தது. படுக்கையில் இருந்து இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும், வயோதிகனைப் போல் காட்சி அளித்தது.

அதன் வாசல் படியை மிதித்தான் வாசுதேவ். வாசலுக்குப் பக்கத்தில் இருந்த பொந்திலிருந்து பெருச்சாளி ஒன்று வெளிப்பட்டு அதன் கண்ணாடிக் கண்களால் மூவரையும் பார்த்துவிட்டு மறுபடி பொந்திலேயே புகுந்து கொண்டது.

வாசுதேவ் அந்த வாசலில் மேலிருந்து தொங்கிய ஒரு சங்கிலியைப் பிடித்து இழுக்க உள்ளே எங்கோ ஓர் ஒற்றை வெண்கல நாக்கு அசைந்து, 'கணீர்' என்றது.

கதவைத் திறந்தவள் ஒரு கிழவி. வாசுதேவைப் பார்த்ததும் ஒரு கணம் திகைத்தாள். பின் சுதாரித்துக் கொண்டாள். "உள்ளே வாருங்கள் ஸாப்" என்று ஒதுங்கினாள்.

அந்த வீட்டின் உள்ளே விஸ்தாரமான ஹால் ஒன்று இருந்தது. ஹால் சுவரில் போன நூற்றாண்டில் எடுத்த சில புகைப்படங்கள் பெரிதாக்கப்பட்டு, வெள்ளி முலாம் ஃப்ரேம்களில் அடைக்கப்பட்டு பழுப்பாகச் சிரித்தன.

ஹாலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கையில் சிவப்புச் சாயம் தடவிய இந்திப் புத்தகம் ஒன்றைப் படித்துக்

கொண்டிருந்த அந்த இளைஞன், வாசுதேவைப் பார்த்ததும் புத்தகத்தை வீசினான். எழுந்து இராணுவ சல்யூட் ஒன்றை அடித்தான்.

கலைவாணிக்கு அந்த இளைஞனின் பதட்டம் சிரிப்பை வரவழைத்தது. புன்முறுவலோடு நிறுத்திக் கொண்டாள்.

"ஏதாவது செய்தி உண்டா மஹாவீர்?"

"இல்லை, சார்!"

வாசுதேவ் ராம்குமார் பக்கம் திரும்பினான்.

"இந்த சோபாவில் உட்காருங்கள்" என்றார்.

அந்த ஹாலிலிருந்து புறப்பட்டு உள்ளே எங்கோ சென்ற பாதையில் ஷூ ஒலிக்கச் சென்றான்.

மஹாவீர் என்றழைக்கப்பட்ட அந்த இளைஞன் ராம்குமாரையும், கலைவாணியையும் ஓவியக் கண்காட்சியில் இடம்பெற்ற ஓவியங்களைப் பார்ப்பதுபோல் பார்த்தான்.

''நீங்கள் ராணுவமா?'' என்று வினவினான் ராம்குமார்.

"ஆம்"

"இது யாருடைய வீடு? ராணுவத்திற்குச் சொந்தமானதா?"

"ஸாரி, தெரியாது."

"நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?

"உட்கார்ந்து கதை புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறேன். மேலும் நீங்கள் ஏதாவது கேள்வி கேட்பதாய்



இருந்தால் தயவுசெய்து அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். உங்களுடைய எல்லாக் கேள்விகளுக்கும் என் ஒரே பதில் ஸாரி" என்றான்.

ராம்குமார் சிறிது மௌனம் சாதித்துவிட்டு, கலைவாணியைப் பார்த்தான். கலைவாணி ராம்குமாரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் காட்டினாள்.

அந்த இளைஞன் நின்ற நிலையில் மறுபடி புத்தகத்தில் ஆழ்ந்துவிட, ராம்குமார் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள், வாசுதேவ் வீட்டின் உட்புறத்திலிருந்து வெளிப்பட்டான். அவன் கையில் ஒரு பெட்டி இருந்தது.

"மஹாவீர், அவுட்" என்றான். மஹாவீர் புத்தகத்துடன் ஹாலைவிட்டு வெளியேறினான். வாசுதேவ் எதிரே இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட் பாக்கெட்டை எடுத்தான். ஒரு சிகரெட்டை உருவி உதடுகளில் பொருத்திக்கொண்டு, லைட்டரால் பற்றவைத்தான்.

"யூ ஸ்மோக்?" என்றான் புகையை வெளியில் ரயில் நீராவிபோல் விட்டுக்கொண்டு.

"நோ, தாங்க்யூ" என்றான் ராம்குமார்.

"ராம்-நான் உங்களை ராம் என்று கூப்பிடுவது தப்பில்லையே?

"நோ. நோ. தாராளமாக நீங்கள் ராம் என்று சொல்லலாம் வாசு."

"நாட்டி. ராம். இந்த விஷயம் உங்களுக்கு மர்மமாகப் படலாம். ஒரு மிலிட்டிரி ஆபீஸர், டான்ஸ் ப்ரோக்ராம் முடிந்தவுடன் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு, சாந்தினி சௌக்கின் ஓர்

அழுக்கான சந்தின், அழுக்கான வீட்டில் கொண்டுவந்து சேர்த்திருப்பது வினோதமாகப்படலாம். ஆனால் அப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. உங்களை நான் இங்கே கூட்டிவரக் காரணம் இந்தப் பெட்டி."

ராம்குமார் அந்தப் பெட்டியை உற்று நோக்கினான். கலைவாணியின் நெற்றியில் கேள்விக்குறிகள்.

"இது ஒரு முக்கியமான பெட்டி. இதற்கு என்னிடம் சாவி கிடையாது. இதை என்னால் திறக்க முடியாது. இதற்குள் என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்டால் நானும் திருப்பி அதே கேள்வியை உங்களிடம் கேட்பேன். பெட்டிக்குள் என்ன இருக்கிறதென்று எனக்கும் தெரியாது. இந்தப் பெட்டியை நீங்கள் மெட்றாஸில் இருக்கும் ஒரு மிலிட்டிரி ஆபீஸரிடம் சேர்க்கவேண்டும். எனக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை, பெட்டியை மெட்றாஸில் சேர்ப்பது. நான் உங்கள் இருவரையும் பயன்படுத்த நினைக்கிறேன். தப்பா?"

"இல்லை" என்றான் ராம்குமார்.

"இல்லை" என்றாள் கலைவாணி.

"தாங்க்யூ. இந்தப் பெட்டியை நானே எடுத்துக் கொண்டு மெட்றாஸுக்குப் பறந்திருக்கலாம். அல்லது உங்களை விமானமேற்றி அனுப்பலாம். அப்படி எல்லாம் செய்தால் இந்தப் பெட்டிக்காக அலையும் எதிரிகள்உஷாராகிவிடுவார்கள். பெட்டி மெட்றாஸ் போய்ச் சேராது. எதிரிகளின் கையில்தான் சிக்கும். எனவேதான் நான் இந்த மாதிரியான ஜேம்ஸ்பாண்ட் வழிகளைக் கையாள வேண்டியிருக்கிறது."

"பெட்டியில் அவ்வளவு முக்கியமான விஷயமா இருக்கிறது?"



"அப்படித்தான் இருக்க வேண்டும். போகும்போது இந்தப் பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுத்கிறாற்போல நடந்துகொள்ளாதீர்கள். இயல்பாக இருங்கள். உங்களுடைய மற்ற லக்கேஜ்களுடன் இதையும் ஒன்றாக நினைத்துக் கொள்ளுங்கள். இதோ இது கர்னல் ஜான் செம்பருத்தி. காதோரம் லேசாக நரையிருந்தாலும் மனதில் இளமையானவர்." வாசுதேவ் அந்த கர்னலின் படத்தில் விரல்முட்டியால் லேசாக மோதி 'ஹவ்டுயூடு கர்னல்?" என்றான். ராம்குமாரிடம் படத்தை நீட்டினான்.

"இவரே நேராக ஸ்டேஷனுக்கு வருவார். அப்படி வரவில்லையென்றால் பெட்டியை வேறு யாரிடமும் கொடுக்காமல் நீங்களே அவர் தங்கியிருக்கும் முகவரிக்குச் சென்று அவரைப் பார்த்து இந்தப் பெட்டியைக் கொடுக்க வேண்டும். ஓ. கே."

"டன்" என்று கட்டை விரலை உயர்த்தினான் ராம்குமார். "அவருடைய முகவரி?"

"ஹோட்டல் விக்டோரியா. ரூம் நெம்பர் 100. முகவரியை எழுதிக்கொள்ள வேண்டாம். நினைவில் வைத்துக் கொள்ள சுலபமாக மகாராணி பெயர் ஹோட்டல் அவசரப்போலீஸ் நம்பரில் அறை எண். ஓ. கே?"

புறப்படுவதற்குள் வாசுதேவ் இன்னும் எத்தனை முறை 'ஓ. கே.' சொல்லப்போகிறார் என்பதை எண்ண வேண்டும் என்று நினைத்துக் கொண்டு ராம்குமார் "ஓ. கே." என்றான்.

வாசுதேவ் எழுந்து கொண்டான்.

"லெட்ஸ் கோ" என்றான்.

அவர்களுடைய அம்பாஸிடர் தூக்கத்திலிருந்து எழுந்து பெட்ரோல் புகையை விடுவித்துக்கொண்டு அந்த

வீட்டுக் காம்பௌண்டிலிருந்து விலகிப்போன ஐந்தாவது நிமிஷம் ஜிப்பாவும் பைஜாமாவும் அணிந்த ஒரு கறுப்புக் கண்ணாடி ஆசாமி, சுற்றிலும் பார்த்துக்கொண்டே வாசல்கதவுக்கு மேல் தொங்கிய சங்கிலியை இழுத்தான்.

இவனைப் போன அத்தியாயத்தில் நீங்கள் சந்தித்திருக்கிறீர்கள். நாட்டிய நிகழ்ச்சியின்போது இடது கோடியின் மூலையில் அமர்ந்திருந்தவன். ஜீப்பில் இருந்த போன் போன்ற கருவியால் யாரையோ தொடர்பு கொண்டு பேசியவன். இந்த ஆசாமி இங்கே வந்திருப்பதை வாசுதேவ் பார்த்தால், தயங்காமல் உடன் சுடுவான். விஷயம் அப்படிப்பட்ட விஷயம். என்ன விஷயம்? பொறுங்கள் இந்தக் கதை எல்லாவற்றையும் சொல்லத் தான் போகிறது. நமதுநாட்டில் இப்படியெல்லாம் நடக்கிறதா என்ன? என்று உங்களைக் கேள்விகேட்க வைக்கப் போகிறது. இப்போது நம் ஆசாமி.

கதவு திறந்து, இம்முறை கதைப்புத்தக மஹாவீர் எட்டிப் பார்த்தான். உடன் ஜிப்பா ஆசாமியை வீட்டுக்குள் இழுத்து கதவைச் சாத்தினான்.

"என்ன நடந்தது?" என்றான் ஜிப்பா.

"அந்தப் பெருச்சாளி வாசுதேவ் மதறாஸியிடம் ஒரு பெட்டியைக் கொடுத்தான். நான் கதவு ஓட்டையிலிருந்து பார்த்தேன். அவர்கள் புறப்பட்டபோது அந்தப் பெட்டியும் அவர்களுடன் காரில் போயிருக்கிறது."

"பெட்டியைத் திறந்தானா?"

"இல்லை" என்றான் மஹாவீர்.

வந்தவன் மஹாவீரின் கன்னத்தில் எதிர்பாராத ஒரு கணத்தில் தாக்கினான்.



"பொய் கூடாது."

"எனக்கு ஒரே அம்மா. அவளுக்கு ஒரே கணவன் அவர்கள் மீது ஆணையாகச் சொல்கிறேன்." என்று மஹாவீர் உதட்டோரத்தில் வெளிப்பட்ட ரத்தத்தைப் புறங்கையால் துடைத்தான்.

வந்தவன் திடீரென்று சிரித்தான்.

"ஸாரி. உனது சேவையைப் பாராட்டுகிறேன். மேலிடத்தில் சொல்கிறேன். வாசுதேவ், உனக்கு என்ன கட்டளை இட்டிருக்கிறான்?"

"இந்த இடத்தை உடனே காலிசெய்துவிட்டு மறுபடி ரெகுலர் டூட்டியில் ஜாயின் செய்யும்படி."

கிராண்ட்- ட்ரங்க் டெல்லியைத் துறப்பதற்குத் தயாராக இருந்தது. வாசுதேவ் ஜன்னலில் கன்னம் பதித்த பொன்விழியை ஒருமுறை முத்தமிட்டான். "நைஸ் கேர்ள்," என்றான். "எனக்குக் கல்யாணமானால், என் மனைவி ஒரு பெண் குழந்தையைத் தான் முதலில் பெற்றுக்கொடுக்க வேண்டியிருக்கும். அவளுக்கு உன் பெயரைத்தான் வைக்கப் போகிறேன்" என்றான். பொன்விழி அவன் இருந்த திசையை உத்தேசித்துப் புன்னகை வீசினாள்.

"ஹாவ் எ நைஸ் ஜர்னி" என்றான். ராம்குமாரைப் பார்த்து, "யுவர் செலக்ஷன் ஈஸ் ஃபென்டாஸ்டிக் யெங் மேன்" என்றான். ராம்குமாரைப் பார்த்து, கலைவாணி வெட்கப்பட்டாள்.

"நீங்கள் மதியம் கொடுத்த அருமையான விருந்துக்கு நன்றி" என்றாள்.

"பொய், விருந்தில் சாம்பார் மதறாஸ் சாம்பார் போல் இல்லை. ரசம் தஞ்சாவூர் ரசம்போல் இல்லை எனிவே, எங்கள் அழைப்பை ஏற்று வந்ததற்கு நன்றி."

ரயில் ஒருமுறை குலுங்கிவிட்டு மெல்ல நகரத் தொடங்கியது.

வாசுதேவ் கையசைத்துவிட்டு ஒரு சிகரெட் எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு மிக சுறுசுறுப்பாக ஸ்டேஷனை விட்டு வெளிப்பட்டான். கார் வெள்ளத்தி லிருந்து தனது காரை மீட்டு, போக்குவரத்தில் கலந்தான்.

காரிலிருந்த டேப்ரிகார்டரிலிருந்து வழிந்த சோம்ப லான ஹிந்துஸ்தானியை ரசித்தான். சுறுசுறுப்பான கவாலிக்கு ஸ்டியரிங்கில் தாளம் போட்டான்.

வாசுதேவ் தன்னுடைய ராணுவ வீட்டுக் காம் பவுண்டை நெருங்கியபோது அவனுடைய வீடு இருந்த தெருவில் விளக்குகள் உயிரிழந்திருந்தன. வாசுதேவ் காரை விட்டிறங்கிக் காம்பவுண்ட் கேட்டைத் திறந்தான். வீட்டைச் சுற்றிக்கொண்டு சென்ற பாதையில் காரைச் செலுத்திப் பின்னால் திறந்திருந்த காரேஜின் உள்ளே காரை நுழைத்து விளக்குகளை அணைத்தான்.

காரேஜில் 'ச்' என்ற ஒலியுடன் சுவிட்ச் தட்டப்பட்டு ஒரு பிரகாச விளக்கு எரியத்தொடங்க, வாசுதேவ் திடுக்கிட்டுத் திரும்பினான்.

குண்டுகளை வெளிப்படுத்த தயார் நிலையில் இருந்த துப்பாக்கிகளுடன் அவர்கள் நின்றுகொண்டிருந் தார்கள். துப்பாக்கிகள் அவனுக்குக் குறி வைத்து நிமிர்ந்தன.



# 4

வாசுதேவ் ஏறக்குறைய அவர்கள் வருகையை எதிர் பார்த்திருந்தவனைப்போல் நிதானமாகக் காரை விட்டு இறங்கினான்.

"நான் என்ன செய்ய வேண்டும் ஆபீஸர்?" என்று வினவினான்.

"கைகளை மேலே தூக்கு."

வாசுதேவ் கைகளைத் தூக்கினான்.

"இந்தப் பக்கம் வா."

வாசுதேவ் மிகச் சீராக நடந்து காரேஜின் மூலையில் போய் நின்றான்.

"குரு செக் ஹிம்."

குரு என்றழைக்கப்பட்டவன் துப்பாக்கியுடன் வாசு தேவை நெருங்கினான். வாசுதேவ் பாக்கெட்டுகளில் தன் கையைச் செலுத்திச் சோதனை போட்டான். ஆர்மி ரிவால்வரை எடுத்தான்.

"வேறு ஒன்றுமில்லை", என்றான். வாசுதேவிட மிருந்து விலகிக் கொண்டான்.

வாசுதேவ் மெல்லத் திரும்பிப் பின்னால் பார்த்தான்.

"வாட் இஸ் திஸ் ஆபீசர்? நான் யார் என்று தெரியாது உனக்கு? இது என்ன சின்னப் பிள்ளைகள் ஆட்டம்போல்?"

அந்த ஆபீசர் இருட்டுப் பகுதியிலிருந்து வெளிப் பட்டான். வாசுதேவை மிக வேகமாக நெருங்கி அவன்

கன்னத்தில் பளீர் என்று அறைந்தான்.

"விஜய்தாக்கர், நீங்களா?" என்றான் வாசுதேவ் வியப்பான குரலில்.

"பாசாங்குகள் வேண்டாம் வாசுதேவ்," என்றான் விஜய்தாக்கர் என்று அழைக்கப்பட்டவன். கார் ஷெட்டின் கூரையைத் தொடுபவனைப்போல் உயரமாக இருந்தான். வரிசையான பற்களுடன், சின்ன மேவாயுடன் வசீகரமாக இருந்தான். அவனுடைய கண்களில் பாப்பாக்கள் நரித்தனமாக அலைந்தன.

"ஒரு பொறுப்புள்ள ராணுவ அதிகாரி நடந்து கொள்ளும் முறையாகத் தெரியவில்லை, விஜய்தாக்கர்." என்றான் வாசுதேவ்.

"இருக்கலாம் பின்னால் பார்த்தாயா? மூன்று பேர். இருநூறடி தூரத்தில் இருந்தாலும் குறி தவறாமல் சுடுபவர்கள் என்று நீதான் அவர்களுடைய ஃபைலில் எழுதியிருக்கிறாய். இப்போது நீ அவர்களிடமிருந்து பத்தடி தூரத்தில்கூட இல்லை."

"மிலிட்டரி கோர்ட் உன்னைச் சும்மா விடப்போவதில்லை விஜய்தாக்கர்," என்றான் வாசுதேவ் சீறும் குரலில்.

"ஒப்புக் கொள்கிறேன். ஆனால் விளையாட்டில் இப்போது என் கைதான் ஓங்கியிருக்கிறது. செக் அண்ட் மேட். எனக்கு வேண்டியதெல்லாம் சில பதில்கள் பொய் கலக்காத பதில்கள்."

"நான் சொல்லப்போவதில்லை."

"நான் விடப்போவதில்லை. வாசுதேவ்! உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். உன் ரத்தத்தில் ஹிமொக்ளோபினைவிட நாட்டுப் பற்றுதான் அதிகமாக இருக்கிறது.



அதுவும் எனக்குத் தெரியும். சில நாட்களுக்கு முன் நடந்த எல்லைப் போரிலேயே உயிர் துறந்து தியாகி ஆகியிருக்க வேண்டியவன். நீ தப்பித்துவிட்டாய். இனிமேலும் நீ உயிரோடு இருப்பது மிகமிகத் தவறு. மீரட் செல்லும் பாதையில் இன்று அதிகாலையில் ஜீப்பில் சென்ற இரண்டு மிலிட்டரி ஆபீசர்கள் ஒரு மோசமான விபத்தில் உயிரிழந்திருக்கிறார்கள்."

"விபத்தை நாம் எதிர்நோக்க முடியாது."

"விபத்தை ஏற்படுத்தியவன் நீ! நீ ஓட்டி வந்த லாரி இடித்து அந்த ஜீப் கவிழ்ந்திருக்கிறது. அந்தத் தகவல் எனக்குக் கிடைத்த பிறகுதான் எனக்கு உன்மீது சந்தேகம் வந்தது."

"என்ன சந்தேகம்?"

"அது அனாவசியம். கலைவாணி யார், ராம்குமார் யார்?"

"கலைவாணிக்கு ஒரு டான்ஸர். ராம்குமார் அவளுடைய எதிர்காலக் கணவன்."

"நான் லாவிபாப் சாப்பிடுகிறவன் இல்லை. வாசுதேவ்."

"நான் சொன்னதுத்தான் உண்மை!"

"ஓ. கே. சாந்தினிசௌக்கில் ஒரு வீட்டின் கலைவாணியிடமும், ராம்குமாரிடமும் நீ ஒரு பெட்டியைக் கொடுத்தாயே, அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?"

"நான் எந்தப் பெட்டியையும் கொடுக்கவில்லை."

விஜய்தாக்கர் திடீரென்று தன் வலது முழங்காலை மேல்நோக்கி உயர்த்தி வாசுதேவை மோதினான்.

வாசுதேவ் முகத்தில் வேதனையை வெளிப்படுத்தும் சில உணர்ச்சிகள் தோன்றின.

"இப்போது சொல். அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?"

"எனக்குத் தெரியாது." என்று சொல்லி முடிப்பதற்குள் வாசுதேவ் மறுபடி அடிபட்டான். இந்த முறை விஜய்தாக்கரின் ஷூ கால் ஒன்று வாசுதேவின் அடி வயிற்றில் புதைந்து விலக, வாசுதேவ் அந்த அடியின் அதிர்ச்சி தாங்காமல் பின்னால் நான்கடி நகர்ந்து, காரேஜின் நீட்டிக் கொண்டிருந்த ஓர் இரும்பு வளையத்தில் பின் மண்டையை மோதிக் கொள்ள, வாசுதேவின் அடிபட்ட பாகத்திலிருந்து, அவனுடைய நாட்டுபற்று மிகுந்த ரத்தம் எட்டிப் பார்த்தது.

வாசுதேவ் நின்ற நிலையிலேயே விஜய்தாக்கரை வெறித்தான். அவனுடைய காலடியில் ஒரு ஸ்பானர் இருந்தது. அது வாசுதேவின் காலில் இடறியது.

"அந்தப் பெட்டியின் சாவி எங்கே இருக்கிறது. வாசுதேவ்?" என்றான் விஜய்தாக்கர் விடாமல். அகப்பட்ட எலியைப் பார்ப்பதுபோல் பார்த்தான்.

வாசுதேவ் மிகத்திடீரென்று குனிந்தான். நடந்ததை எதிரிகள் உணருமுன் அந்த ஸ்பானரைப் பற்றினான். உட்கார்ந்த நிலையில் ஒரு தவளைப் பாய்ச்சல் பாய்ந்தான். விஜய்தாக்கரின் காலில் அந்த ஸ்பானரை ஒரு லாரிச் சக்தியுடன் செலுத்தினான்.

விஜயத்தாக்கர் மடங்கிக் கீழே சரிய வாசுதேவ் அதற்குள் இருமுறை ஸ்பானரைப் பிரயோகித்தான்.

விஜய்தாக்கர் கீழ்த்தரமான ஓர் இந்திச் சொல்லை உபயோகித்தான். வாசுதேவின் கைவீச்சு எல்லையிலிருந்து விலகி உருண்டான்.



"டோண்ட் ஷூட் ஹிம்," என்றான் அடங்கிய கரகப்பான குரலில்.

வாசுதேவ் எழுந்து நின்று அவர்கள் நால்வரையும் எதிர்நோக்க, நால்வரும் அறையில் சிக்கிக் கொண்ட பூனைகளைப்போல் பார்த்தார்கள். வாசுதேவை மெல்ல நெருங்கினார்கள்.

வாசுதேவ் ஆரோக்கியமான எழுபது கிலோ எடையுள்ள ஆசாமி. அவர்கள் வாசுதேவைவிட ஆரோக்கியமாக இருந்தார்கள். வாசுதேவின் காட்டுத்தனமான ஸ்பானர் வீச்சுக்கு இரண்டு பேர் இலக்கான பின்னும், இரண்டு பேர் மீதமிருந்தார்கள்.

அந்த காரேஜ் மிகச் சிறிய காரேஜ். கார் சாப்பிட்டது போக மீதி இருந்த இடத்தில் வாசுதேவ் மீதியிருந்த இருவரிடத்தில் மிகச் சுலபமாக அடிபட்டான். அவர்கள் துப்பாக்கியின் பின் புறத்தால் அடித்தார்கள். வாசுதேவ் நிறைய ரத்தத்தை இழக்கத் தொடங்கினான். சுய நினைவை இழக்கத்தொடங்கினான். எனக்கு கல்யாணமானால் பிறக்கப்போகும் பெண் குழந்தைக்குப் பொன்விழி என்று பெயர் வைக்கவேண்டும் என்று பைத்தியக்காரத்தனமாக நினைத்துக் கொண்டான்.

அவனுடைய ஸ்பானர் பிடித்த கை ஒரு முறை மேலோங்கி மிக மெதுவாகச் சரிந்தது. அவனுடைய ரத்தச் சிவப்பு வாய் 'ஜெய்ஹிந்த்'. என்று ஒருமுறை முனகியது. சுவரில் தேய்த்துக் கொண்டே மெல்லமெல்லச் சரிந்தான்.

"இந்த உயிர் நாட்டுக்காகச் செலவழிக்கப்படுகிறது." என்ற ஒரு வாக்கியத்தை உணர்வு இழக்குமுன் கடைசியாக அமைத்துப் பார்த்துத் திருப்தியுடன் புன்னகைத்தான். விஜய்தாக்கர் வெறுப்புடன், பேசாமல் வாயை மூடிவிட்ட வாசுதேவை பார்த்தான். வாசுதேவின் முகத்தில் இருந்த

புன்னகை அவனுடைய கோபத்தை மேலும் கிளறிவிட, வாசுதேவை ஓர் உதை விட்டான்.

தலையை நிமிர்த்தி அண்ணாந்து பார்த்தான். காரேஜில் குறுக்கிலும் நெடுக்கிலும் இரும்புக் கர்டர்கள் சென்றன.

அவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து மிக வலுவான நைலான் கயிறு ஒன்றை எடுத்தான். அந்தக் கயிற்றில் ஒரு சுருக்குமுடி போட்டு வாசுதேவின் கழுத்தில் நுழைந்தான். ஓசையின்றிக் கார்மேல் ஏறி அந்த நைலான் கயிறைக் கர்டரில் மாட்டி மெல்லமெல்லக் கீழே இழக்க, வாசுதேவ் அப்படியே அந்தரத்தில் உயர்ந்தான்.

"குரு, நீ வாசுதேவின் வீட்டுக்குள் நுழைந்து ஏதாவது சில விலையுயர்ந்த பொருட்களை எடுத்துவா. பணம் இருந்தால் மிக நல்லது. போலீஸ் இதைத் திருட்டினால் ஏற்பட்ட விளைவு என்று நினைக்க வேண்டும்."

"அந்தப் பெட்டி விஜய்?"

"அதற்கு ஏற்கெனவே வேறு ஏற்பாடு செய்து விட்டேன்," என்றான் விஜய்தாக்கர்.

கிராண்ட்-ட்ரங்க் எக்ஸ்பிரஸ் படுவேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

ராம்குமார் பெட்டியில் எரிந்துகொண்டிருந்த நீல விளக்கைப் பார்த்தான். நீல விளக்கின் பிரதிபலிப்பில் தெரிந்த கலைவாணியைப் பார்த்தான். கலைவாணி மிகச் சீராக மூச்சு விட்டுக் கொண்டு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். கீழே இரண்டு படுக்கைகளில் பொன் விழியும் நட்டுவாங்கமும் சுருண்டிருந்தார்கள்.

ரயிலின் தடக்தடக்கை மீறி நட்டுவனார் சிவப்பிர காசத்தின் குறட்டை கேட்டுக்கொண்டிருந்தது. ராம்குமார்



தன்னுடைய ஹிப்பாக்கெட்டில் கையை விட்டுக் கர்னலின் புகைப்படத்தை எடுத்து ஒரு முறை பார்த்தான். மறுபடி ஹிப்பாக்கெட்டில் வைத்தான். பெட்டியின் கதவு மூடப் பட்டிருக்கிறதா என்று பார்த்தான்.

எல்லா ஓசைகளையும் மீறி அந்த முதல் வகுப்புப் பெட்டியில் ஒரு வினோத அமைதி கலந்திருந்தது. அந்த அமைதி அவனுக்குள் அச்சத்தைக் கொடுத்தது. என்னவோ நடக்கப்போகிறது, என்னவோ நடக்கப் போகிறது!

அதே நேரத்தில் பெட்டிக்கு வெளியில் இரண்டு ஜவான்கள் தூங்காமல் விழித்திருந்தார்கள். முதல் வகுப்பு அறையில் இரண்டு பக்கங்களிலிருந்து சுமார் இருபதடி தூரம் விலகி அவர்கள் நின்றிருந்தார்கள். கதவருகே நின்று கொண்டு ரயிலுடன் சரளைக் கற்கள் மேல் ஓடிவந்த சதுர வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வாசுதேவ் அவர்களை அந்த இடங்களைவிட்டு அசையக்கூடாதென்று உத்தரவிட்டிருந்தான். அந்த ஜவான்களில் ஒருவனை ஒரு பயணி நெருங்கினான். ஜவானுடைய தோளில் தட்டினான். ஜவான் திரும்பி மேலே அமர்ந்த கொசுவைப் பார்ப்பதுபோல அந்தப் பயணியைப் பார்த்தான். பார்வையில் வெகு சூடான 'என்ன?' இருந்தது.

"நீங்கள் போலீசா?"

கேட்டவன் தொங்கு மீசை வைத்துத் தலைப்பாகைக் கட்டியிருந்தான்.

"உனக்கு என்னவேண்டும்?" என்றான் ஜவான். குரலில் உஷார் கூடியிருந்தது.

"யாரோ ஓர் ஆசாமி ரயில் மீது ஏறியிருக்கிறான்," என்றான் வந்த ஆசாமி கிசுகிசுப்பாக.

"என்னது!" என்று மிரண்டான் ஜவான்.

"ஆம் சார். நான் இருகண்களால் பார்த்தேன். ரயிலின் கூரையில் ஏறிப் படுத்திருக்கிறான். அவனைப் பார்த்தால் நல்ல காரியங்களைச் செய்பவன் போலத் தோன்றவில்லை."

ஜவான் புகைத்துக்கொண்டிருந்த சிகரெட்டை வீசியெறிந்தான். இடுப்பில் செருகியிருந்த கத்தியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

"நீ எப்படிப் பார்த்தாய்?" என்றான் லேசான சந்தேகத்தோடு.

"நான் தூக்கத்திலிருந்து இப்போதுதான் விழித்தேன். என் தலைக்கு நேர் மேலே என்னவோ சத்தம் கேட்டது. ஊரெல்லாம் கொள்ளைக்காரர்கள் கொசுக்களைவிட அதிகமாகப் பெருகியிருக்கிறார்கள். எனவே நான் எழுந்து போய் வாசல் கதவைத் திறந்து அண்ணாந்து மேலே பார்த்தேன்."

அந்தப் பயணியின் முகம் பயந்து வெளுத்திருந்தது. வார்த்தைகளைத்திக்கித் திணறி வெளியில் விட்டான்.

"எந்தக் கதவு?" என்றான் ஜவான். போர்க்களத்திற்குப் புறப்படுபவனைப்போல.

"இந்தப் பக்கம் சார்" என்று குறட்டைகளுக்கு நடுவில் பெட்டியின் அடுத்த மூலைக்கு அழைத்துச் சென்று கதவைத் திறந்தான் தலைப்பாகை ஆசாமி.

ஜவான் இரண்டு கைகளாலும் கம்பிகளைப் பற்றிக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான்.

இருட்டில் நிறைய நட்சத்திரங்கள் மினுக்கின.

"எங்கே?"



"பெட்டியின் மேலே சார். கவிழ்ந்து படுத்திருந்தான்."

ஜவான் உடலை இன்னும் கொஞ்சம் என்று தீர்மானித்து, சரிந்து அண்ணாந்தான்.

தலைப்பாகை ஆசாமி சுற்றிலும் ஒருமுறை பார்த்து விட்டு, சட்டென்று ஜவானை மிக வேகமாக உதைக்க, ஜவான் அந்த உதையை முழுவதுமாகப் பெற்றுக் கொண்டு கம்பியைப் பற்றியிருந்த கைகளை விட்டு, ஒரே ஒரு கணம் அந்தரத்தில் மிதந்து, அலறக் கூட முடியாமல் சரளைக் கற்கள் மீது விழுந்து புரள எக்ஸ்பிரஸ் அதை அறியாதது போல் பயணத்தைத் தொடர்ந்தது.

அவனைத் தள்ளிய ஆசாமி, தலைப்பாகையை எடுத்து விட்டு, ஒருமுறை பயச் சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு ரயிலின் கதவைச் சாத்தினான்.

ஏற்கனவே ஜவான் இருந்த இடத்தை நோக்கி வந்து எதிர்பக்கம் பார்த்தான். அந்தப் பக்கம் இருந்தவன் தலைப்பாகை ஆசாமியைப் பார்த்ததும் தன்னுடைய கட்டை விரலை உயர்த்திச் சிரித்தான். இரண்டாவது ஜவானை இப்போது காணவில்லை.

படுத்துக்கொண்டிருந்த டிக்கெட் பரிசோதகரை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு குறுகலான பாதையை மிக விரைவாகக் கடந்து வந்தான்.

"உன் நண்பன் எங்கே?" என்று கேட்டான் தலைப்பாகை ஆசாமி.

"சரளைக்கற்களின் மேல்."

"என் நண்பனும் அதேதான். இப்போது என்ன?"

"அந்தப் பெட்டியை நோக்கி நாம் மூவப்பண்ணு கிறோம்."

"கொஞ்சம் பொறுத்திருந்து செயல்படலாம்." என்றான் தலைப்பாகை ஆசாமி. "ரயிலில் வேறு யாரும் விழித்துவிடக் கூடாது."

அவர்களின் வரவை அறியாமல் பெட்டியில் மேல் பர்த்தில் படுத்திருந்த ராம்குமார் விளக்கைப் பொருத்தாமல் கீழே இறங்கினான்.

## 5

ராம்குமார் மேலிருந்து கீழே இறங்கியதும், "ராம்" என்று சிணுங்கலாகக் குரல் கேட்டது.

"தூங்கவில்லையா கலைவாணி"

"தூங்கிக்கொண்டிருந்தேன். திடீரென்று விழிப்புக் கொடுத்து விட்டது. பார்த்தால் நீங்கள் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு கணம் நான் பயந்தே போய் விட்டேன்."

"சரி அமைதியாய் தூங்கு."

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"இந்த நேரத்தில் நான் எங்கே போவேன் என்று நீ நினைக்கிறாயோ, அங்கே."

"நானும் வருவேன். எனக்கு ஒரு கை கொடுங்கள்."

ராம்குமார் மெல்லிய விரல்களைப் பற்றினான். அவள் இறங்குவதற்கு உதவினான். ராம்குமார் கதவைத் திறந்தான். வெளியே எட்டிப் பார்த்தான்.



விளக்கு எரிந்துகொண்டிருக்க, அந்தக் குறுகிய காரிடார் அனாதையாக இருந்தது. தூரத்தில் தூங்கிக் கொண்டிருந்த டி. டி. ஆர். பார்வையில் பட்டார்.

''வா'' என்று கதவை அகலமாகத் திறந்தான். ராம்குமார்.

கலைவாணி வெளியே வந்தாள். வெளிச்சத்தால் கூசிய கண்களை குறுக்கிக்கொண்டு பார்த்தாள். ஜன்னல் வழியாக வந்த காற்று அவள் தலை முடியைக் கலைத்தது. கலைவாணி பறந்த புடவையையும், கலைந்த தலையையும் கைகளால் அழுத்திவிட்டுக் கொண்டாள்.

"நாம் எப்போது சென்னை போய்ச் சேருவோம்?"

"நாளைக் காலை."

"இப்போது எந்த ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்?"

"நான் என்ன தினமுமா இந்த ரயிலில் வருகிறேன்? உனக்குத் தெரிந்ததுதான் எனக்கும் தெரியும். வந்த வேலையை முடித்துக்கொண்டு சிறிது நேரமாவது தூங்கலாம்" என்றான். பாத்ரூமை நோக்கி நடந்தான்.

எதிரெதிர் பாத்ரூம்களில் இருந்த ஆபத்தை அறியாமல் கலைவாணி முதலில் பாத்ரூமில் நுழைய ஒரு கை உடன் அவளை உள்ளே இழுத்தது. கலைவாணி அலறுவதற்குள் அவளுடையவாயைப் பொத்தியது. பாத்ரூம் கதவைச் சாத்தி 'கடக்' என்று தாள் போட்டது.

ராம்குமார் எதிர் பாத்ரூமில் நுழைய நேராக ஒரு கத்தியின் பளபளப்பில் விழித்தான்.

"கம் - இன்" என்று குரல் கட்டளையிட்டு அவனை உள்ளே இழுத்தது. கதவைத் தடால் என்று சாத்தியது.

இரண்டு பேருக்கு அது மிகவும் சிறிய அறை. ரயிலின் சீரான அசைவில், திகைத்துப்போன ராம்குமார் எதிரியைப் பார்த்தான்.

"பார்த்தால் நல்ல பையனைப் போல் இருக்கிறாய்" என்றான். கத்தியை மேலும் கிழுமாக ஆட்டினான்.

"மூச்சு விடக் கூடாது. விட்டால் தொலைந்து போவாய்."

"யார் நீ?" என்றான் ராம்குமார், திமிறாமல்.

"உன் மச்சான். இருக்கிற நேரம் குறைவு. எதிர் பாத்ரூமில் எனக்கு இன்னொரு நண்பன் இருக்கிறான். இந்நேரம் உன் கலைவாணி அவன் பிடியில் சிக்கியிருப் பாள். ஏதாவது குரங்கு வேலை செய்தாயோ - அவ்வளவு தான். உன்னைவிட உன் காதலிதான் முதலில் செத்துப் போவாள்."

"என்ன வேண்டும் உனக்கு?"

"அந்தப் பெட்டி."

"எந்தப் பெட்டி?"

"ஆ காட்டு! வாயில் விரல் வைக்கிறேன். கடிக்கத் தெரிகிறதா பார்க்கலாம். ஒன்றும் தெரியாத பாப்பா நீ. எந்தப் பெட்டியாம். எந்தப்பெட்டி? சாந்தினி சௌக் வீட்டில் வாசுதேவ் உன்னிடம் கொடுத்தானே - அந்தப் பெட்டி."

ராம்குமார் என்ன செய்யலாம் என்று மின்னல் மின்னும் நேரத்தில் யோசித்தான். எதிர் பாத்ரூமில் கலைவாணி. இன்னொரு எதிரி. கலைவாணி வேண்டும். அவளுக்கு ஒன்றும் நேரக்கூடாது.

ராம்குமார் லேசாகச் சிரித்தான்.



"உன்னுடைய கெட்ட நேரம். பெட்டியை ஏற் கெனவே நான் பலார்ஷா ஸ்டேஷனில் ஒரு நண்பரிடம் கொடுத்துவிட்டேன். அதற்காக நீ இவ்வளவு சிரமப் பட்டுக்கொண்டு வந்திருக்கவேண்டாம்."

கத்தி பிடித்திருந்த எதிரியின் முகம் மாறியது.

"பொய் சொல்கிறாய்" என்று ராம்குமாரின் தாடை யில் இடக்கையால் பலங்கொண்ட மட்டும் அவன் அறைய, அவன் வலக் கை கீழ்நோக்கித் தாழ்ந்தது.

ராம்குமாருக்கு எதிரியின் அந்த சலனம் போதுமான தாக இருந்தது. சட்டென்று ஒரு லோயர் நாக்-அவுட்டை எதிரியின் மீது பிரயோகித்தான். ராம்குமாரின் மணிக் கட்டு அதிவேகமாக கத்தி பிடித்திருந்த கையைத் தாக்கியது. கத்தி அவன் பிடியிலிருந்து நழுவி பாத்ரூமில் கீழே விழ, ராம்குமார் அதை அழுத்திக் கொண்டான். எதிரி சுதாரிப்பதற்கு முன் அவன் மூக்கில் அடுத்த நாக் அவுட்டைப் பிரயோகித்தான்.

மூக்கிலிருந்து உடன் ரத்தம் வழிந்தது. எதிரிக்குச் சந்தர்ப்பமே அளிக்காமல் ராம்குமார் காலால் ஒரு நேரடி [illegible]க் விட அந்த உதை எதிரியின் விலாவில் பட்டு, அவன் திசை திரும்பி பாத்ரூம் கண்ணாடியில் மோதி உடன் திரும்பினான். அவனது முகம் இப்போது அசிங்கமாய் இருந்தது. வேகவேகமாக மூச்சு விட்டான். கையை உயரத் தூக்கிச் செத்த பாம்பை அடிப்பது போல் கையைக் கீழே இறக்க, ராம்குமார் அந்தக் கையைப்பற்றி அடுத்தடுத்து - அடுத்தடுத்து அவன் அடிவயிற்றில் சரமாரியாகக் குத்துகளைச் செலுத்தினான்.

ரயிலின் வேகத்தில், சத்தத்தில் அவர்களின் மோதல் அந்த பாத்ரூம் அறையை மீறி வெளிப்படவில்லை. எதிரி

மிக லேசான முனகல் ஒன்றை உதிர்த்து விட்டுக் கீழே சரிய, ராம்குமார் காலடியில் இருந்த கத்தியைக் கம்ப்யூட்டர் கணக்குப்போடும் நேரத்தில் எடுத்தான்.

அதன் கூரான முனையை எதிரியின் கழுத்தில் பதித்தான்.

"சொல்."

"என்ன சொல்ல வேண்டும்?"

"உன்னை அனுப்பியவன் யார்?"

"தெரியாது."

ராம்குமார் விட்ட அறையில் எதிரியின் வாயிலிருந்து ஒரு சிங்கிள் டீ அளவுக்கு ரத்தம் வெளிப்பட்டது.

"சொல்" என்றான் ராம்குமார் மறுபடி.

"எனக்குத் தெரியாது: எனக்குத் தெரியாது."

ராம்குமார் கையில் பிடித்திருந்த கத்தியை ஓங்க, எதிரியின் கண்கள் செருகிக் கொண்டன.

ராம்குமார் பாத்ரூம் குழாயில் தண்ணீர் பிடித்து அவன் முகத்தில் சுள்ளென்று அறைந்தான். அறைந்த தண்ணீரில் நிறைய உப்புக் கலந்திருக்க வேண்டும். அது அவனது காயங்களைத் தொட்டு எரிச்சலைக் கிளப்பியிருக்க வேண்டும். கண் விழித்து ராம்குமாரைப் பார்த்தான்.

"எதிர் பாத்ரூமில் இருக்கும் உன் நண்பனின் பெயர் என்ன?"

"யாதேவ்."



"அவனை நீ எப்படிக் கூப்பிடுவாய்?"

"ஜெனரல் என்று."

ராம்குமார் மறுபடி ஓர் உதைவிட இந்த முறை அவன் ஆங்கில எஸ்போல் நிலைமாறி முழுவதுமாகச் சுய உணர்வை இழந்தான்.

ராம்குமார் மெதுவாகப் பாத்ரூம் கதவைத் திறந்தான். எதிர் பாத்ரூமைப் பார்த்தான். தொட்டு அழுத்திப் பார்க்கலாம் என்று யோசித்து வேண்டாம் என்று தீர்மானித்தான்.

ரயில் இன்னும் வேகம் குறையாமல் விரைந்து கொண்டிருக்க, ராம்குமார் காரிடாரில் யாராவது தென் படுகிறார்களா என்று பார்த்தான். சத்தமின்றி விரைந்து தன் கம்பார்ட்மென்ட் கதவை மெல்ல நகர்த்திப் பார்த்தான்.

அவனுடைய படுக்கையில் அந்தப் பெட்டி இருந்தது. ஒரு பெரு மூச்சு விட்டான். கதவை மறுபடியும் சாத்தினான். கலைவாணி இருந்த பாத்ரூமை அணுகினான். விரல் முட்டியில் கதவைத் தட்டினான்.

"ஜெனரல், லைன் கிளியர். கம்-அவுட்" என்றான் எச்சரிக்கையாக.

கதவு ஒரு கோடளவு திறந்து முதலில் கத்தி ஒன்று எச்சரிக்கையாக வெளிப்பட, ராம்குமார் சித்தயாராக இருந்தான். அந்த கத்தியைப் பலங் கொண்ட மட்டும் கையால் பிடித்து இழுக்க, கத்தி அவன் கைக்கு வந்தது. உள்ளங்கையை எங்கோ அறுத்தது. ராம்குமார் தன்னுடைய கையில் வெளிப்பட்ட ரத்தத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கதவிடுக்கில்காலை வைத்துக் கொண்டு பாத்ரூமில் நுழைய முயற்சித்தான்.

"உன் நண்பன் ஏற்கனவே எதிர் பாத்ரூமில் மயங்கியிருக்கிறான் யாதவ், விளையாடதே. இப்போது நான் ஒரு குரல் கொடுத்து இந்தப் பெட்டியில் இருக்கும் அனைவரையும் எழுப்பினால் உன் நிலை என்ன ஆகும் தெரியுமா?"

"ஜாக்கிரதை என்னிடம் துப்பாக்கி இருக்கிறது." என்றான் யாதவ் உள்ளிருந்துகொண்டு.

"அவனிடம் துப்பாக்கி இல்லை ராம்" என்றாள் கலைவாணி. ராம்குமார் கதவை மோதினான். கலைவாணி திடீரென்று உச்சக்குரலில் "ஹெல்ப்!" "ஹெல்ப்!" என்று அலற யாதவ் கதவிற்குப் பின்னாலிருந்து வெளிப்பட்டு ராம்குமாரின் காலில் தடுக்கிக் ஒரு குட்டிக்கரணம் அடித்து எழுந்தான்.

ராம்குமார் குனிந்து அவனைப் பிடிக்க முயல்வதற்குள் ராம்குமாரின் காலை அவன் ஒரு வெட்டு வெட்டினான். அதே வேகத்தில் எழுந்து ராம்குமாரின் தாடையை மோதப் பார்க்க, ராம்குமார் விலகிக் கொண்டு யாதவின் சட்டையைப் பற்றினான்.

யாதவ் சட்டையின் கணிசமான பகுதியை ராம்குமாரின் கையில் விட்டு விட்டு அந்த நீள காரிடாரில் சத்தமின்றி ஓடினான்.

"கலைவாணி, சீக்கிரம் நீ உள்ளே போய் கதவைத் தாள் போட்டுக்கொள்" என்று சொல்லிவிட்டு ராம்குமார் யாதவ் ஓடிய திசையில் ஷூ ஒலிக்க ஓடினான்.

காரிடாரைக் கடக்கப் போகும் நேரத்தில் தூக்கத்தில் இருந்த டி. டி. ஆர். திடீரென்று கால்களை நீட்டிவிட ராம்குமார் அந்தக் காலால் இடறப்பட்டு, பெட்டியின் சுவரில் மோதித்திரும்பி, யாதவ் சென்ற திசையில் ஓட....



முதலில் டி. டி. ஆர். விழித்தார்.

"சோர்....சோர்" என்று கத்தினார்.

ராம்குமார் அடுத்த பெட்டியை, அடைந்த போது அதன் கதவு திறந்திருந்தது. வெளிக்காற்று புயலாக உள்ளே வீசியது. ராம்குமார் அங்கேயிருந்த பாத்ரூம்களைத் திறந்து பார்த்து யாருமில்லை என்று முடிவு செய்து கொண்டு திறந்திருந்த கதவு வழியாக வெளியே எட்டிப்பார்த்தான்.

ரயிலின் அலறல் அவன் காதைத்தொட்டது. மற்றபடி யாதவைக் காணவில்லை. ராம்குமார் கதவைச் சாத்தினான். உள்ளே வந்தான்.

பெட்டியே விழித்துக்கொண்டது. டி. டி. ஆர். கோட் பாக்கெட்டிலிருந்து கண்ணாடியைத் தேடி எடுத்து அணிந்து கொண்டிருந்தார்.

"வாட் ஹாப்பண்ட்?" என்று ஏதோ ஓர் அரசாங்கக் குரல் அதட்டியது.

ராம்குமார், "திருடர்கள்" என்றான்.

"யூ. ஆர். ப்ளீடிங் யெங் மேன்."

"அவர்கள் கையில் கத்தி இருந்தது. அவர்கள் இரண்டு பேர். ஒருவன் வெளியே குதித்திருக்க வேண்டும். அந்தப் பக்க பாத்ரூமில் ஒருவன் மயங்கி இருக்கிறான்" என்று ராம்குமார் அடுத்த பக்க பாத்ரூமை நோக்கி மறுபடி ஓடினான். பாத்ரூம் கதவு கிழவியின் வாய்போல் திறந்திருந்தது. அந்தப் பக்கத்துக் கதவும் திறந்திருந்தது. காற்று மட்டும் தான் பாக்கியிருந்தது.

"குதித்திருக்கவேண்டும்" என்று ஒரு குரல் தன்னுடைய மேலான அபிப்பிராயத்தைத் தெரிவித்தது.

"ட்ரெயின் இப்போது விஜயவாடா ஸ்டேஷனில் நிற்கப்போகிறது. அங்கே உங்கள் கைக்கு கட்டுப் போட்டுவிடலாம்." என்று யாரோ இலவச அறிவுரை உதிர்த்தார்கள்.

ராம்குமாரின் தோளில் ஒரு கை படர்ந்தது. திரும்பினான்.

கலைவாணி நின்றிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் இருந்தது.

''உள்ளே வாருங்கள்'' என்று அவனைப் பற்றினாள்.

ராம்குமார் பெட்டியில் நுழைந்தான்.

''போலீசுக்கு சொல்லியாக வேண்டும்'' என்று வெளியில் குரல்கள் முணுமுணுத்தன.

கலைவாணி கொண்டுவந்திருந்த ஒரு டவலை எடுத்து ராம்குமாரின் உள்ளங்கையில் சுற்றினாள்.

வாசுதேவ் இரண்டு வீரர்களை ரகசியமாய் பாதுகாப்பிற்கு அனுப்புவதாகச் சொன்னாரே அவர்கள் எங்கே? வந்திருந்தவர்கள் யார்? ஓடுகிற ரயிலில் இருந்து கீழே குதிக்க எவ்வளவுதைரியம் இருக்க வேண்டும்? அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் வாசுதேவிற்கு இந்த நிகழ்ச்சியைப் பற்றித் தந்தி மூலமாவது தெரிவிக்க வேண்டும்.

''எல்லாம் அந்தப் பெட்டியால்'' என்றாள் கலைவாணி.

"ஆம்" என்றான் ராம்குமார். மேல்பர்த்தில் பெட்டி இருந்த இடத்தை நோக்கினான். திடுக்கிட்டு, "கலைவாணி!" என்றான் திகில் நிறைந்த குரலில்.



அவன் வைத்த இடத்தில் பெட்டி இல்லை.

# 6

"பெட்டியைக் காணவில்லை கலைவாணி," என்றான் ராம்குமார்.

"என்னது?" என்று கேட்டாள் கலைவாணி.

''இப்போது நான் என்ன செய்யப்போகிறேன்? வாசுதேவிற்கு என்ன பதிலைச் சொல்லப்போகிறேன்? மெட்றாஸில் ஜான் செம்பருத்தியின் முகத்தில் எப்படி விழிக்கப் போகிறேன்? கேவலம்! ஒரு ப்ரீஃப்கேஸ். அதைக் காப்பாற்ற முடியவில்லை என்னால். நானெல்லாம் எந்த வேலைக்குப் போகவேண்டும் தெரியுமா? ஏர்கண்டிஷன் செய்யப்பட்டு சுழல் நாற்காலி போடப்பட்டு ஆசாமி ஒருவன் அமர்ந்திருக்க அவனருகில் நின்று உள்ளங் கையில்....."

''நிறுத்துங்கள் ராம்,'' என்றாள் கலைவாணி. "கொஞ்சம் யோசிக்கலாம். நீங்கள் கதவை மூடிக் கொள்ளச் சொன்னவுடன் நான் கதவை மூடிக்கொண்டு விட்டேன். அப்புறம், இரண்டு பேரும் வெளியில் குதித்து விட்டார்கள் என்று பேசிக்கொண்டதைக் கேட்டுக் கதவைத்திறந்தேன். நான் உள்ளே நுழையும் போது அந்த ப்ரீஃப்கேஸ் இருந்தது. அதற்குப் பிறகு நான் வெளியே வந்து உங்களை உள்ளே கூட்டிவருவதற்குள்தான் யாரோ அதை எடுத்திருக்க வேண்டும். அந்தப்பெட்டி இப்போது ரயிலில்தான் இருக்கும்."

"அக்கா," என்று பொன்விழியின் குரல் கேட்டது "என்ன பொன்விழி? நீ தூங்க வில்லை"

பொன்விழி படுக்கையிலிருந்து எழுந்தாள். அந்த நேரத்தில் பொன்விழி பிரான்ஸ் தேச ஓவியம்போல் இருந்தாள்.

"என் மெத்தைக்குக் கீழே பாருங்கள்" என்றாள்.

கலைவாணி சட்டென்று குனிந்து பொன்விழியின் மெத்தைக்கு அடியில் இருந்து அந்த ப்ரீஃப்கேஸை எடுத்தாள்.

"இதைத்தானே நீங்கள் தேடுகிறீர்கள்? கலைவாணி அக்கா கதவைத் திறந்து வெளியே போனவுடனேயே அதை எடுத்து நான் கீழே வைத்துவிட்டேன். திடீரென்று யாராவது நுழைந்தால் எனக்குத் தெரியாமலே போய் விடுமே." என்றாள் பொன்விழி உயிரற்ற இமைகளைப் படபடத்து.

ராம்குமார் சட்டென்று பாய்ந்து பொன்விழியைக் கட்டிப்பிடித்தான்.

"மெட்ராஸ் வந்தவுடன் உனக்குத் தங்கத்திலேயே ஒரு செயின் செய்து கழுத்தில் மாட்டிவிட்டுத்தான் மறுவேலை," என்றான்.

"அந்தப் பெட்டியில் அப்படி என்னதான் இருக்கிறது ராம்?"

"இரண்டு ஹேர் பின்கள், மூன்று முழம் பூ......அட கோபிக்காதே. எனக்கு மட்டும் என்ன தெரியும் கலைவாணி?"

நட்டுவாங்கம் நடந்தது எதுவும் அறியாமல் சுகமான குறட்டைகளில் இருந்தார்.



"ராம், எனக்கு இன்னொரு சந்தேகம்."

"கேள்."

"நீங்கள் ஏதோ இன்ஜினியர்தானே?"

"ஆமாம்."

"அப்புறம் எப்படி இப்படிப் பாய்ந்து சண்டை போட்டீர்கள்?"

"பெண்கள் பரதம் கற்றுக்கொள்ளுவது ஃபாஷன் என்றால், ஆண்கள் காரத்தே பயிற்சியில் ஈடுபடுவது அவர்களுடைய ஃபாஷன், கலைவாணி."

ரயிலின் வேகம் மெல்லக் குறைந்தது. விஜயவாடா ஸ்டேஷனின் தூக்கத்தைக் கலைத்து பிளாட்பாரங்களுக் கிடையில் நுழைந்தது. ஒலிபெருக்கி ஆங்கிலம், இந்தி, தெலுங்கு என்று பாஷை மாற்றி கிராண்ட்-ட்ரங்கின் வரவைத் தண்டோரா போட்டது.

ராம்குமார் இருக்கையை விட்டு எழுந்தான்.

"கதவைச் சாத்திக்கொள்ளுங்கள். என் கையை டாக்டரிடம் காட்டிவிட்டு வந்துவிடுகிறேன்." என்று டிக்கெட் பரிசோதகருடன் கீழே இறங்கினான்.

"அபார தைரியசாலியப்பா நீ" என்றார் டாக்டர்.

ராம்குமார் ரயிலில் நடந்ததைப் பற்றி வாசுதேவுக்கு நான்கு வரியில் தந்தி கொடுத்தான். ரயில் எச்சரிக்கை விசில் கொடுத்ததும் ஏறிக்கொண்டான்.,

சிவப்பிரகாசம் எழுந்து உட்கார்ந்திருந்தார்

"தம்பி, இவர்கள் சொல்வதெல்லாம் நிஜம்தானா?"

"என்ன சொன்னார்கள்?"

"சண்டை போட்டாயாம்? கையில் பாண்டேஜ் போடும் அளவிற்கு அடித்துவிட்டார்களா என்ன?"

ராம்குமார் புன்னகையைத்தான் பதிலாகத் தந்தான்.

"ஒரு வார்த்தை - சிவபிரகாசம் - என்று என்னை எழுப்பியிருக்ககூடாது? அந்தப் பயல்களுக்குப் பாடம் கற்றுக்கொடுத்திருப்பேனே......"

"இப்போது மட்டும் என்னவாம்? எனக்குப் பயந்தா அவர்கள் ஓடிப்போனார்கள்?"

"பின்னே?"

"உங்கள் குறட்டைக்குப் பயந்துதான் அவர்கள் ரயிலில் இருந்தே குதித்துவிட்டார்கள்."

"போங்கள் தம்பி" என்றார் சிவப்பிரகாசம் வெட்கப் புன்னகையுடன்.

"நாளைக் காலை உங்களிடம் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைக்கப் போகிறேன்."

"என்ன?"

"ரயில் நின்றதும் கலைவாணி, நீங்கள், பொன்விழி மூன்று பேரும் இறங்கிக்கொள்கிறீர்கள். உங்களிடம் உள்ள லக்கேஜ்களை எல்லாம் வெளிப்படையாகத் தெரியும்படி எடுத்துக் கொள்கிறீர்கள். வெளியே போய் ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு உங்கள் வீட்டிற்குப் போகிறீர்கள். நான் உங்களை வந்து சந்திக்கும்வரை நீங்கள் மூன்று பேரும் வீட்டை விட்டு வெளியே தலையே காட்டப் போவதில்லை."

"என்ன செய்யப் போகிறாய் தம்பி?"



"நாளைக் காலை சொல்கிறேன். இனிமேல் சிறிது நேரமாவது தூங்கினால் தான் காலையில் சுறுசுறுப்பாகச் செயல்பட முடியும்," என்றான் ராம்குமார்.

விளக்கை அணைத்தான்.

"குட் நைட்," என்றான்.

காலையில் கிராண்ட்-ட்ரங்க், ஸ்டேஷனில் நுழைவதற்கு முன்பே கலைவாணி எழுந்து, முகம் கழுவி, உடைமாற்றி லேசாக மேக்கப் போட்டு முடித்திருந்தாள்.

பொன்விழிக்கும் அதே மரியாதைகள் நிகழ்ந்திருந்தன.

நட்டுவாங்கம் காலையில் எழுந்தவுடன் வெற்றிலை போடத் துவங்கியவர் இன்னும் நிறுத்திக்கொள்ளவில்லை.

"ஸ்டேஷனுக்கு ஜான் செம்பருத்தி வந்திருந்தால் என்ன செய்வது ராம்குமார்?"

கலைவாணி கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

"அவரை அவருடைய அறையில் நான் சந்திப்பதாகச் சொன்னேன் என்று சொல்லிவிடு கலைவாணி," என்றான் ராம்குமார்.

ஸ்டேஷனுக்குள், ஜிகு-ஜிகு-ஜிகு என்று சின்னச் சின்னச் சத்தங்களுடன் பிளாட்பாரத்தில் இருந்த சிறு தூண்களை அதிரடித்துக்கொண்டு ரயில் நுழைந்தது.

ராம்குமார் அந்த, ப்ரீஃப்கேஸை கையில் எடுத்துக் கொண்டு வெஸ்டிபூல் அமைப்பு வழியே அவர்கள் இருந்த இடத்திலிருந்து என்ஜின் கோர்க்கப்பட்டிருந்த முதல் பெட்டியை நோக்கிக் கிடுகிடுவென்று நடந்தான். போகிற

வழியில் சில வயோதிகர்களிடம் திட்டுவாங்கவேண்டியிருந்தது. சில இளம் பெண்கள் அவனைக் கண்ணகிகளைப்போல் முறைத்தார்கள். ராம்குமார் அவர்களிடம் மானசீக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விரைந்தான்.

பிளாட்பாரத்தில் யாரோ யாரையோ வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். ட்ராலிகள் உருண்டுகொண்டிருந்தன. போர்ட்டர்களின் தலைகளில் வண்டிச் சுமைகள் ஏறிக்கொண்டிருந்தன.

ராம்குமார் பிளாட்பாரத்தில் எங்காவது ஜான் செம்பருத்தி தென்படுகிறாரா என்று பார்த்தான். இல்லை. ரயிலுக்குள் இந்தப் பெட்டியைக் கடந்து எங்கேயும் போக முடியாது. என்ற நிலை வந்தவுடன் ரயிலின் மறுபக்கக் கதவைத் திறந்து தண்டவாளத்தில் குதித்தான்.

கம்பி மேல் நடக்கும் சர்க்கஸ் ஆசாமிகளைப்போல் இருபக்கமும் ஆடிச் சாய்ந்து, எதிர் பிளாட்பாரத்தில் ஒரு தாவு தாவினான். கண்களை நான்கு புறமும் சுழற்றினான்.

போலீஸ்காரர்கள், ராணுவ ஆசாமிகள் ஆகியோரைத் தவிர்த்து நேராகப் பெட்டிகளைப் பாதுகாக்கும் க்ளோக் ரூமுக்குச் சென்றான்.

கவுண்ட்டரில் கிராண்ட்-ட்ரங்கின் கூட்டம் வந்து சேரவில்லை. அவனுக்கு முன்னால் இரண்டு பேர் நின்றிருந்தார்கள். அவ்வளவுதான்.

"எக்ஸ்க்யூஸ் மீ. நான் பிரசவ அவசரத்தில் இருக்கிறேன். தயவு செய்து என்னை மன்னியுங்கள்" என்று சொல்லிவிட்டு க்யூவில் இருந்த இரண்டு பேருக்கு முன்னதாக நின்றான்.

அவர்கள் புருவங்களைத் தூக்கினார்கள். சிறந்த நகைச்சுவையைக் கேட்டவர்கள் போல் சிரித்தார்கள்.



கவுண்டர் ஆசாமி பெட்டியை வாங்கி ராம்குமாரின் பெயரைக்கேட்டு, கையெழுத்து வாங்கி ரசீதை நீட்டும் போது சிரிக்காமல் கேட்டார்.

"எந்த பிரசவ ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகப்போகிறீர்கள் சார்?"

ரசீதை வாங்கிக் கொண்டு "கீழ்ப்பாக்கம்" என்றான் ராம்குமார் புன்முறுவலுடன்.

அங்கிருந்து அகன்றான். சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே இருந்த தபால் ஆபீசை அணுகினான்.

அந்தக் காலை நேரத்தில் கவுண்ட்டரில் ஷாம்பூ போட்டுக் குளித்த தலையுடன், மஞ்சள் ஸாரி அணிந்த ஒரு பெண் இருந்தாள்.

"மிஸ், ஒரு கவர் கொடுங்கள் மிஸ்" என்றான்.

அந்தப் பெண் ராம்குமாரை முறைத்துவிட்டு ஒரு தபால் உறையை நீட்டினாள்.

ராம்குமார் தபால் உறையை வாங்கி, க்ளோக் ரூம் ரசீதை அதில் போட்டு உறையை ஒட்டினான். மேலே தன்னுடைய ஃப்ளாட் முகவரியை எழுதினான்.

தபால்பெட்டியில் போட்டான். ஒரு நிம்மதி மூச்சை விடுவித்தான்.

ஸ்டேஷனுக்கு நிச்சயம் ஜான் செம்பருத்தி வந்திருக்கமாட்டார். கலைவாணியும், பொன்விழியும், நட்டுவாங்கத்தோடு இந்த நேரம் டாக்ஸியில் போய்கொண்டிருப்பார்கள். நான் என்ன செய்யவேண்டும்?

ஜான் செம்பருத்தியைப் போய்ப் பார்க்கலாம் என்று தீர்மானித்தான்.

அதற்குமுன் ஒரே ஒரு காப்பி குடிக்கலாம் என்று நினைத்தான். வெளியே வந்து ரெஸ்டாரென்டை நோக்கிப் போகும் வழியில் "எக்ஸ்க்யூஸ் மீ," என்று ஒரு குரல் கேட்டது. யாரோ யாரையோ கூப்பிடுகிறார்கள் என்று நினைத்தாலும் அந்தக் குரலில் இருந்த இனிமைக் கவர்ச்சியில் உந்தப்பட்டு ராம்குமார் திரும்பினான்.

ஒரு பெண்.

அவள்தான் அழைத்தாள் என்பது அந்தப் பெண் தன் முகத்தில் காட்டிய சிரிப்பில் தெரிந்தது. அவளுடைய கண்கள் பெரிதாக இருந்தன. அவளுடைய இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன. நெற்றியில் பொட்டு எதுவும் வைக்காமல் (பாஷன்!) இருந்தாள். ஒற்றைப் பின்னல் பின்னியிருந்தாள். ஜீன்ஸ் பான்ட்டும், லூசான கதர்ச் சட்டையும் அணிந்திருந்தாள். சிரிப்பி லிருந்து அவளுடைய முன் வரிசைப் பற்கள் லேசாக, மிக லேசாகத் தூக்கலாய் அமைந்திருந்தது தெரிந்தது. அந்த முன் வரிசைப் பற்கள் அவளுக்கு மேலும் கவர்ச்சியைக் கொடுப்பதாக ராம்குமார் நினைத்துக் கொண்டான்.

கூட்டத்தில் தொலைந்த குழந்தை போல் விழித்துக் கொண்டிருந்தாள். கையில் வைத்திருந்த லாலிபாப்பை வாயில் நுழைத்து ஒரு முறை சுவைத்துவிட்டு, ராம்குமார் பார்ப்பதை அறிந்ததும் வாயிலிருந்து அதை எடுத்துக் கையை முதுகுக்குப் பின்னால் வைத்துக் கொண்டாள்.

"யெஸ் மிஸ்."

"க்ராண்ட் ட்ரங்க் வந்து விட்டதா?"

"அதில் வந்தவர்கள் எல்லாம் இந்நேரம் வீடு போய்க் குளித்து முடித்து டிபன் சாப்பிடத் தொடங்கியிருப் பார்கள்."



"மை காட்!" என்றாள். லேசாக அழத் தொடங் கினாள்.

"என்ன ஆயிற்று மிஸ்? மிஸ்தானே நீங்கள்?"

அவள் கவனிக்கவில்லை. "என் பாட்டி ஒரு வீல் சேர் நோயாளி. இந்த ரயிலில் வருகிறாள். அவளை ரிசீவ் பண்ண வந்தேன். வழியில் கார் ப்ரேக்- டவுன் ஆகி......பாட்டி....."

"மிஸ்! பாட்டியை இங்கிருந்து கூப்பிட்டால் வந்து விடுவார்களா என்ன? நிச்சயம் யாராவது ஓர் ஆசாமி உங்கள் பாட்டியை ரயிலில் இருந்து இறக்கியிருப்பார்கள். உங்கள் பாட்டியை யாரும் ஒன்றும் செய்துவிட மாட்டார்கள். உள்ளே போய்த் தேடுங்கள்."

"எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் என்னுடன் வர முடியுமா? பாட்டியை கார் வரை கொண்டு வந்து ஏற்றி விட்டால் போதும்....."

சொல்லி விட்டு ஆவலை அடக்க முடியாதவள் போல அந்த லாலிபாப்பை மறுபடியும் சுவைக்க ஆரம்பித்தாள்.

அவள் பார்த்த தோரணையில் மேனகை இருந்தாள். இமைகளைப் படபடத்த விதத்தில் ரதி இருந்தாள். ஊர்வசியோ, திலோத்தமையோ லாலிபாப் சாப்பிட்டால் இவ்வளவு அழகாகத்தான் சாப்பிடுவார்கள்.

"பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று திரும்பினான் ராம்குமார்.

"தேவையில்லை. என்னிடம் இரண்டு இருக்கின்றன."

"ஓ. கே. லெட்ஸ் கோ," என்று ஸ்டேஷனுக்குள் நடந்தான். தொடர்ந்தாள்.

டு பிளாட்பாரத்தை ஓங்கி உதறி விட்டது போல் வந்து இறங்கிய பிரயாணிகள் காணாமல் போயிருந்தார்கள். கிராண்ட்-ட்ரங்கின் இன்ஜின் தன் வாலை ஆட்டிக் கொண்டு அடுத்த செட் தண்ட வாளத்தில் ஓய்வறைக்குப் போய்க்கொண்டிருந்தது. அங்கங்கே பதிக்கப்பட்ட டி. வி. பெட்டிகளில் வால்ட் டிஸ்னியின் மிக்கி மவுசை ஒரு கறுப்புப் பூனை துரத்திக் கொண்டிருந்தது.

ராம்குமார் கண்களை அலைய விட்டான்.

"மிஸ், பிளாட்பாரங்களைப் பெருக்கவே ஆரம்பித்து விட்டார்கள். உங்கள் பாட்டியைக் காணோமே?"

அவள் வெகு அருகில் நடக்க அவள் அணிந்த சென்ட்டின் மணம் ராம்குமாரின் அனுமதியின்றியே அவன் நாசியில் நுழைந்தது.

கிட்டத்தட்ட பிளாட்பாரத்தின் முனைக்கே வந்து விட்டபோதுதான் ராம்குமார் அவர்களைக் கவனித் தான்.

நான்கு பேர்.

பிறை வடிவத்தில் நின்றிருந்தார்கள். நான்கு பேரும் மெல்லிய புன்னகைகளை வீசினார்கள். அந்தச் சிரிப்பில் சத்தியமாய் நட்பு இல்லை.

ராம்குமார் அத்தனை நரம்புகளும் சுண்டப்பட்டு உஷாராகி, ஓடுவதற்காகத் திரும்பியபோது, "நில்" என்றாள் லாலிபாப்.

ராம்குமார் எதிர்ப்பு சொல்லாமல் நின்றான். காரணம், அவள் கையில் முளைத்திருந்த சின்னத் துப்பாக்கி.



# 7

ராம்குமார் வாழ்நாளில் முதல் முறையாக ஒரு பாடம் கற்றுக் கொண்டான். லாலிபாப் சாப்பிடும் பெண்கள் எதிரில் வந்து நின்றால் அவர்களை உதாசீனம் செய்ய வேண்டும். அதுவும் பாட்டியைக் காணாமல் அடித்த லாலிபாப் பெண்கள் என்றால் இன்னும் அதிஜாக்கிரதையாக விலகிப் போக வேண்டும்.

காலம் கடந்த யோசனை.

அவ்வளவு பெரிய சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனில் அடுத்த பிளாட்பாரத்திற்கும் அடுத்த பிளாட்பாரத்தில் ஒரு ட்ராலி உருண்டது. டி. வி. யில் இப்போது மிக வேடிக்கையான காட்சி சலனமாகிக் கொண்டிருந்தது போலும். வேடிக்கை பார்த்த போர்ட்டர் கள் கத்தினார்கள்.

"பாவிகளே! இங்கே பாருங்களேன். ஒரு பெண் என்னைத் துப்பாக்கி முனையில் நிற்க வைத்திருக்கிறாள். நான்கு தடியன்கள் விஷச் சிரிப்போடு சுற்றி நிற்கிறார்கள்!"

லவுட் ஸ்பீக்கரில் அறிவித்தால்கூட யாரும் நம்ப மாட்டார்கள்.

"மிஸ்! இது என்ன?"

"இது துப்பாக்கி. அனாவசியக் கேள்விகள் வேண்டாம். ராம். அதுதானே உன் பெயர். திரும்பி நேராக நட."

"என்னை வேறு யாரோ என்று நினைத்து..." சொல்லிக்கொண்டே ராம்குமார் ஒரு சிறு அசைவு

அசைக்க அவள் துப்பாக்கியை நேரே மார்பில் பொருத்தினாள்.

"உன்னைப் பற்றித் தெரியும் ராம். உன் சாகசங்களை எல்லாம் விட்டு விட்டுத் திரும்பி நட" என்றான், நால்வரில் ஒருவன்.

ராம்குமார் திரும்பி நடக்கத் தொடங்கினான். சில வினாடிகளில் உலகமே தலைகீழாக மாறுகிறது. இரண்டாம் கதாநாயகி என்று நினைக்கப்பட்டவள் திடீரென்று வில்லியாக மாறுகிறாள்.

பிளாட்பாரத்தின் சறுக்கு மர முடிவில் அவர்கள் இறங்கினார்கள்.

ராம்குமாருக்கு எந்த வினோதத் துடிப்பும் வந்து விடக்கூடாது என்பதில் கவனம் வைத்தர்கள் போல் அந்த நான்கு பேரும் மிக நெருக்கமாக அவனைச் சூழ்ந்து நடந்தார்கள்.

"ஹேய் லாலிபாப்!" நடுவில் இருந்தவன் சீறினான்.

"என்ன கிரண்?"

"நம் நண்பர் கையில் ஒரு பெட்டி வைத்திருப்பாரே எங்கே அது?" என்றான், கிரண் என்று அழைக்கப் பட்டவன். தேர்தல் இல்லாமலேயே அந்த அடிதடி முரடர்களுக்கு அவன்தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பான் என்று அவன் தோற்றம் சொன்னது. உயரமாக, சற்றே தோள்களை அகட்டிக் கொண்டு மார்புச் சட்டையின் பொத்தான்கள் தெறிக்கும் அகலத்துடன், கண்களைச் சிவப்பாக வைத்திருந்தான்.

"அவரை நான் பார்த்தபோது அவர் கையில் பெட்டி எதுவும் இல்லை!" என்றாள் லாலிபாப்.



"முட்டாள்! அவருடன் வந்த டான்ஸரிடமோ, அந்த பாகவதர் கிராப்பிடமோ கூட அந்தப் பெட்டி இல்லையே. நீங்களே சொல்லுங்கள், மிஸ்டர் ராம்குமார் பெட்டி எங்கே?"

"எந்தப் பெட்டியைச் சொல்கிறீர்கள்?" என்றான் ராம்குமார். உடனே தாடையில் அடிபட்டான். கிரண் கோபத்தில் கீழுதட்டை பற்களுக்கிடையில் கடித்துக் கொண்டு, ராம்குமாரை மறுபடியும் அடிக்க முனைந்தான்.

"கிரண், இது பொது இடம் நான்கு பேர் திரும்பிப் பார்க்கும்படி நடந்து கொள்வது புத்திசாலித்தனமல்ல. நம் விருந்தாளியை கெஸ்ட் ஹவுஸிற்குக் கூட்டிப் போவோம்" என்றான் முரடன் நம்பர் இரண்டு.

கிரண் தன் கையை இறக்கிக் கொண்டான். "லாலி பாப். நீ போய் விடு. இனி நாங்கள் பார்த்துக் கொள் வோம்."

லாலிபாப் தன் ரிவால்வரை அவன் கைக்கு மாற்றி னாள். "கிரண், ஒரே ஒரு வரம் கேட்கலாமா?"

"என்ன?"

"அழகான ஆண்கள் ரத்தம் சிந்தினால் என் மனம் பொறுக்காது. ராம்குமாரை அதிகம் அடிக்காதே..."

"கெட் லாஸ்ட். ரத்தம் வருவதும் வராததும் நம் நண்பர் நடந்து கொள்ளும் முறையில் இருக்கிறது."

யானைகளைக் கட்டி வைக்கும் சங்கிலிகளைப் போலப் பூமியில் வரியிட்டிருந்த தண்டவாளங்களைக் கடந்து, தண்டவாளங்களைக் கடந்து, தண்டவாளங் களைக் கடந்தார்கள். ரயில்வே ஸ்டேஷனை வால் டாக்ஸ் சாலையிலிருந்து அணை கட்டும் காம்பவுண்ட் சுவரை

நெருங்கினார்கள். காம்பவுண்ட் சுவரில் இருந்து ஓர் ஆளுயர ஓட்டையில் நுழைந்து சாலையில் வெளிப் பட்டார்கள்.

வால் டாக்ஸ் சாலை சுறுசுறுப்பாய் இருந்தது. ரப்பர் டயர் பொருத்திய பார வண்டிகளை மாடுகள் நுரை தள்ளி இழுத்தன. பஸ் டிரைவர்கள் பொறுமையில்லாமல் இருந்தார்கள். லாரிகள் நெருப்புப் பிடித்த அவசரம் போல் ஏர் ஹாரன்களால் அச்சுறுத்தி வழி கேட்டன. டிபன் பாக்ஸ் பெண்கள் வேலை இடத்திற்குச் சுமந்து செல்லும் பஸ்களுக்காக காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

ரிக்ஷாக்கள் இளைப்பாறும் பெரிய மரத்தடியில் ஒரு மாருதி ஜீப் நின்றிருந்தது. ஜீப்பை அவர்கள் நெருங்கி னார்கள்.

"ராம்குமார், நீ புத்திசாலி. எங்கள் சைலன்சர் துப்பாக்கிகளுக்கு வேலை வைக்காதே. ஜீப்பில் தகராறு செய்யாமல் ஏறு."

ராம்குமார் மனதில் சில கணக்குகளைப் போட்டுப் பார்த்து, அவர்கள் பேச்சுக்கு மசிவதே உத்தமம் என்று ஜீப்பில் ஏறினான்.

கிரண் மிகச் சாமர்த்தியமான டிரைவராக இருந்தான். மக்களின் அத்தனை அவசரங்களையும் சமாளித்து, பெரியார் சாலையில் நுழைந்து யூ வளைவு எடுத்து அண்ணா சாலையைத் தொட்டு, ஸ்பீடா மீட்டர் கெஞ்சக் கெஞ்ச ஜீப்பை விரட்டினான்.

ராம்குமாரின் இரு புறமும் இரண்டு பேர் துப்பாக்கிகளோடு நெருக்கிக் கொண்டிருக்க, ராம்குமார் கண்களை மூடிக்கொண்டு ரிலாக்ஸ் செய்ய ஆரம்பித்தான்.



"இறங்கு!" என்று கிரண் ஆணையிட்டபோது, ஜீப் பல்லாவரத்துப் புழுதியை அடைந்திருந்தது. காம்பவுண்ட் இல்லாத ஒரு பாழ்மாளிகை எதிரே தெரிந்தது.

ராம்குமார் இறங்கினான்.

"நட..."

அந்த மாளிகைக்குள் நுழைந்தார்கள். ஹாலில் சரித் திரம் இருந்தது. பிரிட்டிஷ் கால ஆசாமிகள் (சுருள் சுரு ளாகத்தலைப்பாகை, பைப்) படங்களாகத் தொங்கி னார்கள். மரப் படிகள் ஐந்து பேரின் சுமை அதிகம் என்று ஆட்சேபித்தன. மரமும், கல்லும், மண்ணும் கலந்த கூரை தன் மேல் தோலைக் கொஞ்சமாய் உதிர்த்தது.

"மேலே!" என்றான் கிரண்.

மேலே இன்னொரு ஹால் இருந்தது. சுவர்களின் ஆரோக்கியம் கீழே பார்த்ததைவிட ஒரு படி மேல். நைலான் கயிறு கட்டப்பட்டு, சில ராணுவ உடைகள் தொங்கின. சுவர்களில் சில ரைஃபிள்கள் சாய்த்து வைக்கப் பட்டிருந்தன. பாடம் செய்யப்பட்ட ஒரு காட்டெரு மையின் தலை நான் விழலாமா என்று அனுமதி கேட்டுக் கொண்டிருந்தது.

"ராம்குமார், எங்களுடைய கேள்விகளுக்கு நீ சரியான பதில்களைச் சொல்லாவிட்டால் நாளையிலி ருந்து உன்னுடைய தலைகூட இந்தச் சுவரை அலங் கரிக்கும்!" கிரண், தன் பெல்ட்டைச் சுழற்றிக் கொண்டே சொன்னான்.

"எனக்கு இந்த விஷயமே வினோதமாகப்படுகிறது. டில்லியிலிருந்து ரயிலேறி நான் சென்னை வருகிறேன். அது தப்பா? என்னை ஒரு லாலிபாப் பெண் அணுகி அவளது பாட்டியை அழைத்து வர உதவி கேட்கிறாள்.

நான் சரி என்று அவள் பினனால் நடக்கிறேன். அது தப்பா? எதற்காக அந்தப் துப்பாக்கிப் பயமுறுத்தல், இங்கே இன்னொரு எச்சரிக்கை? எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"எங்கள் சகவாசத்தை அதிக நேரம் நீ ரசிக்க மாட்டாய் ராம்குமார். அதனால் பட் பட் என்று பதில் சொல்லி விட்டு உன் வழியே போ. பெட்டி எங்கே?" கிரண் பெல்ட்டை வருடிக் கொண்டே கேட்டான்.

"இது என்னடா வம்பாயிருக்கிறது! பெட்டி என்றால் எத்தனையோ பெட்டி. எந்தப் பெட்டியைச் சொல் கிறீர்கள்?"

கிரண் கீழுதட்டைக் கடித்துக் கொண்டான். பெல்ட்டைப் பளீர் என்று வீசினான். ராம்குமார் சற்றே விலக சட்டை குறுக்கே கிழிந்தது. ஒரே ஓர் இடத்தில் சிகப்புக் கோடு விழுந்தது. ராம்குமார் பற்களைக் கடித்துக் கொண்டான்.

"அந்தப் பெட்டி இப்பொழுது என்னிடம் இல்லை!" என்றான் ராம்குமார்.

"குட். இப்போதுதான் நீ ஓரளவுக்கு ஒழுங்காய்ப் பேசுகிறாய். எங்கே வைத்திருக்கிறாய் பெட்டியை?"

"அதைத்தான் உன் ஆட்கள் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்களே"

"மறுபடியும் பொய்." கிரண் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

"நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ என் கையைப் பார். நேற்று இரவு ரயிலில் அந்தப் பெட்டி என்னிட மிருந்து பிடுங்கப்பட்டபோது, நான் சண்டை போட்டு,



எனக்குத் கிடைத்த விருது இது. அந்தப் பெட்டியில் அப்படி என்னதான் இருக்கிறது? இந்தியா முழுவதும் என்னைத் துரத்துகிறதே!"

"மேலே மேலே பொய்களை அடுக்குகிறாய்! ராம் அந்தப் பெட்டியை நீ சாமர்த்தியமாக ஒளித்து அந்த ஆட்களை வெறும் கையோடு அனுப்பிய விவரம் எனக்கு எப்போதோ வந்து விட்டது." கிரண் ராம்குமாரை நெருங்கி வந்தான். சிகரெட்டை ஆழமாக உறிஞ்சினான்.

அதன் முனை சிகப்பானதும் புன்னகை பூத்தான். "இதை உன் கண்ணில் ஒற்றி எடுத்தால் எப்படி இருக்கும், ராம்?"

"உன் ஆட்கள் இல்லையென்றால் வேறு யாருடைய ஆட்களாகவோ கூட இருக்கலாம். பெட்டி என்னிட மிருந்து பறிக்கப்பட்டதுதான் உண்மை." ராம்குமார் பேசிக்கொண்டே கண்களைச் சுழற்றினான். கால்களைத் தரையில் உதைத்து, சரேலென அந்தரத்தில் எழும்பினான். சுருண்டு இறங்குகையில் கிரணை நோக்கி ஓர் உதை விட்டான்.

கிரண் நிறையப் பயிற்சி பெற்றிருந்தான். வெடுக் கென்று நகர்ந்து தன் பெல்ட்டை வீசி ராம்குமாரின் காலைப் பற்றி இழுத்தான். ராம்குமார் தரையில் விழுமுன் தலையைத் தூக்கி பாலன்ஸ் செய்ய, துப்பாக்கிகள் துடிப்பாயின.

"டோண்ட் ஷூட்!" என்று கிரண் கத்தினான். "ராம் வீணாகச் செத்துப் போகாதே!"

ராம்குமார் தன் அடுத்த முயற்சியைத் தவிர்த்தான்.

"வர்மா, உன் துப்பாக்கிக்கு உடனே வேலை இல்லை. பெட்டி கிடைக்கும்வரை இவன் உயிரோடு வேண்டும்

என்பது விஜய்தாக்கரின் உத்தரவு இவன் படிய மறுத்தால் டில்லியிலிருந்து விஜய் தாக்கரையே நேரில் வரச்சொல்ல வேண்டியதுதான்."

"அதுவரை?"

"அதுவரை அவனை அந்த அறையில் கட்டிப்போடு குண்டூசிகளைக் குத்திவைக்கும் குஷன் தொலைந்து விட்டது என்றாயே அவன் விரல்களை பயன்படுத்திக் கொள். துணி துவைக்கும் கல்லுக்குப் பதிலாக அவன் முதுகை உபயோகி..."

கிரண் பெல்ட்டை மறுபடி இடுப்பில் கட்டிக் கொண்டான். ராம்குமாரை நெருங்கி அவன் முகவாயைப் பிடித்துத் தூக்கினான். "உன்னுடைய ரத்தம் எந்த குரூப் என்று சொன்னால், ஆஸ்பத்திரியில் ஏற்பாடு செய்யச் சொல்கிறேன், ராம்!" என்று சிரித்தான். வெளியேறினான்.

வர்மா என்று அழைக்கப்பட்ட மாமிசம் தன் கைகளைச் சந்தோஷமாகத் தேய்த்துக் கொண்டான். குருவிக் குஞ்சைக் கவனித்துவிட்ட கழுகு போல் முகத்தைப் பிரகாசமாக வைத்துக் கொண்டு ராம்குமாரை நெருங்கினான். ராம்குமாரின் காதுகளை இரு புறமும் பிடித்து அப்படியே தூக்கினான்.

ராம்குமார் சிறகு பிய்க்கப்படும் பறவை போல் வலியில் துடித்தான். வர்மாவின் இரண்டு கைகளும் வேறு உபயோகமின்றித் தன் காதுகளில் இருப்பதை கவனித்தான். நச்சென தன் இரண்டு கால்களையும் வர்மாவின் கால்களுக்கிடையில் செலுத்தினான். கத்திரி கோலைப் பிரிப்பது போல் தன் கால்களை அவன் சடாரென்று பிரிக்க, வர்மா தன் பாலன்ஸை இழந்தான். ராம்குமாரின் காதுகளை விட்டுத் தரையில் கரப்பான் போல் மல்லாந்தான்.



மற்ற இருவரும் உஷாராகிப் பாயுமுன், ராம்குமார் குதிரை ஓட்டத்தில் அடுத்த கதவுக்குள் நுழைந்தான். கதவை உடனே சாத்தித் தாழிட்டான். பரபரப்பாகப் பார்வையைச் சுழற்றிப் பார்த்தான்.

அதிர்ந்தான்.

அறையிலிருந்து வெளியேற வேறு கதவோ, குறைந்த பட்சம் ஒரு ஜன்னலோகூட இல்லை.

# 8

ராம்குமார் தன் அவசரத்தைச் சபித்துக் கொண்டான்.

அறையிலிருந்து வெளியேற ஒரு ஜன்னலோ, வேறு கதவோ இல்லாதபோது, வந்த வழியேதான் வெளியேற வேண்டும். நிச்சயம் கதவுக்குப் பின்னே அவர்கள் உஷாராகக் காத்திருப்பார்கள். அவன் மூளையைச் சுவரெங்கும் சிதறடித்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள்.

நோ, சாகடிக்க மாட்டார்கள். அந்தப் பெட்டி எங்கே என்று தெரியும்வரை அவன் உயிருக்கு உத்தர வாதம் உண்டு என்று கிரண் பேசியதிலிருந்து தெரிந்தது.

என்னதான் செய்வது? அவன் யோசிக்குமுன் அறைக் கதவு வெளியே தாழிடப்பட்ட ஒலி வந்தது.

இந்த மாதிரி இக்கட்டான சூழ்நிலைகளில் பரபரப்பாகி, ரத்த அழுத்தத்தை எகிற வைப்பதில் எந்தப்

பயனும் இல்லை என்று ராம்குமார் அறிந்திருந்தான். அறையின் மையத்தில் உட்கார்ந்து கொண்டு, கண்களை மூடினான். சிந்திக்க ஆரம்பித்தான்.

டில்லியில் ராணுவ அதிகாரி வாசுதேவ் ஒரு பெட்டியைத் தருகிறான். அதனுள்ளே என்ன இருக்கிறது? அவனுக்கே தெரியாது. அதைச் சென்னையில் யாரோ ஒரு கர்னல் ஜான் செம்பருத்தியிடம் சேர்ப்பி என்கிறான். வழியில் பெட்டிக்காக முரடர்கள் வருகிறார்கள். சென்னையில் பெட்டிக்காக ரயில் நிலையத்திலேயே காத்திருக்கிறார்கள்.

இத்தனை நடந்ததிலிருந்து ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்தது. அந்தப் பெட்டி வெகு வெகு முக்கியமான பெட்டி.

டில்லியிலிருந்து விஜய் தாக்கர் என்று யாரோ வர வேண்டும் என்கிறார்களே விஜய் தாக்கர் யார்? வில்லனா?

கலைவாணி, நட்டுவாங்கம், பொன்விழி எல்லோரையும் இந்தக் கூட்டம் கவனித்துக் கொண்டிருப்பது போல் கிரண் சொன்னானே, அவர்களுக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே?

தடாலென்று கதவைத் தள்ளித் திறந்து கொண்டு வர்மா நுழைந்தான்.

"வா."

ராம்குமார் எழுந்திருக்கவில்லை. "எங்கே?"

"எங்கள் முகாமில் சிறைப்பட்டவர்களுக்குக் கேள்வி கேட்கும் உரிமைகளை நாங்கள் கொடுப்பதில்லை. வா!" என்று ராம்குமாரை நெருங்கினான். ராம்குமாரின் சட்டையைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கினான். அறைக்கு வெளியே இழுத்துப் போனான்.



புது அறையில் வெளிச்சம் வேண்டுமென்றே குறைக்கப்பட்டிருந்தது. நான்கு சுவர்களிலும் கறுப்பு பெயிண்ட் அடித்துத் துக்கம் கொண்டாடப்பட்டது. கம்பிகள் இல்லாத ஒற்றை ஜன்னலும் அதன் வெளியே இருபதடி ஆழத்தில் பூமியும் தெரிந்தது.

அறை மத்தியில் ஓர் இரும்பு நாற்காலி போட்டிருந்தது. அதன் முதுகுப்புறம் ராம்குமாரின் இதயத்தில் ஒரு துடிப்பைப் பிசக வைத்தது.

நாற்காலியின் அந்தப் பக்கத்திலிருந்து ஏராள கத்திகளைச் செருகி வைத்தது போல் கூர்முனைகள் முதுகு சாய்க்கும் பகுதியில் கருணையில்லாமல் தெரிந்தன. நாற்காலியின் கைகளை வைத்துக் கொள்ளும் இடத்திலும் இரும்பில் முள்முள்ளாய் வைத்திருந்தார்கள். அந்தச் சித்திரவதை நாற்காலியைப் பார்த்தாலே அச்சமாயிருந்தது.

''என் செல்லப் பையா, இந்த நாற்காலியை ஸ்பெஷலாக உனக்காவே எங்கள் பட்டறையிலிருந்து கொண்டு வந்திருக்கிறோம். வா."

"நீங்கள் செய்வது அநியாயம். எனக்கு ஒன்றும் தெரியாது."

"தெரியுமா, தெரியாதா என்பதை இன்னும் பத்தே நிமிடத்தில் கண்டு பிடித்து விடலாம். நாற்காலியில் உட்கார்."

ராம்குமார் தயக்கத்தோடு உட்கார்ந்தான். வர்மா அவனை நெருங்கினான்.

"நன்றாகச் சாய்ந்து உட்கார்."

"உட்காராவிட்டால்?"

"உட்கார வைக்கப்படுவாய்." சுற்றி நின்ற மூன்று ஆசாமிகளையும் காண்பித்து வர்மா சொன்னபோது ராம்குமார் நம்பினான். ஒரு தடிமனான நைலான் கயிறு அவன் மீது வீசப்பட்டு நாற்காலியின் முதுகோடு அவன் இறுக்கப்பட்டான். நூறு குரங்குகள் ஒரே சமயத்தில் முதுகைக் கவ்விக் கொண்டது போல் இருந்தது. அவனுக்கு, இன்னும் சற்று இறுக்கினால் சட்டை கிழிந்துவிடும் தோல் குத்திக் கிழிக்கப்பட்டு விடும். ராம்குமாரின் கண் களில் வலியினால் கண்ணீர் திரண்டது.

''இந்தக் கயிற்றின் சிறப்பைப் பார்த்தாயா? பெல்ட்டில் துளைகள் இருப்பது போல் கயிற்றில் இடை வெளி விட்டு வரிசையாய் முடிச்சுக்கள் இருக்கின்றன. பத்து நிமிடத்திற்கொரு தரம் ஒவ்வொரு முடிச்சாய் இறுக்கப்படும்-அதாவது நீ அதற்குள் உண்மைகளைச் சொல்லாவிட்டால்... முதல் பத்து நிமிடம் இந்த விநாடியிலிருந்து ஆரம்பம்.'' வர்மா தன் ஜிப்பிப் பற்களைக் காண்பித்தான்.

நான்கு ஆசாமிகளுமாய் அறையை விட்டுக் கதவைச் சாத்தாமல் வெளியேறினார்கள்.

சித்திரவதை செய்வதில் அண்மைக்காலமாக சைக்காலஜி ஊடுருவி விட்டது என்பதை ராம்குமார் கவனித்தான். சூழ்நிலையை அச்சுறுத்தும்படி அமைத்து, வார்த்தைகளில் அச்சத்தைத் தெளித்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

ராம்குமார் வேகமாகச் சிந்தித்தான். ஏதாவது செய்து இங்கேயிருந்து உடனே தப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் வலியின் உச்சத்தில் தன்னையறி



யாமலேயே உண்மை வெளியே போய்விடக்கூடும். அவன் கண்ணெதிரே கம்பிகள் இல்லாத ஜன்னல். அதன் வெளியே சுதந்திர பூமி. ராம்குமார் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

வர்மா அறைக்குள் காண்டாமிருகம் போல நடந்து வந்தான். ராம்குமார் எப்படியும் அவன் அடிக்கப் போகிறான் என்ற எதிர்பார்ப்பில் உடம்பைச் சற்றே குறுக்கிக் கொண்டான். உள்ளே நுழைந்ததும் வர்மா கதவைச் சாத்தினான். ராம்குமாரைப் பார்த்துக் கண்ணடித்தான். நெருங்கி வந்து ராம்குமாரின் முகவாயைப் பற்றித் தூக்கினான்.

"என்னைப் பார்த்தால் உனக்கு அச்சமாயிருக்கிறது இல்லை?"

"அச்சமில்லை. அருவருப்பு."

அந்தப் பதிலில் வர்மா காயப்பட்டவன் போல் முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டான். "நீ சின்னப் பையன். வயதும் பற்றாது. அனுபவமும் போதாது. யார் எதிரி யார் நண்பன் என்று புரிந்து கொள்ளும் பக்குவம் உனக்கு இன்னும் வரவில்லை."

"நீ பேசுவது எதுவும் எனக்குப் புரியவில்லை."

"இப்பொழுது நீ தப்பிக்கப்போகிறாய் என்கிறேன்."

"நானா? இந்தச் சித்திரவதையிலிருந்து மொத்தமாய்த் தப்பிக்க ஒரே வழி நான் கோமாவுக்குத்தான் போக வேண்டும்."

"முட்டாள் பையா." வர்மா இப்போது ராம்குமாரின் பின்னே போனான். பின்னிருந்து அவன் தாக்கப் போகிறான் என்று ராம்குமார் நினைத்தான். ஆனால்

அவன் உடம்பை இறுகக் கட்டியிருந்த நைலான் கயிறு தளர்ந்து கொண்டது. ராம்குமார் உதறிக் கொண்டு எழுந்தான். நம்பாமல் வர்மாவைப் பார்த்தான்.

வர்மா தன் இடது கன்னத்தைக் காண்பித்தான். "இங்கே உன் பலமனைத்தையும் பிரயோகித்து ஒரு குத்து விடு. நான் விழுந்து விடுவேன். அப்புறம் தப்பிப்பது உன் சாமர்த்தியம்."

"நீ யார்? கிரணின் ஆளில்லையா?"

"நீ க்விஸ் நடத்த இது அல்ல நேரம். வெளியே சீட்டு விளையாடிக்கொண்டிருக்கும் நம் நண்பர்கள் சந்தேகப் பட்டு எந்நேரமும் கதவை உதைத்துத் திறந்து கொண்டு உள்ளே வரலாம். கமான், க்விக்."

ராம்குமார் தன் கையை மடக்கி வர்மாவின் கன்னத்தில் ஓங்கி அடித்தான். வர்மா கீழே விழுந்தான். கண்களை மூடிக் கொண்டான். ராம்குமார் சுறுசுறுப்பாகத் தன்னைப் பிணைத்த கயிற்றை எடுத்தான். ஜன்னல் சட்டத்தில் அதை முடிச்சிட்டு அதன் பலத்தைப் பரிசோதித்தான்.

அந்த நேரம் தடால் என்று கதவு உதைக்கப்பட்டு தாழ்ப்பாள் எகிறிப் போக, அலிபாபா குகை போல் திறந்தது.

அந்த மூன்று பேரும் அவிழ்த்து விட்ட வேட்டை நாய்களைப் போல் ராம்குமாரை நோக்கிப் பாய்ந்தனர். ராம்குமார் அந்த நைலான் கயிற்றைப் பற்றிக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே குதித்தான். அவர்கள் ஜன்னல் அருகே ஓடி வந்து எட்டிப் பார்த்தார்கள். ராம்குமார் வெளிச் சுவரில் கால்களை வைத்து ஸ்பைடர் மேன் போல வேகமாக இறங்குவதைப் பார்த்தார்கள். அவனுக்கு



ஆதரவாக இருந்த அந்த நைலான் கயிற்றை அறுக்கலாமா என்று தயங்கினார்கள்.

"அவன் தப்பித்து விட்டால் கிரண் நம்மைப் பரலோகத்திற்கு அனுப்பி விடுவான். ஓடுங்கள். ஓடி அவனைப் பிடியுங்கள்" என்றான் கீழே கிடந்த வர்மா லேசாகப் புரண்டு.

அவர்கள் அறையை விட்டு குபுக் என்று பாய்ந்து வெளியேறினார்கள். மரப் படிகளில் ஏராள சத்தத்தோடு இறங்கினார்கள். வீட்டைச் சுற்றிக் கொண்டு பின்புறம் ஓடினார்கள். திகைத்து நின்று விட்டார்கள்.

வீசிய காற்றில் நைலான் கயிறு அந்தரத்தில் பெண்டுலம் போல் ஆடியது. ராம்குமார் மாயமாய்க் கரைந்திருந்தான். அண்ணாந்து ஜன்னலைப் பார்த்தார்கள். கயிறைப் பார்த்தார்கள். மூன்று புறமும் சிதறித் தேடிக்கொண்டு ஓடினார்கள்.

ராம்குமார் சிரித்தான். கயிற்றில் பாதி இறங்கும் போது, அவர்கள் மூன்று பேரும் தன்னைத் தேடிக் கொண்டு மாடியிலிருந்து இறங்குவார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அவன் மறுபடியும் மேலே ஏறிவிட்டான். அறைக்குள் தொம் மென்று வர்மாவின் அருகே குதித்தான்.

"அவர்கள் நான் வெளியே ஓடி விட்டதாக ஏமாந்து தேடிப் போயிருக்கிறார்கள், வர்மா. இப்போது சொல் நீ யார்? கிரண் யார்? விஜய் தாக்கர் யார்? அந்தப் பெட் யில் அப்படி என்னதான் இருக்கிறது?"

"அந்தப் பெட்டியில் இந்தியாவின் எதிர்காலமே இருக்கிறது என்று கிரண் சொன்னதைக் கேட்டேன்!" என்றான் வர்மா. "மற்ற கேள்விகளுக்குச் சேர்த்து ஒரே

பதில்: கிரண், விஜய் தாக்கர் எல்லோரும் ராணுவத்தில் சம்பளம் வாங்கினாலும் இந்தியாவை எதிரிகளுக்கு விற்றுவிட மும்முரமாய் இருப்பவர்கள். நீ இங்கே அதிக நேரம் நிற்பதுகூட ஆபத்து. அடுத்த அறைக்குப் போ. அங்கிருந்து கீழே இறங்கும் படிகளில் இறங்கு. காரேஜில் கொண்டு விடும். காரேஜில் ஒரு மோட்டார் சைக்கிள் இருக்கும். எடுத்துக் கொண்டு பற."

ராம்குமார் பிரதான சாலைக்கு வந்தபோது மாலை மணி நான்கு. நீள நீளமான நிழல்களைச் சூரியன் இழுத்திருந்தது. ராம்குமார் மோட்டார் சைக்கிளை ஒரு மெடிகல் ஷாப் வாசலில் நிறுத்தினான்.

"ஃபோனை நான் உபயோகிக்கலாமா?"

"சில்லறையாக இருக்கிற தில்லையா?"

"இருக்கிறது." ராம்குமார் டெலிபோனை அருகே இழுத்துக் கொண்டான். ஒரு நம்பரை டயல் செய்தான். எதிர் முனையில் போன் எடுக்கப்பட்டு, ஒரு பெண்ணின் "ஹலோ" கேட்டது.

"மேடம். உங்களுக்கு எதிர் வீட்டில் இருக்கும் சிவப் பிரகாசத்தைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா, ப்ளீஸ்?"

"ரேடியோ ஸ்டேஷனிலிருந்துதானே பேசுகிறீர்கள்?" என்றாள் அந்தப் பெண். "இருங்கள், கூப்பிடுகிறேன்."

போன் வழியே எவர்சில்வர் பாத்திரக்காரரின் குரல் கேட்டது. தக்காளி விலை கிலோ இரண்டு ரூபாய் கேட்டது. "அம்மா, என் பென்சிலை இவன் எடுக்க றாம்மா?" கேட்டது. ராம்குமார் ஏறக்குறையப் பொறுமை இழந்த நேரம், நட்டுவாங்கத்தின் வெற்றிலை மெல்லும், "ஹலோ?" கேட்டது.



"கேளுங்கள், சிவபிரகாசம். ராம்குமார் பேசுகிறேன்."

"தம்பி, எங்கே இருக்கிறாய்?" சிவபிரகாசம் பதறினார்.

"நான் பல்லாவரம் அருகிலிருந்து பேசுகிறேன். அது முக்கியமில்லை. கலைவாணி, பொன்விழி எல்லாம் பத்திரமாய் இருக்கிறார்கள், அல்லவா?"

"ஏன் தம்பி?"

"அந்தப் பெட்டி விஷயமாக நான் வேறு ஒரு முக்கியமான இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். காரியம் முடியும் வரைக்கும் கலைவாணிக்குக் கூட ஆபத்து வரலாம். தேடிக் கொண்டு யார் வந்தாலும் இல்லை என்று சொல்லி விடுங்கள். நான் திரும்பி வரும் வரை கவனமாக இருங்கள்," என்று தொடர்பைத் துண்டித்தான்.

மோட்டார் சைக்கிளை அடுத்த தெருவில், குப்பைத் தொட்டியின் அருகே நிறுத்தினான். சற்று தூரம் நடந்து சென்று ஓர் ஆட்டோவைப் பிடித்தான்.

"விக்டோரியா ஹோட்டலுக்குப் போ" என்றான். கர்னல் ஜான் செம்பருத்தியைப் பார்த்துப் பேசிவிட்டால் இந்தக் கண்ணாமூச்சி விவகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி போட்டு விடலாம் என்று தோன்றியது.

இருபதே நிமிடங்களில் விக்டோரியா ஹோட்டலின் வாசலருகே ஆட்டோ அவனை இறக்கி விட்டது. ஐந்து மாடிகள். கண்ணாடி ஜன்னல் பரப்புக்கள். இழுத்து மூடிய திரைகள். இந்த ஹோட்டலில்தான் கர்னல் ஜான் செம்பருத்தி இருக்கிறார்!

சிமெண்ட் பாதையில் நடக்க ஆரம்பித்த ராம்குமார் கான்க்ரீட் தூணில் மோதிக் கொண்டவன் போல் நின்று விட்டான்.

ரிசப்ஷன் கௌன்ட்டரில் கிரணும், அவன் ஆட்களும் ஏதோ விசாரித்துக் கொண்டு நின்றிருந் தார்கள்.

# 9

ராம்குமார் நின்றான். இரண்டடி பின்னே நகர்ந்தான். காரம் போர்டில் வெட்டப்பட்ட காய்களைப் போல் வழுக்கிக் கொண்டு வந்து நின்ற கார்களிலிருந்து வசதியானவர்கள் இறங்கி ஹோட்டலுக்கு நடக்க, டிரைவர்கள் பார்க்கிங் பகுதிக்குக் கார்களை விரட்டினார்கள்.

சட்டையின் பின்புறம் அங்கங்கே கிழிந்து, சற்றே ரத்தக் கறை பூசிக் கொண்டிருந்த ராம்குமாரை யாவரும் உதாசினம் செய்தார்கள்.

கிரணும், அவன் ஆட்களும் ஜான் செம்பருத்தி இங்கே இருப்பதை மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்களா என்ன? அவர்களுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு ஜான் செம்பருத்தியை எப்படிச் சந்திப்பது? ராம்குமார் சுற்றிலும் பார்த்தான்.

ஹோட்டலில் முகப்பை நோக்கிப் போகும் சிமெண்ட் பாதையில் இரு புறமும் பூந்தொட்டிகள் வரிசையமைத்திருந்தன. அதன் பின்னே அழகாக மேடிட்ட செயற்கை மலையைப் புல் போர்த்தியிருந்தது. இடையில் ஒரு நீர் உற்று. அதன் வர்ணங்கள் மெலிதான



இசைக்கேற்ப சட் சட் என்று மாறின. அந்த நீர் ஊற்றுக்குப் பின்னே முண்டாசு அணிந்த ஆசாமி பூமியில் செடிக்காகக் கொத்திக் கொண்டிருந்தான்.

ராம்குமார் ஒரு தீர்மானத்தோடு அந்த ஆளைப் பார்த்து நடந்தான். கண்ணாடிக் கதவை வருபவர் களுக்குத் திறந்துவிடும் ஊழியன் பார்த்தால்கூட இவனும் தோட்ட வேலைக்காக வந்தவன் என்று நினைத்துக் கொள்ளட்டும்.

முண்டாசு தன் வேலையிலிருந்து நிமிர்ந்தான்.

"யார் நீ?" என்றான்.

"ராமசாமி வரவில்லை?" என்று வாயில் வந்ததைக் கேட்டான் ராம்குமார்.

"ராமசாமி என்று இங்கே யாரும் கிடையாது. ஒரு வேளை பெயிண்ட் கம்பெனியிலிருந்து வந்தவர்களில் இருக்கலாம்."

அட, இது என்ன புது விவரம், பெயிண்ட் கம்பெனி என்று.

"அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?"

"ஹோட்டலைச் சுற்றிக் கொண்டு பின்புறம் போ. அங்கேதான் சாரங்கள் கட்டி அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்."

ராம்குமார் ஒரு சந்தோஷத் துள்ளலுடன் நகர்ந்தான்.

விக்டோரியா ஹோட்டலின் பின்புறம் கால் பந்து விளையாடும் மைதானம் போல் பரந்திருந்தது. கார்கள் பல நின்றிருந்தன. ஒரு லாண்டரி வேனில் இருந்து மாற்றுப்

போர்வைகள், தலையணை உறைகள் சலவை வாசனையோடு இறங்கிக் கொண்டிருந்தன.

ஹோட்டலின் உயரமான சுவர்களுக்குப் புது வர்ணம் பூசும் வேலை நடந்து கொண்டிருந்தது. சுவரை ஒட்டிச் சவுக்குகளால் சாரங்கள் எழும்பியிருந்தன.

இருள் சூழ ஆரம்பித்து விட்டது. ஆகாயத்தில் நட்சத்திரங்களை உலரப் போட்டு, நிலா கண்காணித்துக் கொண்டிருந்தது. காற்று விசிலடித்துப் போனது. வேலை செய்பவர்கள் வேலை நேரம் முடிந்து கலைந்து விட்டனர் போலும். இரண்டே பேர்தான் பீடி பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

ராம்குமார் அவர்களை அணுகினான்.

"நீங்கள் பெயிண்ட் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் தானே?"

"இன்னா விசயம்? அத்தைச் சொல்லு!"

"உங்களிடம் எனக்கு ஓர் உதவி வேண்டும். நான் ஒரு நாடக நடிகன். இந்த ஹோட்டலில் பிரபலமான டைரக்டர் ஒருவர் தங்கியிருக்கிறார். அவரைச் சந்தித்துப் பேச நான் எவ்வளவோ முயற்சி செய்தும், அவருடைய அஸிஸ்டெண்ட் விடமாட்டேன் என்கிறான்."

"அந்த ஆளுக்கு லெப்ட்ல ரெண்டு, ரைட்ல ரெண்டு கொடுத்து உன்னை உள்ளே விடச் சொல்லணுமா?"

"ஐயோ, அந்த மாதிரி ஹெல்ப் இல்லை. நான் அந்த டைரக்டரின் ரூமுக்குள் கண்ணாடி ஜன்னல் வழியே நுழைவதற்கு வழி காட்டினால் போதும்."

"அது எப்படி தொரே?"



"பெயிண்ட் பூசும் வேலையில் ஈடுபட்டுள்ளவன் போல் நான் இந்தச் சாரம் வழியே ஏறிப் போகிறேன். ரூம் நம்பர் நூறு எங்கே வரும் என்று சொல்லுங்கள் போதும்."

"மாணிக்கம், தொரைக்கு கரீட்டா வழி காட்டுபா..."

"கையில் ஒரு பெயிண்ட் டப்பாவும், பிரஷ்ஷும் இருந்தால் இன்னும் நன்றாயிருக்கும். மாணிக்கம்," என்றான் ராம்குமார்.

ஆறடி நீளத்துக்குக் கண்ணாடி ஜன்னல் திரை போட்டு மறைக்கப்பட்டிருந்தது. ஒரு ஓரத்தில் திரை கொஞ்சம் விலகியிருக்க, உள்ளே அறை தெரிந்தது. அடக்கப்பட்டிருந்த வெளிச்சத்தில் இரட்டைக் கட்டிலும், பூப்போட்ட அதன் விரிப்பும் தெரிந்தன. அந்தப் படுக்கையில் ஒரு தலையணையைச் சற்று சாய்த்து வைத்து அவர் படுத்திருந்தார்.

வாசுதேவ் டில்லியில் காட்டிய புகைப்படத்தில் கம்பீரமாய் இருந்த அதே தோற்றம். கர்னல் ஜான் செம்பருத்தி (என்ன வினோதமான பெயர்!)

கண்ணாடியைத் தட்டிச் சப்தம் செய்து அவர் கவனத்தைக் கவர வேண்டும். அவர் அவசரப்பட்டு உதவியைக் கூப்பிட்டு விட்டால் வம்பு!

அந்த நேரத்தில் கீழே ஒரு ஜீப் வந்து நிற்பதைக் கவனித்தான். ராம்குமார். ஜீப்பிலிருந்து இறங்கியவனை எதிர்கொண்டவர்கள் கிரணும், அவன் ஆட்களும். அவர்கள் விறைத்து நின்ற தோரணையிலிருந்து, வந்திருப்பவன் விஜய் தாக்கர் என்பவனாய்த்தான் இருக்க வேண்டும் என்று ராம்குமார் தீர்மானித்தான். அவர்கள் ஜான் செம்பருத்திக்காக வந்திருக்கலாம்... அவரை உடனே எச்சரிக்க வேண்டும்.

ராம்குமார் கண்ணாடிப் பரப்பில் விரல் முட்டியால் மரங்கொத்திப் பறவை போலத் தட்டினான்

டப்டப், டப்டப்!

படுக்கையிலிருந்த ஜான் செம்பருத்தி அரண்டு எழுந்தார். ராம்குமாரின் முண்டாசையும் பெயிண்ட் டப்பா பிரஷ்ஷையும் பார்த்ததும் கொஞ்சம் அமைதியானார். எழுந்து வந்து கண்ணாடிக் கதவைக் கொஞ்சம் தள்ளித் திறந்தார். அறைக்குள் இருந்த குளுமை செய்யப்பட்ட காற்று ராம்குமாரை வருடிக் கொடுத்தது.

"என்ன வேண்டும் உனக்கு? ஏணி நழுவி விட்டதா"

நான் பெயிண்ட் பூசுபவனல்ல," என்றான் ராம்குமார். "என் பெயர் ராம்குமார். உங்களைச் சந்திப்பதற்காக வந்தேன்."

அவருடைய முகம் மாறியது. கண்ணாடியை மேலே நகர்த்தாமல் நிறுத்தினார்.

"என்னைச் சந்திக்க இதுதானா வழி?"

"கீழே நம் எதிரிகள் இருக்கிறார்கள். டில்லியிருந்து வாசுதேவ் அனுப்பிய ஆள் நான்."

வாசுதேவ் என்ற பெயரைக் கேட்டதும் அவர் கதவை அதிகம் திறந்தார். ராம்குமார் உள்ளே குதித்தான்.

"நம்பிக்கையில்லாவிட்டால் டில்லிக்கு போன் போட்டு வாசுதேவிடம் கேளுங்கள்."

"டில்லிக்கு இல்லை. சொர்க்கத்துக்குப் போன் போட்டுத்தான் வாசுதேவிடம் பேச வேண்டும். அவன் ஆத்மா இந்நேரம் சாந்தி அடைந்திருக்கும்."

"என்ன சொல்கிறீர்கள் கர்னல்?" என்றான் ராம்குமார் திடுக்கிட்டு.



"வாசுதேவ் உன்னிடம் ஏதாவது கொடுத்து அனுப்பினானா?" அவனுடைய கேள்வியை அவர் உதாசீனம் செய்திருந்தார்.

"ஆம். ஒரு பெட்டி."

"அது எங்கே?"

ராம்குமார் டில்லியில் ஆரம்பித்துப் பல்லாவரம் வரை நடந்ததையெல்லாம் அவருக்கு விளக்கமாய்ச் சொன்னான். அவர் தோளில் தட்டிக் கொடுத்தார்.

"ஜேம்ஸ் பாண்ட் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ! எதிரிகள் எதிரிகள் என்கிறாயே, யார்? எனக்கு அடையாளம் காட்ட முடியுமா?"

ராம்குமார் ஜன்னல் திரையைச் சரேலென விலக்கினான்.

"அதோ கீழே நிற்கிறார்களே, உங்கள் அறையை நோட்டம் விட்டுக் கொண்டு அவர்கள்தான். ஆனால் நீங்கள் பார்ப்பது அவர்களுக்குத் தெரிய வேண்டாம் கர்னல்."

"ஜோக் ஆஃப் தி இயர். ஒன்றாம் வகுப்புப் பையன் ஒரு டாக்டரேட்டிற்கு அரிச்சுவடி சொல்லித் தருகிறான். யங் மேன் டோண்ட் ஒர்ரி. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று ராம்குமாரின் தோளைத் தட்டிக் கொடுத்தார். ராட்சசக் கையால் அறை வாங்கிக் கொண்ட மாதிரி இருந்தது. ராம்குமாருக்கு.

கர்னல் ஜான் செம்பருத்தி திரையை இன்னும் விலக்கினார். கண்ணாடியின் ஊடே கீழே பார்த்தார். வரிசையாக விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. அந்த விளக்குகளின் கீழே அந்தி வெளிச்சத்தில் தெரிந்த விஜய் நாக்கரின் முகத்தை பார்த்தார்.

"மை காட்!" என்றார் திரையை மூடிவிட்டு.

"என்ன கர்னல்?"

"கீழே நிற்கிறானே லைட் ப்ளூ ஷர்ட் அணிந்து டை கட்டி... அவனையா சொல்கிறாய்?"

"அவன் உடையைப் பார்த்து ஏமாறாதீர்கள் கர்னல் அவன் அபாயமானவன்."

"உனது அபிப்பிராயத்தைக் கொண்டு போய்க் கொளுத்து. நான் கேட்ட கேள்வி லைட் ப்ளூ ஷர்ட்-டை, டார்க் ப்ளூ பாண்ட்-அந்த ஆசாமியா?"

கர்னலுடன் சேர்ந்து ராம்குமாரும் கீழே பார்த்தான்.

"அவனேதான் கர்னல்."

"நம்பர் ஒன் ஆபீசர் அவன். அவனா உன்னை ரயில்வே ஸ்டேஷனில் மடக்கினான்? அவனா உன்னைப் பெட்டி எங்கே என்று கேட்டான்?"

"அவனுடைய ஆட்கள். கிரண் என்று ஒருவன்."

"என்னால் நம்பவே முடியவில்லை" என்றார் கர்னல். தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தார். "விஜய்தாக்கர் மிகவும் நம்பகமான துடிப்பான ஆபீசர் ராம்குமார்."

"அப்படி உங்களை நம்ப வைத்திருக்கிறான்."

"ஸாரி விஜய்" என்று முனகினார். அறையில் இருந்த டெலிபோனை அருகில் இழுத்துக் கொண்டார். ரிசீவரை எடுத்து எக்ஸ்சேஞ்சிடம் சில நம்பர்களைத் தெரிவித்தார்.

"எனக்கு அந்த நம்பர்களுக் கெல்லாம் கனெக்ஷன் உடனே வேண்டும். கமான் குய்க்" என்று அறையிலிருந்தே எக்ஸ்சேஞ்சை விரட்டினார். அவர் குரலில் ராணுவம் இருந்தது. ரிசீவரை வைத்தார். "என்ன நடக்கப் போகிறதென்று பார்!" என்றார்.



போன் மணி அடித்து, ஜான் செம்பருத்தி ரிசீவரை எடுத்துக் காதில் பொருத்திக் கொண்டார். "திஸ் ஈஸ் கர்னல் ஜான் ஸ்பீக்கிங்" என்று தொடங்கிச் சரம் சரமாக ஆணைகளைப் பிறப்பித்தார். வைத்தார். அடுத்த நம்பர் கிடைத்ததும் மறுபடி போனில் மேலும் ஆணைகள் இட்டார். போனை வைக்கும்போது அவர் கை லேசாக நடுங்கியது. பாக்கெட்டிலிருந்து ஸ்பென்சர் சுருட்டு ஒன்றை எடுத்து, லைட்டரால் அதைப் பற்ற வைத்து ஆழமாக உள்ளே இழுத்தார்.

"கீழே பார்," என்றார்.

ராம்குமார் பார்த்தான். ஹோட்டல் காம்பவுண் டிற்குள் மூன்று ஜீப்கள் நுழைந்தன. மூன்றும் ராணுவ ஜீப்கள். ஜீப்களிலிருந்து இறங்கியவர்கள் மஃப்டியில் இருந்தார்கள். விஜய் தாக்கரையும், கிரணையும், மற்ற ஆட்களையும் நெருங்கி, கப்பென்று பிடித்தார்கள். அதிகச் சலனமேயில்லாமல், யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் ஒரு மௌன நாடகம் போல் அந்த நிகழ்ச்சி நடந்து முடிந்தது. பிடித்தவர்களை ஜீப்பில் ஏற்றினார்கள். ஜீப்கள் பறந்தன.

"ஆச்சரியம்," என்றான் ராம்குமார். "கீழே ரொட்டீனைக் கொஞ்சங்கூடப் பாதிக்கவில்லை, கர்னல்."

"தட் இஸ் மிலிட்டரி!" என்றார் கர்னல். "பையா, கோர்ட் மார்ஷியல் என்பதை நீ அறிந்திருக்க மாட்டாய். இந்த விஜய் தாக்கருக்கு இனி நிகழப் போகும் அவலங் களைப் பற்றி உனக்குத் தெரியாது. போ. இந்தக் கோமாளி

வேஷத்தைக் கலைத்துவிட்டு, நல்ல உடை அணிந்து வா அந்தப் பெட்டி எனக்கு வேண்டும். உடனே......உடனே."

"இதோ கர்னல்" என்றான். "போகுமுன் ஒரே ஒரு கேள்வி."

"என்ன?"

"வாசுதேவ் எப்படி இறந்தார்?"

"உங்களை ரயிலில் வழியனுப்பி விட்டு வந்ததும் கார் ஷெட்டில் மடக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான். கார் ஷெட்டிலேயே நைலான் கயிற்றில் தொங்கினானாம். ராணுவப் போலீஸ் நிறைய நாய்களை வைத்து மோப்பம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். லுக், யங் மேன். சாவைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் ராணுவத்தில் சேரக் கூடாது. இது மிலிட்டரியில் முதல் விதி. அந்தப் பெட்டி இன்னும் எத்தனை நேரத்திற்குள் எனக்குக் கிடைக்கும்?"

"அண்ணா நகரில் என் ஃபிளாட்டிற்குப் போய்க் காலையில் நான் ஸ்டேஷனில் இருந்து தபாலில் அனுப்பிய ரசீது சேர்ந்திருந்தால் அதை எடுத்துக் கொண்டு...... வெல், எப்படியும் இன்னும் ஒன்றரை மணி நேரத்திற்குள் அந்த பெட்டி உங்கள் மடியில் இருக்கும்." ராம்குமார் வெளியேறினான்.

விஜய் தாக்கரையும், அவன் சகாக்களையும் ஏற்றிச் சென்ற ஜீப்கள் இரண்டு தெருக்கள் கடந்ததும் நின்றன.

"நம் நாடகத்தைப் பார்த்து அந்த ராம்குமார் நிச்சயம் ஏமாந்திருப்பான். தான் சந்தித்தது. பேசிய தெல்லாம் போலி கர்னல் என்பது அவனுக்குச் சத்திய மாய்த் தெரியாது. அந்தப் பெட்டியைக் கொண்டு வந்து நாம் ஏற்பாடு செய்துள்ள போலி ஜான் செம்பருத்தியிடம் அவன் கொடுக்கட்டும். ஒரிஜினல் கர்னல் ஜான்



செம்பருத்தி நம்மிடம் தானே சிறையில் இருக்கிறார்? அவரை முதலில் போய்ப் பார்ப்போம்." அவன் சைகை செய்ததும் ஜீப்கள் புறப்பட்டன.

# 10

சென்னை, தன் மற்றொரு இரவைத் தொடங்கியிருந்தது.

ராம்குமார் ஓர் ஆட்டோவில் சென்ட்ரலை நோக்கி விரைந்தான்.

மாருதி நிறைய இளம் பெண்கள் சிரிப்போடு அவன் ஆட்டோவை ஓவர்டேக் செய்தார்கள். ஒரு ரிக்ஷாக்காரர் பைஜாமா ஜிப்பா அணிந்த சேட்டைச் சுமந்து கொண்டு வியர்க்க வியர்க்க மிதித்தார். சைக்கிளில் சென்ற வாலிபன் தெருவோரம் நடந்த இரண்டு பெண்களுக்கிடையில் ஸ்டைலாகப் புகுந்து வெளியேற, அவர்கள் திட்டியதை அலட்சியம் செய்து சிரித்தான். பஸ்களில் வியர்வை முகங்கள். மண்ணெண்ணெய் விளக்கில் ஈ மொய்த்த பலாச் சுளைகள். இந்நேரத்திலும் நடிகர்களின் போட்டோக் களைப் பரப்பி வைத்துக் கொண்டு காத்திருக்கும் இரு நடைபாதை ஜோசியர்கள்.

ராம்குமாருக்கு நெஞ்சு முழுவதும் ஒரே எண்ணம். சென்ட்ரலில் அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு, கர்னல் ஜான் செம்பருத்தியிடம் அதை ஒப்படைத்து விட வேண்டும்.

அப்புறம் கலைவாணியைப் போய்ப் பார்த்து ஒரு குட் நைட் சொல்லிவிட்டு... பொன்விழியின் கன்னத்தைத் தட்டி இன்றைக்கு நடந்ததைச் சிரிக்க சிரிக்கச் சொல்லி விட்டு.....என்று எண்ணங்கள் நீண்டு கொண்டே போக, ஆட்டோ சென்ட்ரலில் நுழைந்தது.

**அ**டையாறு ஆலமரத்தை ஒட்டி பெசன்ட் நகர் செல்லும் வளைவான பாதை. மரங்கள் அடர்ந்த பங்களாவின் முதல் மாடி.

விஜய் தாக்கர் தன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் நசுக்கினான். சிரித்தான்.

அவனுக்கு எதிரில் இருந்த சுழல் நாற்காலியில் முதுகு காட்டி உட்கார்ந்திருந்த ஆசாமியைப் பற்றித் திருப்பி னான்.

"குட் ஈவினிங் கர்னல் ஜான் செம்பருத்தி."

"விஜய், இதற்கெல்லாம் ஒரு நாள் நீ பதில் சொல்லப் போகிறாய்!"

"ஒரு நாள்! என்றோ வரப்போகும் அந்த ஒரு நாளுக் காக இன்றைய என் வெற்றியை மறக்கச் சொல்கிறீர்களா கர்னல்?"

"வெற்றி என்பது மிலிட்டரி அகராதியில் நிலையான தல்ல."

"பற்களைக் கடித்துக் கொண்டு பேசுவதால் லாப மில்லை, கர்னல். முருக பூபதியை உங்களுக்குத் தெரியு மில்லையா?"

"முருகபூபதி! நம் ராணுவத்தில் கறுப்பு மையால் அவன் ஃபைல் முழுக்க கரும்புள்ளிகள் குத்தியவனே நான்தான்." ஜான் செம்பருத்தி புன்னகைத்தார்.



"அவ்வளவுதான் நினைவுக்கு வருகிறதா கர்னல்? அந்த முருகபூபதிக்கு உங்களைப் போலவே உடலமைப்பு என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? முருகபூபதிக்கு வெகு நாளாகக் கர்னல் ஆக வேண்டும் என்று ஆசை. நான் அவனைக் கர்னலாக மாற்றி விட்டேன். அதாவது கர்னல் ஜான் செம்பருத்தியாக!"

"உன் உளறல் எனக்குப் புரியவில்லை."

"உளறவில்லை. பிளாஸ்டிக் சர்ஜரி என்று கேள்விப் பட்டிருப்பீர்கள்......அதில் திறமை மிகுந்த சிலர் எங்கள் பக்கம். முருகபூபதி கர்னல் ஜான் செம்பருத்தியாக உருவாக எங்களுக்கு எத்தனை மாதங்கள் பிடித்தன என்பது இப் போது முக்கியமில்லை. டெல்லியிலிருந்து பெட்டியைக் கொண்டு வந்த ராம்குமார் கர்னல் ஜான் செம்பருத்தி என்று நம்பி' அந்தப் பெட்டியை இன்னும் சற்று நேரத்தில் அவனிடம் கொடுக்கப் போகிறான் என்பதுதான் முக்கியம்." விஜய் தாக்கர் அடுத்த சிகரெட் பற்றவைத்துக் கொண்டு கர்னல் ஜான் செம்பருத்தியின் முகத்தை ஊடுருவுவதுபோல் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்தான்.

★

"**வா,** உனக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்று அறைக் கதவை அகலமாகத் திறந்தான் முருகபூபதி அல்லது டூப்ளிகேட் ஜான் செம்பருத்தி.

"கர்னல், இதுதான் அந்தப் பெட்டி. நல்ல வேளை நான் காலையில் போஸ்ட் செய்த ரசீது என் ஃபிளாட்டிற்கு வந்து சேர்ந்திருக்கிறது. உடனே ஆட்டோ பிடித்து......"

"விவரங்களை விடு. கொடு அதை."

அந்தப் பெட்டியை வாங்கி மேஜையின் மீது வைத்தான் முருகபூபதி. "இதன் சாவி எங்கே?"

ராம்குமார் திடுக்கிட்டான். ஏறிட்டான். "என்ன கர்னல் கேட்டீர்கள்?"

"சாவி. கே. இ. ஒய். கீ?"

"வாசுதேவ் என்னிடம் பெட்டியைக் கொடுத்தார். சாவியைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவர் அதை நேராக உங்களுக்கு அனுப்பியிருப்பார் என்று நினைத்தேன்."

"நினைத்தேன். நம்பினேன் என்பதெல்லாம் தீர்மானமில்லாத வார்த்தைகள் ராம்."

ராம்குமார் அந்தப் பெட்டியை எடுத்துப் பார்த்தான். அது ஒரு சாதாரண டில்லித் தயாரிப்பு. அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாதென்றே வாசுதேவ் சாதாரணப் பெட்டியில் போட்டு அனுப்பியிருக்க வேண்டும்.

"உள்ளே என்ன இருக்கிறது, கர்னல்?"

"நிச்சயம் உனக்குச் சொல்லவேண்டுமா ராம்குமார்?"

"வெடிகுண்டு போன்ற சமாசாரம் இருக்காதே கர்னல்?"

"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறதென்று எனக்கும் தெரியாது. வாசுதேவ் போனில் சொல்லவில்லை. லைனை பக் பண்ணுவது இந்த நாட்களில் எவ்வளவு எளிதான வேலை!"

"ஒரு ஹாக்-ஸா கிடைக்குமா கர்னல்?" என்றான் ராம்குமார், பெட்டியின் பூட்டை ஆராய்ந்து கொண்டு.



"என்ன ஸா?"

"ஹாக்-ஸா. சாண் நீளத்திற்கு, முழ நீளத்திற்கும் கிடைக்குமே சின்ன அரம், அது!"

அந்த நேரம் அறையின் அழைப்பு மணி இரண்டு முறை ஒலித்தது.

"கமின்" என்றான் முருகபூபதி ராம்குமாரிடம் பெட்டியை வைத்து விடும்படி ஜாடை காட்டினான்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவன் ஹோட்டல் பேரர்.

"யுவர் டின்னர் ஸார்..." தொப்பியை லேசாக அசைத்துச் சாப்பாடு ஏந்திய டிராலியை டைனிங் மேஜையருகே நிறுத்தினான் பேரர்.

"ராம், உனக்கு ஏதாவது?"

"நோ தேங்க்ஸ், கர்னல்."

"என்ன பேரர், எதற்கு நிற்கிறாய்?"

"பில் சார்." பேரர் பில்லை ஒரு தட்டில் வைத்து நீட்டினான். முருகபூபதி சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பேனாவை எடுத்து பில்லை மடியில் வைத்துக் கொண்டு சரசரவென்று நீளமாகக் கையெழுத்துப் போட்டான்.

"பேரர், எனக்கு ஒரு ஹாக்-ஸா கிடைக்குமா?" பேரர் ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு, "எஸ் ஸார்," என்று அகன்றான்.

"விக்டோரியா ஹோட்டல் சர்வீஸ் அப்படி. எகிப்தியர்கள் புதைத்துவைத்த தேன் பாட்டில் வேண்டுமென்று கேட்டால்கூட எஸ் சார்தான்." பேசிக்கொண்டே

முருகபூபதி யோசித்தான். பெட்டியை விஜய் தாக்கரிடம் ஒப்படைக்குமுன் அதற்குள் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவனை உந்தியது. ராம் குமாரை விட்டுத் திறக்கச் சொன்னால் பெட்டியைத் திறந்து கொடுக்கச் சொல்லித்தான் அவனுக்கு உத்தரவாம் என்றுகூடச் சமாளிக்கலாம்.

ஐந்து நிமிடங்களில் ராம்குமாரின் கைக்கு ஹாக்-ஸா வந்து சேர்ந்தது. ராம்குமார் அதைக் கவனமாகப் பிடித்துக் கொண்டு பெட்டியில் நீட்டிக் கொண்டிருந்த பூட்டுப் பகுதியை அறுக்கத் தொடங்கினான்.

★

கலைவாணி ஜன்னல் வழியாக இருட்டை வெறித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கைகளில் அணிந்திருந்த வளையல்கள் மெல்லிய ஓசையை எழுப்பின.

"அக்கா," என்று பொன்விழியின் குரல் வந்தது. "நீங்கள் இன்னும் தூங்கவில்லையா, என்ன?"

"தூக்கம் எப்படி வரும் பொன்விழி? காலையில் ரயிலிலேயே பிரிந்து போனவர்தான். ராம்குமாரை அப்புறம் பார்க்கவே முடியவில்லையே!" கலைவாணியின் குரலில் ஏக்கம் தோய்ந்திருந்தது.

"அதுதான் ஒரு போன் வந்ததே, அக்கா." பொன்விழி கட்டிலிலிருந்து இறங்கி, பழக்கப்படாத அந்த அறையில் தன் கைகளை முன்னே நீட்டிக்கொண்டு சுவரை அடைந்து அங்கிருந்து தடவிக் கொண்டே ஜன்னலை



நெருங்கினாள். கலைவாணியின் தோள்களைப் பற்றி ஆதரவாக வருடினாள்.

"நான் டில்லிக்குப் போனது டான்ஸ் நிகழ்ச்சிக்காக. எனக்குத் துணையாக வந்த ராமை மிலிட்டரி வேலை கொடுத்து வம்பில் மாட்டிவிட்டு விட்டார்களே என்று என் மனது அடித்துக் கொள்கிறது பொன்விழி. அவருக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாதே என்று நான் நடுங்கிக் கொண்டிருக்கிறேன். இரு, யாரோ வருவது போல் இருக்கிறது. ச்சே! அது ராம் இல்லை. வேறு யாரோ!"

அந்த வேறு யாரோ, விஜய்தாக்கரால் கலைவாணியையும், பொன்விழியையும் கண்காணிக்க ஏற்பாடு செய்யப் பட்ட ஆள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஃ

ராம்குமார், அந்தப் பூட்டை முழுவதுமாக அறுத்து முடிப்பதற்குள், குளிர் அறையிலிருந்த போதும், நெற்றி நிறைய வியர்வைக் குமிழ்கள்.

முருகபூபதி அந்தப் பெட்டியை மடி மீது வைத்துக் கொண்டு திறந்தான்.

உள்ளே ஓர் அழகான பாலிதீன் கவர் இருந்தது. அதன் மீது Top secret என்று ஆங்கிலச் சிகப்பு எச்சரிக்கை. அதே பொருளைக் கொடுக்கும் ரஷ்ய எழுத்துக்கள். முருகபூபதி ஜெலட்டின் ஸ்டிக்கை எடுப்பது போல் அந்தக் கவரைக் கவனமாக வெளியே எடுத்தான். கவருக்குள்ளிருந்து சதுரமாக கறுப்பு உறை போட்ட அந்தப் பொருளை வெளியே எடுத்தான். ஏறக்குறைய ஒரு கிராமஃபோன்

ரெக்கார்டின் மெல்லிய பதிப்புப் போல் அது இருந்தது. சதுர உறையின் நடுவில் ஒரு வட்டமான துளையும், அதன் வழியே பிரவுன் நிறத்தில் பளபளக்கும் மெல்லிய தட்டும் தெரிந்தன. லாரென்ட்ஸ் என்ற கம்பெனியின் பெயருக்குக் கீழே சில வாசகங்கள்-ரஷ்ய மொழியில்.

அதற்குக் கீழே Single sided / Double Density / Softsectored / Serialised Disk என்று ஆங்கில மொழிபெயர்ப்பு.

"திஸ் ஈஸ் எ ஃப்ளாப்பி," என்றான் முருகபூபதி.

"ஃப்ளாப்பி என்றால் கம்ப்யூட்டரில் பொருத்தபடும் ஒரு டிஸ்க்," என்றான். எழுந்தான். ராம்குமாருடன் கை குலுக்கினான்.

"இந்த தேசத்திற்காக நீ நிறையச் செய்திருக்கிறாய் யங் மேன். போய் வா" என்றான்.

ராம்குமார் அந்த அறையிலிருந்து ஏறக்குறைய முதுகில் கைவைத்துத் தள்ளப்பட்டவன் போல் வெளியில் வந்தான்.

கீழே இருந்த ரெஸ்ட்டாரண்டுக்குள் நுழைந்தான்.

ரெஸ்ட்டாரண்ட் பாதி இருளில் இருந்தது. ராம் குமார் மிக இருட்டான மூலை ஒன்றைத் தேடிப் பிடித்தான். உட்கார்ந்தான். கை சொடுக்கிப் பேரரை அழைத்து, காபி ஒன்றை ஆர்டர் செய்தான்.

சில தீவிரமான சந்தேகங்கள் தோன்றியிருந்தன. அந்தச் சந்தேகங்களுக்கு என்ன பதில் என்று புரியவில்லை. ஹிப்-பாக்கெட்டிலிருந்து ஜான் செம்பருத்தியின் போட்டோவை எடுத்தான். அவன் அமர்ந்திருந்த மேஜையில் ஒரு மெழுகுவர்த்தி இருந்தது. அலங்காரமான



பித்தளைத் தட்டில் தீப்பெட்டி ஒன்று இருந்தது. தீப்பெட்டியை எடுத்துக் குச்சியை உரசி மெழுகு வத்தியைப் பற்ற வைத்தான்.

மெழுகுவத்தி தந்த வெளிச்சத்தில் கர்னலின் போட்டோவைப் பார்த்தான். கர்னலின் மூக்குத் தண்டில் ஒரு வெட்டு இருந்தது. அதைக் கையால் தேய்த்துப் பார்த்தான். அந்த வெட்டு மறையவில்லை. நிச்சயம் இந்த வெட்டு கர்னலின் முகத்தில் நிரந்தரமாக இருக்கும் வெட்டு என்று தீர்மானித்தான். சற்று நேரத்திற்கு முன்னால் பார்த்துவிட்டு வந்த கர்னலின் முகத்தில் அந்த வெட்டு இருந்ததா என்று யோசித்துப் பார்த்தான். இல்லை போல் பட்டது.

மேலும் கர்னல் கேட்ட அந்தக் கேள்வி.

"இந்தப் பெட்டியின் சாவி எங்கே?"

கர்னலுக்குச் சாவி ஏன் வந்து சேரவில்லை? தன்னிடம் கூட சாவி இல்லை என்றுதானே வாசுதேவ் சொன்னான்?

கர்னல் என்னை ஓர் அன்னியனாக வைத்துப் பேசி னாரே, ஏன்? கர்னலுக்கு இந்த ராம்குமாரைப் பற்றிச் சொல்லப்படவில்லையா?

கர்னல் எப்போதும் அரைக் கண்ணாடி அணிந்து தான் படிப்பது வழக்கம், எழுதுவது வழக்கம் என்று சொன்னார்களே? கர்னல் கண்ணாடி அணியாமல் ஹோட்டல் பில்லில் கையெழுத்துப் போட்டாரே, தற் செயலாக நடந்த விஷயமா?

அப்புறம் பில்லில் கர்னல் போட்ட அந்தக் கையெழுத்து!

ராம்குமார் மறுபடி அந்த போட்டோவை எடுத்துப் பார்த்தான். போட்டாவில் ஜான் செம்பருத்தியின் மார்பில் அவர் போட்ட கையெழுத்து இருந்தது. ஓர் அங்குல நீளக் கையெழுத்து. ஹோட்டல் பில்லில் கர்னல் ஒரு முழ நீளத்திற்கல்லவா கையெழுத்து போட்டார்?

கர்னலைச் சந்தேகிக்கிறாயா, ராம்குமார்?

ஆம், ஆம், ஆம் இவர் நிஜமான கர்னலாயிருக்க முடியாது.

அவசரப்பட்டுத் தன் கையாலேயே பெட்டியைத் திறந்து அந்த ஃபிளாப்பியையும் அவரிடம் கொடுத்து விட்டது, இமாலய முட்டாள்தனம். ராம்குமாருக்கு வியர்க்க ஆரம்பித்தது. என்ன செய்யப் போகிறேன்? என்ன செய்யப் போகிறேன்?

பேரர் கொண்டு வந்த காபியை வாயில் சரித்துக் கொண்டான்.

சட்டென்று எழுந்தான். கண்களை உன்னிப்பாக்கிக் கொண்டு பார்த்தான்.

அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து ஹோட்டலின் வாசல் தெரிந்தது. அங்கே ஒரு ஜீப் வந்து, நின்றது. போலி கர்னல் ஜான் செம்பருத்தி அந்த ஜீப்பில் ஏறுவது தெரிந்தது.

அவர் கையில் அந்தப் பெட்டி இருந்தது.



# 11

ஜீப்பின் பின்னால் ஏறக்குறைய ஒளிந்து உட்கார்ந்திருந்த விஜய்தாக்கர் அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டான்.

"குட் ஷோ முருகபூபதி" என்றான். "உங்களையும், ஒரிஜினல் ஜான் செம்பருத்தியையும் ஒன்றாக நிறுத்தி வைத்தால் எனக்கே சந்தேகம் வந்துவிடும், யார் அசல், யார் டூப்ளிகேட் என்று"

"விஜய், ராம்குமார் என்னைச் சந்தேகிக்கிறானோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது."

"ஏதாவது கேள்விகள் கேட்டானா?"

"இல்லை. கிளம்பும்போது அவன் முகம் காட்டிக் கொடுத்தது."

"அவனை முடித்து விடலாம் என்கிறீர்களா?"

"முதலில் இந்த ஃப்ளாப்பியில் என்ன இருக்கிறது என்பதை ஆராயலாம். அப்புறம் யார் யாரைத் தீர்த்துக் கட்டுவது என்ற லிஸ்ட்டைத் தயாரிக்கலாம்."

ஜீப் சென்னையில் சில சிக்கலான சாலைகளில் பிரயாணம் செய்து, ஜெமினி மேம்பாலத்தில் ஏறி இறங்கி நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையைப் பிடித்துக் கொண்டது. முத்து மணிகளைக் கோர்த்த மாலைபோலப் போக்குவரத்து. சரேல் சரேல் பிரேக்குகளுடன் ஜீப் ஹாடோஸ் சாலையில் திரும்பி, கல்லூரிச் சாலையை வருடி அதிலிருந்து பிரிந்து ஒரு சிறு சந்தில் நுழைந்தது. மரங்கள் அடர்ந்த ஒரு காம்பவுண்ட் கதவு, ஜீப்பின் விளக்குகளைப் பார்த்ததும் அவசரமாகத் திறக்கப்பட்டது. கட்டடத்தின்

வாசலில் நின்றிருந்தவன் விஜய்தாக்கரைப் பார்த்ததும் விறைப்பானான். ராணுவ மரியாதையைச் செலுத்தினான்.

வெளியே பழைமையும், உள்ளே நூதனமுமாக இருந்தது கட்டடம்.

அவர்கள் பயிற்சி பெற்ற லாகவத்தோடு ஷூக்கள் ஒலிக்க உள்ளே போனார்கள். சின்ன ஹாலை அடுத்துக் கண்ணாடிக் கதவு போட்ட ஓர் அறை. உள்ளே மெலிதான வெளிச்சம். கதவருகே நின்று ஷூக்களைக் கழற்றினார்கள். உடைகளைத் தட்டிக் கொண்டார்கள். கதவைத் திறந்து உள்ளே போனார்கள்.

குளுமை செய்யப்பட்ட அறை. கீழே தூசு சேரக் கூடும் என்பதால் கம்பளம் விரிக்கப்படவில்லை. ராஜஸ்தான் டைல்ஸ்களின் மழமழப்பு. நடு மையமாக ஆளுயரத்திற்கு இருந்த கம்ப்யூட்டர் காபினெட்டை விஜய்தாக்கர் காட்டினான்.

"உங்கள் நண்பர் முருகபூபதி. ஆரம்பியுங்கள்..."

முருகபூபதி ஃப்ளாப்பி டிரைவைத் திறந்து ஃப்ளாப்பியைப் பொருத்தினான்.

டி. ஐ. ஆர். என்று பட்டன்களைத் தட்டினான். "ஃப்ளாப்பியில் என்ன 'பொருளடக்கம்' என்பதை Directory என்பது சொல்வதற்காக இந்த ஆணை," என்று விஜய்தாக்கரிடம் விளக்கினான். Enter என்று பட்டனைத் தொட, டி. வி. திரை போல் இருந்த அமைப்பில் சில நட்சத்திரச் சிமிட்டல்கள். முருகபூபதி நெஞ்சு படபடக்கத் திரையைப் பார்த்தான்.

"KB? XX? KL? AB!! Z?" என்று கம்ப்யூட்டர் திரை என்னவோ பேத்த ஆரம்பித்தது. ஸ்டெடி ஆணை கொடுத்தான்.



"ஸாரி, உங்களுக்கு நான் உதவ முடியாது. என்னை என் அம்மாவிடம் அழைத்துப் போங்கள்,' என்று பச்சை எழுத்துக்கள் சிரித்தன.

"ஷிட்!" என்றான் முருகபூபதி. "இந்த ஃப்ளாப்பியை இந்தக் கம்ப்யூட்டரில் படிக்க முடியாது. சங்கேத வார்த்தை இருந்தால்கூட ஆராய்ந்து விடலாம். இது ஸீரியலைஸ்டு ஃப்ளாப்பி."

"புரியாத பாஷையில் பேசாதீர்கள் முருகபூபதி."

"ஸீரியலைஸ்டு என்றால் ஒரு குறிப்பிட்ட கம்ப்யூட்டரில் பொருத்தும்போது மட்டும் சொன்ன பேச்சைக் கேட்கும். அது அம்மா என்று சொல்வது அந்தக் கம்ப்யூட்டரைத்தான்."

"எங்கேயிருக்கிறது அந்தக் கம்ப்யூட்டர்?"

"என்னைக் கேட்கிறாயா? நிலாவிலும் இருக்கலாம். சமுத்திரத்திற்கு அடியிலும் இருக்கலாம். யாருக்குத் தெரியும்? போய் ஒரிஜினலின் காலரைப் பிடித்து உலுக்கு."

அந்த அறையிலிருந்து விஜய்தாக்கர் வெளிப்பட்டான். அதீத கோபத்தில் இருந்தான். அந்த ஏ. ஸி. அறையில் இன்னும் சிறிது நேரம் இருந்தால் அவனுடைய ரிவால்வர் அவனையறியமாலேயே குண்டுகளை வெளியே அனுப்பி அறையில் இருந்த கம்ப்யூட்டரைக் கொன்று விடும் என்ற பயம் இருந்தது.

முருகபூபதி வியர்த்துப் போயிருந்த நெற்றியை ஒரு முறை ஒற்றியெடுத்தான். இரண்டு கிளாஸ்களையும் ஸ்காட்சையும் வரவழைத்தான். டம்ளர்களில் ஸ்காட்சைச் சரித்து, இரண்டு துண்டங்கள் ஐஸ் என்று தீர்மானித்து ஸ்காட்ச் டம்ளர்களில் அவற்றை மிதக்கவிட்டு விஜய்தாக்கரிடம் நீட்டினான்.

விஜய் தாக்கர் அந்த ஸ்காட்ச் டம்ளரை மறுப்பு ஏதுமின்றி வாங்கித் தொண்டையில் சரித்துக் கொண்டான். விஜய்தாக்கர் நிறையப் போர்முனைகளை அவனுடைய வாழ்நாளில் சந்தித்திருக்கிறான். நிலைமையை ஆராய்ந்து ஆணைகள் பிறப்பித்திருக்கிறான். நிறையச் சுட்டிருக்கிறான். அந்த ஆணைகளில், அந்தச் சுடுதல்களில் எல்லாம் அவன் மூளைக்கு அதிக வேலை கொடுத்ததில்லை.

இப்போது ஒரு கம்ப்யூட்டர் சவால் விடுகிறது. அவனுடைய வெறுப்பை அதீதமாகக் கிளறி விடுகிறது. இதை விடப்போவதில்லை. டம்ளரில் இன்னொரு லார்ஜ் ஸ்காட்சைச் சரித்துக் கொண்டான். விழுங்கினான். ஸ்காட்ச் தீக்குஞ்சு போல் தொண்டையில் இறங்கியது.

"மிஸ்டர் டூப்ளிகேட் கர்னல் ஜான் செம்பருத்தி," என்று அழைத்தான்.

சட்டென்று ரிவால்வரை உருவி முருகபூபதியின் நெஞ்சுக்குக் குறி வைத்தான். "நாம் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியும். நாம் என்ன காரியத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியும். இதில் எவ்வளவு ரிஸ்க் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். மாட்டிக் கொண்டால் உங்களுடைய உயிர், என்னுடைய உயிர். நான் என் உயிரை அவ்வளவு சுலபமாக இழக்கத் தயாராக இல்லை. நீங்கள்?"

"விஜய்! துப்பாக்கியை இறக்கு. யாராவது பார்த்து விடப் போகிறார்கள்!"

"பின் அந்த ஃப்ளாப்பியில் என்ன எழவு எழுதியிருக்கிறது? அதில் என்ன விஷயம் அடங்கி இருக்கிறது? உங்களுக்குக் கம்ப்யூட்டரைப் பற்றித் தெரியும். அதன்



பாஷைகள் தெரியும். சரியான ஆணைகளைக் கொடுக்காமல் நீங்கள் திணறுகிறீர்கள்."

"இப்போது நான் என்ன சொன்னாலும் உன் மண்டையில் ஏறாது" என்றான் முருகபூபதி. "ஒரிஜினலிடம் பேசலாம். அதுதான் வழி."

விஜய் தாக்கர் கொஞ்சம் சிந்தித்தான். எழுந்தான். துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டான். "கம் லெட்ஸ் கோ."

★

ஹாடோஸ் சாலையின் இருளான நிழலில் அந்த ஆட்டோ நின்றிருந்தது.

"எத்தனை நேரம் சார் இப்படியே நிலாவைப் பார்த்துட்டு இருக்கிறது?" ஆட்டோ டிரைவரின் குரல் சூடாக வந்தது.

"ஷ்ஷ்..." என்றான் ராம்குமார், உதடுகளில் விரலை வைத்து, அவனை அடக்கி, "இருநூறு ரூபாய் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் வெயிட் பண்ணித்தான் ஆக வேண்டும். ஜீப் வெளியே வரட்டும், நாமும் கிளம்பி விடலாம்."

"என்னாத்துக்கு சார் அந்த ஜீப்பை ஃபாலோ பண்றே?"

"கேள்வி கேட்டால் பத்து ரூபாய் குறைத்து விடுவேன்!" என்றான் ராம்குமார். உடன் சுறுசுறுப்பானான். "ஜீப் வந்து விட்டது. அதற்குத் தெரியாமல், அதே

சமயம் அதைப் பார்வையிலிருந்து விலக்காமல் ஃபாலோ பண்ணு."

★

ஜீப் பெசன்ட் நகர் வீட்டை அடைந்தபோது, விஜய் தாக்கர் என்ஜினை அணைத்து விட்டுக் கீழே குதித்தான். முருகபூபதி விசுவாச நாய்க் குட்டி போல அவன் பின்னே நடந்தான். வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

ஹால் பெரிதாக இருந்தது. நாற்காலிகள், ஃப்ரிட்ஜ், டி. வி. கண்ணைக் கவரும் பெரிய சைஸ் வெங்கடாஜல பதிக்குக் கீழே ஊதுபத்திகள் தங்கள் உயிரை மில்லிமீட்டர் மில்லிமீட்டராக வாசனையோடு தியாகம் செய்து கொண்டிருந்தன. ஹால் மையத்திலிருந்து தொட முடியாத உயரத்தில் அந்தரத்தில் சாண்டிலியர். அந்த சாண்டிலியரிலிருந்து பக்தி மயமான மஞ்சள் ஒளி ப்ரேம் போட்ட ஒரு குடும்பப் படத்தில் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா குழந்தைகள், பலூன், நாய்க்குட்டி.

டீப்பாயில் காட்சி அளித்த ஞானபூமி, ஆண்டவன் அருள், கிரகங்களின் பெயர்ச்சி.

"புதிதாக யார் நுழைந்தாலும் இங்கே ஓர் அமைதியான குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று நினைப்பதற்காக இந்த செட்டப்."

"நீ யாவற்றையும் திட்டமிட்டுச் செய்கிறவன், விஜய்."

விஜய் தாக்கர் ஹாலைக் கடந்து, உள்ளறைக்குச் சென்று உள்ளறைச் சுவரில் சுவரோடு சுவராகப் பொருத்தியிருந்த ஒரு கதவைத் திறந்தான்.



கதவுக்கு அப்பால் மாடிக்குச் செல்லும் வழி இருந்தது. அந்த வழி மாடியின் ஒரு தனி அறையில் கொண்டு போய் விட்டது.

அந்த அறையின் கதவைத் திறந்து விஜய்தாக்கர் நுழைந்தான். இருபதிற்குப் பத்து என்ற அளவில் இருந்த அறை முழுக்க முழுக்க வெள்ளை பெயிண்டால் நனைந்திருந்தது.

அறைச் சுவரில் ஒரு தேசப் படம் மாட்டப்பட்டிருந்தது. தேசப் படம் முழுக்கச் சிகப்புக் கோடுகள் ஊடுருவின. இன்னொரு பக்கச் சுவரில் சோழர்களும், பாண்டியர்களும் உபயோகப் படுத்திய இரண்டு வாட்கள் அலங்காரமாய் எதிர் எதிராய்ப் பதிக்கப்பட்டிருந்தன.

அறையின் மையத்தில் ஒரு சுழல் நாற்காலி இருந்தது. சுழல் நாற்காலியில் கர்னல் ஜான் செம்பருத்தி அமர்ந்திருந்தார். நாற்காலியின் கைப்பிடிகளோடு கர்னலின் கைகள் பிணைக்கப்பட்டிருந்தன. கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டுக் கர்னல் நிமிர்ந்தார். அந்தக் கண்களில் சோகம் மண்டியிருந்தது. ஒரு விதமான மயக்க நிலையை அந்தக் கண்கள் அடைந்திருந்தன.

விஜய்தாக்கர் அவரை நெருங்கினான்.

"நீங்கள் தூங்கியிருப்பீர்கள் என்று நினைத்தேன் கர்னல்" என்றான் முகத்தில் புன்முறுவலுடன்.

கர்னல் ஜான் செம்பருத்தி மறுமொழி பேசவில்லை.

"இவரைத் தெரிகிறதா பாருங்கள் கர்னல்?" என்று விஜய்தாக்கர் தன் பின்னால் இருந்த முருகபூபதியை முன்னால் இழுத்தான்.

கர்னலின் கண்களில் வியப்பு ரேகை ஓடியது.

"அந்தக் காதோர நரை முடி, தலையைப் பின்னோக்கி வாரியிருக்கும் நேர்த்தி, அரைக் கண்ணாடி, உயரம் அகலம் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா கர்னல்?"

கர்னல் ஜான் செம்பருத்தி இப்போதும் பதில் சொல்லவில்லை.

"கர்னல், ராம்குமார் கொண்டு வந்த பெட்டியை இவரிடம்தான் கொடுத்திருக்கிறான், இவரை ஒரிஜினல் கர்னல் என்று எண்ணி. எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறேன் தெரியுமா, கர்னல் - இவரை உங்களைப் போல் மாற்ற கிட்டத்தட்ட ஒரு வருடம். உங்களுக்கு இருக்கும் அத்தனை பயிற்சிகளும் இவருக்கும் இருக்கிறது - ஒரே ஒரு விஷயத்தைத் தவிர."

விஜய்தாக்கர் பேச்சை நிறுத்தினான்.

"கர்னல் இன்றைக்கு மௌன விரதம் போலிருக்கிறது. அவர் பேச மாட்டார். அவருக்குப் பதில் நாமே பேசி விடுவோம். என்ன சொல்கிறீர்கள் டூப்ளிகேட்?"

"நம்மிடம் பேசாத அந்த நாக்கு அவருக்கு எதற்கு விஜய்?"

"மிரட்டிப் பார்க்கிறாயா?"

"ஒவ்வொர் ஆசாமிக்கும் ஒவ்வொரு வீக்னெஸ் இருக்கிறது கர்னல். உங்களுடைய சரித்திரமே எனக்குத் தெரியும். உங்களுக்கு நிறைய நாட்கள் கடந்து கல்யாணம் ஆயிற்று. இல்லையா, கர்னல்?"

கர்னல் பதில் பேசவில்லை.

"உங்கள் மனைவி பெயர் அகிலா. அவள் மிக அழகாக இருப்பாள். இராமநாதபுரத்தில் ரெயில்வே பீடர் சாலையில் உங்களுக்கு ஒரு வீடு இருக்கிறது. அந்த



வீட்டில் உங்கள் அகிலா இந்நேரம் உங்களைப் பற்றிய கனவில் ஆழ்ந்திருப்பாள். உங்களுடைய ஒரே மகன் திலீப் கொடைக்கானலில் லேக் வ்யூ கான்வென்டில் யூனிபார்ம் மாட்டிக் கொண்டு உயர்கல்வி கற்கிறான். இராம நாதபுரம் வீட்டில் அகிலாவைத் தவிர, உங்களுடைய வயதான அம்மா நெற்றியில் மிகப் பெரிய குங்குமப் பொட்டுடன் இருக்கிறாள். அவளுக்குத் துணையாக உங்கள் அப்பா. பேரனுக்காகத் தங்கத்தில் காப்பு, செயின் எல்லாம் செய்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறார். இவர்களை எல்லாம் சொடுக்குப் போடுவதற்குள் உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்துவேன் கர்னல். அகிலாவை எப்படிக் கையாளுவேன் தெரியுமா? மிலிட்டரியின் மோசமான அணுகு முறைகள் உங்களுக்குத் தெரியும்! உங்களுடைய அன்புக்குரியவர்கள் அத்தனை பேரும் இல்லையென்று ஆகிவிட்டால் நீங்கள் யாருக்காக எதற்காக இருக்க வேண்டும் கர்னல்? தேசசேவை என்பது குடும்ப சேவைக்கு அப்புறம்தான் இல்லையா?"

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும் ஆபீசர்?"

"தட்ஸ் குட்! கர்னலுக்குச் சூடாக ஒரு கப் டீ வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள். நம்முடைய நண்பர் ஒரு சிறு பயணத்தை மேற்கொள்ளப் போகிறார்."

"ஆபீசர், நீ நிறையத் தப்புக் கணக்கு போடுகிறாய். உனக்குத் தெரியாத விஷயங்கள் நிறைய இருக்கின்றன. உதாரணமாக-"

"உதாரணமாக?"

"இந்த ஃப்ளாப்பியை ராம்குமாரின் உதவியில்லாமல் நான் படிக்க முடியாது. ராம்குமார் யாரென்று தெரியுமா உனக்கு?"

"ராம்குமார் யார்? டான்ஸ் ஆடும் காதலிக்குத் துணையாக டெல்லி சென்றவன்!"

"ராம்குமார் எனக்கும், வாசுதேவிற்கும், இன்னும் இரண்டு பேருக்குமே தெரிந்தவன்? முதல் தர ஆபீசர். அரசாங்கம் நியமித்திருக்கும் ஸ்பெஷல் ஆபீசர். முதலில் அவனைக் கொண்டு வா. அவனில்லாமல் இந்த ஃப்ளாப்பியை நான் ஒன்றும் செய்துவிட முடியாது" என்றார் கர்னல் ஜான் செம்பருத்தி.

"யூ மீன் ராம்குமார் ஓர் ஒற்றன்!" விஜய்தாக்கரின் விழிகள் விரிந்தன.

"இந்தியாவின் ஒற்றன்" என்று திருத்தினார் கர்னல்.

# 12

ராம்குமார் இருட்டை வெறித்தான். வேட்டை நாய் போல இன்றையப் பொழுது ஆட்களைத் துரத்துவதிலேயே போய் விட்டதே என்று சலித்துக் கொண்டான்.

"ஏன் சார்! முதல்ல ஜீப்பைத் துரத்துன்னீங்க. துரத்தினேன். காலேஜ் ரோடுல மறைஞ்சு நின்னீங்க. இப்ப பெசன்ட் நகர்ல வந்து இருட்டில் வெறிச்சுப் பாக்க ஆரம்பிச்சிட்டீங்க. ஆட்டோவை எத்தனை நேரம்தான் வெயிட்டிங்ல போட முடியும்? துட்டைக் குடுத்து என்னை அனுப்பிடுங்க" என்று ஆட்டோக்காரன் நச்சரிக்க ஆரம்பித்தான்.



ராம்குமார் யோசித்தான். ஆட்டோவை அனுப்பி விடுவதே அவன் செய்யப் போகும் செயல்களுக்கு நல்லது என்று முடிவு செய்தான். பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டான்.

ராம்குமார் தன் மணிக்கட்டில் இருந்த வாட்சின் மைக்ரோபட்டனை அழுத்தி ஒளிபெற்று மணி பார்த்தான். 11.45.

அந்தச் சின்னப் பங்களாவை நிமிர்ந்து பார்த்தான். நிழற்படம் போலத் தெரிந்தது. கேட்டருகில் ஓர் இளைஞன் நின்றிருந்தான். நிச்சயம் அவன் இடுப்பிலோ அல்லது பின்னாலிருந்த காபினிலோ தயார் நிலையில் துப்பாக்கிகள் இருக்கும். ராம்குமார் எப்படியும் அந்த வீட்டிற்குள் பிரவேசிப்பது என்று நிச்சயம் செய்தான்.

கல்லூரிச் சாலை பங்களாவிற்குள் நுழைவது கஷ்டமான காரியம் என்று அப்போது தோன்றியது. ஆனால் இந்தப் பங்களா அப்படி இல்லை. கொஞ்சம் மந்திரம், கொஞ்சம் தந்திரம் போட்டால் உள்ளே நுழைந்து விடலாம் என்று தீர்மானித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் நின்றிருந்த இடத்திலிருந்து உயரமான காம்பவுண்டுச் சுவருக்கு மேலும் தலை நீட்டியிருந்த இருட்டு மரங்கள் தெரிந்தன. பங்களாவின் ஜன்னல்களில் மின்சார வெளிச்சம் வழிந்தது. அவனுக்கு நேர் பின்னே ஒரு ராட்சஸ மரம் எழும்பி சாலையில் பாதிவரை கிருஷ்ணன் பிடித்த கோவர்த்தன கிரியைப் போல் நிழலாக்கியிருந்தது.

ராம்குமார் அந்த மரத்தை நெருங்கினான். அதைத் தட்டிக் கொடுத்தான். 'வீட்டிற்கொரு மரம் என்று பெரியவர்கள் தெரியாமலா சொன்னார்கள்? நீ எனக்கு உற்ற தோழனாய் உதவப் போகிறாய்...' ஒரு தேர்ந்த குரங்கு

போல மரத்தின் மீது ஏறினான். அடர்ந்து பரந்த கிளைகளில் வாகாய் உட்கார்ந்து கொண்டு பார்த்தான். இப்போது அந்தப் பங்களா பூரணமாகத் தெரிந்தது.

காம்பவுண்டுச் சுவருக்கு உள்புறம் சற்று இடைவெளி விட்டு ஓர் ஆள் நடந்து கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு சக்தி வாய்ந்த டார்ச் இருந்தது. அவன் ஒரே சீராக நேர்கோட்டில் காம்பவுண்டுக்கு இணையாக இந்த முனையிலிருந்து அந்த முனைவரை நடந்தான். நின்றான். திரும்பினான். டார்ச்சைக் கீழே காட்டிக் கொண்டே வந்த வழியே இந்த முனைக்கு நடந்தான்.

கேட் காவலைவிட இந்தக் காவலைத்தான் அவர்கள் அதிகம் நம்பினார்கள் என்று தோன்றியது. அவனைக் கடந்து போவது ஒரு சவாலாகத்தான் இருக்கப் போகிறது. ராம்குமார் தன் வாட்சில் நேரத்தைக் கவனிக்க ஆரம்பித்தான்.

ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, பத்து, பதினேழு, பதினெட்டு-சரியாக இடது முனையிலிருந்து வலது முனைக்கு நடக்கப் பதினெட்டு விநாடிகள். அதே போல வலது முனையிலிருந்து இடது முனைக்கு வரப் பதினெட்டு விநாடிகள்.

ராம்குமார் உட்கார்ந்திருந்த மரத்தின் ஒரு நட்பான கிளை வலது முனைக்கருகே நீண்டிருந்தது. ராம்குமார் மெல்ல அந்தக் கிளைக்கு நகர்ந்தான். அதன் பலத்தைச் சோதித்துவிட்டு மெதுவாக அதில் ஊர்ந்து அதன் முடிவுக் கருகில் வந்தான். கிளை அவன் பாரத்தில் வளைந்து கொடுத்தது.

அந்த டார்ச் ஆசாமி இயந்திரத்தனமாக வலது முனையைத் தொட்டுவிட்டுத் திரும்பியிருந்தான். ஒன், டூ, த்ரீ...ராம்குமார் கிளையின் முடிவிலிருந்து சருகு போல் நழுவிக் காம்பவுண்டில் ஒற்றைக் காலைப் பதித்து, அதில் செருகப்படிருந்த கண்ணாடி முனைகள் ஷூவில் அழுந்த ஊன்றி அழுத்தம் கொடுத்து உள்ளே குதித்தான். அப்படிக் குதிக்கும்போது தன் சட்டைப் பாக்கெட், பாண்ட் பாக்கெட் இவற்றை அழுத்திக் கொண்டு எதுவும் குலுங்கிச் சப்தம் செய்து விடாமல் பார்த்துக் கொண்டான். குதித்த இடம் முழம் உயரத்திற்குப் புல் தரை. விழுந்தவுடன் தன்னைப் பந்து போல் சுருட்டிக் கொண்டு இருட்டுக்குள் உருண்டான்.



டார்ச் ஆசாமி நின்றான். ராம்குமார் விறைத்தான். தொலைந்தேன் என்று நினைத்தான். அந்த ஆசாமி தன் பாண்ட் பையிலிருந்து எதையோ உருவ, ராம்குமார் தன் நெஞ்சில் பாயப் போகும் தோட்டாவிற்காக அஞ்சிச் சுருங்கிக் கொள்ள, அவன் ஒரு சிகரெட்டை வாயில் பொருத்திக் கொண்டான். லைட்டரால் பற்ற வைத்துக் கொண்டு தன் வழியே நடந்தான். ராம்குமார் தன் நட்சத்திரங்களை வாழ்த்தினான். பங்களாவின் சுவரை ஒட்டிப் பின்புறம் ஓடினான். சட்டென நின்று விட்டான். அவனுக்குச் சற்று முன்னே இரண்டு நிழலுருவங்கள் தெரிந்தன. வேகமாக நடந்தன. ஜீப்பில் ஏறின. விளக்குகளைப் போட்டுக் கொண்டு ஜீப் பங்களாவைச் சுற்றிக் கொண்டு வாசலுக்கு விரைந்தது. ராம்குமார் பெருமூச்சு விட்டான்.

அவனுக்கு இன்றைக்கு அதிர்ஷ்டம் தொடர்கதை போல் வளர்ந்தது. வெகு அருகே ட்ரெயினேஜ் பைப் தரையிலிருந்து பங்களாவின் உச்சிவரை ஒரு நேரான கொடி போல் படர்ந்திருந்தது.

ட்ரெயினேஜ் பைப்பின் உச்சி அவனை மொட்டை மாடியில் கொண்டு போய் விட்டது. ஆகாயத்தின்

பின்னணியில் நின்றால் அவனைக் கீழே கண்டு கொள்வார்கள் என்று உடனே படுத்துக் கொண்டான். மெல்ல நிமிர்ந்து பார்த்தான். காற்று அவனைத் தழுவி உற்சாகம் ஊட்டியது. தூரத்து அஷ்டலக்ஷ்மி கோயிலின் கோபுரத்து மெர்க்குரி விளக்கு அவனைப் பார்த்துச் சிரித்தது.

ஜீப் வெளியேறிய பின் கேட்கள் மூடப்படும் க்ரீச் கேட்டது. ராம்குமார் காத்திருந்து காதுகளைத் தீட்டிக் கொண்டான். என்னவோ ஒரு வினோதமான ரீய்ங் ரீய்ங் கேட்கவில்லை? எங்கேயிருந்து வருகிறது அந்த ஒலி? வெகு உன்னிப்பாக ஆராய்ந்ததில் அவன் நின்றிருந்த இடத்திற்கு நேர் கீழிருந்த ஜன்னல் வழியே தப்பித்து வரும் ஒலி அது என்று புரிந்தது. ராம்குமார் ஜன்னலுக்கு மேல் இருந்த சன்ஷேடில் இறங்கினான். உட்கார்ந்தான். குனிந்து உள்ளே பார்த்தான்.

அதிர்ந்தான்!

உள்ளே ஒரு சுழல் நாற்காலியில் கட்டிப்போடப் பட்ட நிலையில் கர்னல் ஜான் செம்பருத்தி! வாசுதேவ் கொடுத்த போட்டோவில் இருந்த அந்தச் சின்ன வெட்டு கச்சிதமாக அவர் மூக்கு தண்டில் இருந்தது. நிச்சயம் இவர்தான். ஒரிஜினல் கர்னல்!

ராம்குமார் ஸன்ஷேடில் தொங்கி ஜன்னல் வழியே அறைக்குள் மீன் போல் நழுவி இறங்கினான்.

"ஹலோ ராம்குமார்!" என்றார் ஜான் செம்பருத்தி. தொய்ந்திருந்தார். கண்களுக்குக் கீழே பைகள். உதடு ஓரம் கிழிந்து சன்னமாக ரத்தக் கோடு தெரிந்தது.

"கர்னல், என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"



கர்னல் மிக லேசாகச் சிரித்தார். "நீ யார்? எங்கிருந்து அனுப்பப் பட்டாய்? என்ன செய்கிறாய்? என்னிடம் கொடுக்கும்படி அனுப்பப்பட்ட பெட்டியைப் போலிக் கர்னல் முருகபூபதியிடம் கொடுத்துவிட்டு இப்போது ஐஸ் மேல் நிற்பவன் போலத் தவித்துக் கொண்டிருக்கும் விஷயம்வரை எனக்குத் தெரியும்."

"எல்லாம் தெரிந்துமா இங்கே வந்து மாட்டிக் கொண்டீர்கள் கர்னல்?" ராம்குமார் அவரை நெருங்கி, அவருடைய கட்டுகளைத் தளர்த்த முயன்றான்.

"நோ" என்று ஆணையிடும் குரலில் சொன்னார் கர்னல். "கொஞ்சம் நிதானமாக யோசி, ராம். என்னை விடுதலை செய்துவிட்டால் நான் உன்கூட வந்துவிடலாம். ஆனால் அந்த அதி முக்கியமான ஃப்ளாப்பி? அது அவர் களிடம்தானே இருக்கிறது. அது அவர்களுக்கு உபயோக மில்லாமல் போகலாம். ஆனால் அந்த ஃப்ளாப்பி நமக்கு வெகு அவசியம், ராம்."

"நான் ஏமாந்து விட்டேன் கர்னல். போலியான ஆளிடம் பெட்டியைக் கொடுத்துத் தொலைத்து விட்டேன்."

"ஈஸி...ஈஸி...அவர்கள் அற்புதமாக வேலை செய்திருக் கிறார்கள். நவீன மருத்துவ வசதிகளை வைத்து பிளாஸ்டிக் சர்ஜரியால் முருகபூபதியை ஜான் செம்பருத்தி யாக்கியிருக்கிறார்கள்."

"இந்த ஒரு ஃப்ளாப்பிக்காக பிளாஸ்டிக் சர்ஜரியா? அர்த்தமில்லாமல் இருக்கிறதே கர்னல்?"

"யூ ஆர் கரெக்ட். இந்த ஃப்ளாப்பி விவரம் அவர் களுக்குச் சில மாதங்களுக்கு முன் சந்தேகமாய்த் தோன்றக் கூட வாய்ப்பில்லை. சர்ஜரிக்கு கிட்டத்தட்ட ஒரு வருடம்

ஆனதாம். என்றால் என்ன அர்த்தம்? அவர்களுக்கு போலி ஜான் செம்பருத்தி வேறு முக்கியமான காரணத்திற்காகத் தேவைப் பட்டிருக்கிறார்கள் ராம்."

"என்ன காரணம் கர்னல்?"

"எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லது ராம்."

ராம்குமார் கர்னலின் ரத்தக்கோட்டை வருத்தத் துடன் பார்த்தான்.

"சொல்லுங்கள், கர்னல். நான் என்ன செய்ய வேண்டும்?"

"அவர்களிடம் நான் சரடு விட்டிருக்கிறேன். ராம் குமார் இல்லாமல் அந்த ஃப்ளாப்பியில் இருப்பதை என்னால் படிக்க முடியாது என்று. அவர்கள் உன்னைத் தேடிக் கொண்டுதான் கிளம்பியிருக்கிறார்கள். அவர்களிடம் நீ மாட்டாதவரை என் பொய்க்கு ஆபத்து இல்லை. அந்த ஃப்ளாப்பியில் இருக்கும் விஷயம் வெளியாகும்வரை என் உயிருக்கு எந்த பயமும் இல்லை. ஸோ, நீ ஓடு. கண்ணாமூச்சி ஆடு. அவர்களிடம் சிக்கிவிடாதே."

"அந்த ஃப்ளாப்பி? அது ஆபத்தான கைகளில் சிக்கி யிருக்கிறதே, கர்னல்?"

"அது அடுத்த கவலை. அதற்கும் ஒரு வழி இருக்கிறது. ப்ரிகேடியர் நஞ்சப்பாவை உனக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"நாளைக் காலை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் போ. கோட்டையில் நம் நேவி ஆபீஸ் இருக்கிறது. அங்கே அவரைச் சந்தி. எல்லா விவரங்களையும் எடுத்துச் சொல்.



அந்த ஃப்ளாப்பியை விஜய்தாக்கரிடமிருந்து எப்படிக் கவர்வது என்று அவர் முடிவு செய்வார். விஜய்தாக்கரிடம் உன்னைப் பற்றிய ரகசியத்தை உடைத்து விட்டேன், யங் மேன்."

ராம்குமார் திடுக்கிட்டு நிமிர்ந்தான். "கர்னல், என்ன சொல்கிறீர்கள்?"

ஜான் செம்பருத்தி மெலிதாகப் புன்னகைத்தார். "காரணம் இல்லாமல் நான் எதையும் செய்வதில்லை ராம். நீயும் ராணுவ சர்வீஸில் இருப்பவன் என்பதைக் கண்டு பிடிக்க அவனுக்கு அதிக நாட்கள் ஆகிவிடாது. இப்போது நானாகச் சொன்னதால் அவன் இது உண்மைதானா என்று அறியச் சில இடங்களுக்குப் போவான். அவனுடைய நடவடிக்கைகளைக் கவனிக்க நஞ்சப்பாவிடம் சொல்லி ஏற்பாடு செய். உனக்கு மிக நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது, பையா."

தேர் மேல் உட்கார்ந்து கண்ணன் பேசுவது போல் அவர் பேசியதை ராம்குமார் கவனத்தோடு கேட்டான்.

"கிளம்பு. எப்படிச் சாமர்த்தியமாக உள்ளே நுழைந் தாயோ, அதே போல் வெளியேறிவிடு."

★

ராம்குமார் சாலைக்கு வந்ததும் யோசனை செய்தான். விஜய்தாக்கர் எப்படியும் தன் அண்ணா நகர் ஃப்ளாட்டில் கண்காணிப்பிற்கு ஏற்பாடு செய்திருப்பான். அங்கே வேண்டாம். பின்? ஏதாவது ஒரு லாட்ஜ் - ஒரு ராத்திரிக்குக் கிடைக்காமலா போய்விடும்? 'லக்கேஜ்

எதுவும் கிடையாதா சார்?' என்ற கேள்வியோடு கிடைத்தது.

கிடைத்த அறை சின்ன அறை. அந்த அறையில் ஒரு வாடிய மல்லிகைச் சரம் கிடந்தது. கல்யாணமான அல்லது ஆகாத ஒரு ஜோடியின் மகேஷ்-மல்லிகா கல்வெட்டு இருந்து. மெத்தைக்குக் கீழே மூட்டைப் பூச்சிகள் அவன் தூங்குவதற்காகக் காத்திருந்தன.

எல்லாவற்றையும் மறந்துவிட்டு ராம்குமார் தூங்கினான். அசதி அப்படி.

ஃ

மறுநாள் ராம்குமார் விழித்தபோது, சூரியன் 45 டிகிரி கோணத்திற்கு வந்து விட்டான். ராம்குமார் பதைத்து எழுந்து மணி பார்த்தான். ஒன்பது.

அவசரமாகக் குளித்து, சலூனில் ஷேவ் செய்து, ரெடிமேட் கடையில் மாற்றுடைகள் வாங்கி, அங்கேயே அணிந்து, கௌண்டரில் இருந்த போனை அருகில் இழுத்து அனுமதியுடன் டயல் செய்து... "எக்ஸ்க்யூஸ் மீ, எதிர் வீட்டில் இருக்கும் சிவபிரகாசத்தைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா?" என்றபோது ராம்குமார் பரபரப்பாகியிருந்தான்.

"முடியாதே சார்," என்றது எதிர்முனைப் பெண் குரல். "சிவபிரகாசமும், கலைவாணியும், பொன்விழியும் காலையிலேயே எழுந்து ரிகர்சலுக்குப் போய் விட்டார்கள்."

"எங்கே என்று சொன்னார்களா?"



"பரமேஸ்வரி ஹால் என்று சொன்னதாக ஞாபகம்."

"தாங்க்யூ," என்றான் ஏமாற்றமாக.

கலைவாணியைப் பார்க்கப் போகுமுன், ப்ரிகேடியார் நஞ்சப்பாவைச் சந்தித்து விடுவது நல்லது என்று முடிவு செய்தான். கடையில் வினோதமான கலரில் ஒரு வெய்யில் தொப்பி வாங்கி அணிந்தான். முகத்தை மறைக்கும் பெரிய கூலிங் கண்ணாடியை அணிந்தான்.

"ஆட்டோ..."

தார்ச் சாலை உருகிக் கொண்டிருந்த வெய்யில் நேரத்தில் கோட்டை வாசலில் ஆட்டோ அவனை உதிர்த்தது.

அரசியலிலும், அரசாங்கத்திலும் ஆதாயம் தேடுபவர்கள் ஒரு பக்கம். காரியம் நடக்காமல் அலையும் அப்பாவிகள் ஒரு பக்கம். ஏமாந்த முகங்களைத் தேடும் புரோக்கர்கள் ஒரு பக்கம். யாவரையும் விலக்கி ராம்குமார் நேவி அலுவலகத்தில் நுழைந்தான். விசாரித்தான்.

"ப்ரிகேடியர் நஞ்சப்பாவா? அவர் இப்போது சென்னையில் இல்லையே! அவசர விஷயமாகப் பெங்களூர் போயிருக்கிறார். நாளைதான் வருவார்."

இன்னும் ஓர் ஏமாற்றம்!

ராம்குமார் தயங்கி நின்றான். வேறு யாரிடமும் பேச விரும்பவில்லை.

வாசலில் வந்து நின்ற ஜீப் அவன் கவனத்தைக் கவர்ந்தது. ஜீப்பிலிருந்து முருகபூபதி போலி கர்னல் ஜான் செம்பருத்தியாக இறங்கிக் கொண்டிருந்தான்.

# 13

ராம்குமார் பரபரப்படைந்தான்.

முருகபூபதியின் கண்களில் சிக்கினால் ஆபத்து. இருபுறமும் அவசரமாகப் பார்த்தான். ஆண்கள் என்று போட்டிருந்த அறைக்குள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். கதவை மிக லேசாகத் திறந்து வைத்துக் காத்திருந்தான்.

முருகபூபதி அந்த இடத்தைக் கடந்து நடந்தான்.

"குட் ஆஃப்டர் நூன் கர்னல்!" என்று யாரோ கொடுத்த சல்யூட்டை வாங்கிக் கொண்டு அவன் விறைப்பாக அடுத்த அறைக்குள் நுழையும்வரை ராம்குமார் காத்திருந்து வெளியே வந்தான்.

ப்ரிகேடியர் நஞ்சப்பாவிடம் கர்னல் ஜான் செம்பருத்தி சொன்னதையெல்லாம் சொல்லும்வரை வேறு எதுவும் செய்ய முடியாது என்று தோன்றியது.

கலைவாணியைப் பார்த்து எத்தனை மணிநேரங்களாகி விட்டன! பரமேஸ்வரி ஹாலில்தானே ரிகர்சல் என்று சொன்னார்கள்.

ஃ

பரமேஸ்வரி ஹால் ஏ. ஸி. யின் சுகத்தில் ஆயிரம் இருக்கைகளும் நிரம்பி வழிந்திருந்தது.

ராம்குமார் நான்காவது வரிசையில் இடது



கோடியில் உட்கார்ந்திருந்தான். அவன் வந்த நேரம் ஒத்திகை முடிந்து உடைகள் அணிய கலைவாணி போய் விட்டதால் சந்திக்க முடியவில்லை. சிறிது நேரத்தில் நிகழ்ச்சியே ஆரம்பித்து விட்ட தால் பார்வையாளர்களில் ஒருவனாக அமர்ந்து விட்டான்.

கலைவாணி மேடையில் சுழன்று சுழன்று ஆடினாள். அவளுடைய கால்களின் பரபரப்பில் ராம்குமாரைச் சந்தித்து விட்ட சந்தோஷம் ததும்பியது.

பதினான்கு ஆண்டுகள் வனவாசத்திற்குப் பிறகு லட்சுமணனைச் சந்திக்கும் ஊர்மிளையைப் போல் இருந்தது அவளுடைய மனநிலை. நிகழ்ச்சி முடிந்ததும் சந்திக்கிறேன் என்று ராம்குமார் சைகை செய்ததைச் சிரித்துக் கொண்டே ஒரு நாட்டிய முத்திரையால் சரி என்று ஒப்புக் கொண்டாள். அவளுடன் மேடையில் ஆடிய மற்றப் பதினைந்து பேரும் அவள் தலையசைப்பைப் பார்த்து, ரிகர்சலில் இல்லாத அயிட்டமாக இருக்கிறதே என்ற குழம்பி, அவர்களும் தலையை ஆட்டி வைத்தார்கள்.

பொன்விழியின் தங்கக் குரல் பார்வையாளர்களைக் கட்டிப் போட்டிருந்தது. அந்த நாட்டிய நிகழ்ச்சியின் முதுகெலும்பே அவள் குரல்தான் என்று பந்தயம் கட்ட அத்தனை பேரும் தயாராயிருந்தார்கள்.

நிகழ்ச்சி மிகச் சரியாக ஒன்பது மணிக்கு முடிவடைந்தது. கார் வைத்திருந்தவர்கள் அத்தனை பேரும் தாராளமாகக் கைதட்டிவிட்டு, கார்களில் ஏறி இன்னொரு நான்கு கவர் அடைப்பை நோக்கி ஓடினார்கள். மற்ற மக்கள் அத்தனை பேரும் ஒன்று, பத்து நூறு என்று உதிரத்தொடங்க, ராம்குமார் கலைவாணியைச் சந்திப்பதற் காக காரிடாருக்கு வந்து க்ரீன் ரூமுக்கு வழி

தேடினான். கலையும் கூட்டம் அவன் வேகத்திற்கு ப்ரேக் போட்டது.

ஃ

"அக்கா! இன்றைக்குப் பிரமாதமாக ஆடினீர்கள்!" என்று பொன்விழி, கலைவாணியைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள்.

"உனக்கு எப்படித் தெரிந்தது பொன்விழி?"

"உங்கள் கால்களின் வேகம் எனக்குத் தெரியாதா அக்கா?"

கலைவாணி அவளை அணைத்துக் கொண்டாள் "அவர் வந்திருக்கிறார் பொன்விழி..."

"ஓஹோ, அதுதான் அந்த வேகமா?" பொன் விழியின் குரலில் கேலி வழிந்தது.

"இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் இரண்டு பேரும்?" என்று கேட்டுக் கொண்டே சிவப் பிரகாசம் வந்து சேர்ந்தார். "ப்ரோக்ராமுக்கு ஏற்பாடு செய்தவர்கள் டின்னருக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் களம்மா... பின்னால் ஹாலில் இலை போட்டாயிற்றாம் வடை, பாயசம், பச்சடி, ஐஸ்க்ரீம் என்று முழ நீளத்திற்கு மெனு... சீக்கிரம் வந்து சேருங்கள்!" என்று காவிப் பற்களைக் காட்டிச் சிரித்தார். அந்த நேரம் யாரோ பாண்ட் அணிந்த ஆசாமி கலைவாணியை நெருங்கினான். "நீங்கள்தானே கலை வாணி?"

"ஆமாம்."



"ராம்குமார் என்பவர் உங்களை அழைத்து வரச் சொன்னாரம்மா..."

கலைவாணியின் கண்களில் விளக்கு ஏற்றி வைத்தது போல் பிரகாசம் வந்தது. "எங்கே?" என்றாள்.

"அதோ..." என்று இருட்டைக் காட்டினான், அவன்.

"அக்கா! என்னையும் அழைத்துப் போங்கள் அக்கா. அங்கிளோட நானும் பேச வேண்டும்..." என்று பொன் விழி கலைவாணியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"வாசலில் ஒரு நீல நிற அம்பாஸிடர் நிற்கிறது மேடம். அதில் ராம்குமார் காத்திருக்கிறார்."

கலைவாணி உண்மை தெரியாமல் காத்திருந்த ஆபத்தை நோக்கிச் சிரித்துக் கொண்டே நடந்தாள்.

ஃ

ராம்குமார் கூட்டத்தில் நீந்திச் சரியான இடத்திற்கு வந்தபோது, கலைவாணி நாட்டிய உடைகளைக்கூடக் களையாமல் பொன்விழியோடு சேர்ந்து வாசலை நோக்கி நடப்பதைக் கவனித்தான். 'கலைவாணி' என்று அவன் கூப்பிட்டது கூட்டத்தின் இரைச்சலில் காணாமல் போனது. எங்கே போகிறாள் கலைவாணி? ராம்குமாரின் நெஞ்சில் திடுக் என்று அந்தச் சந்தேகம் முட்டியது. எல்லோரையும் விலக்கிக் கொண்டு அவன் வேகமாக வாசலை நோக்கி நடந்தான்.

நின்றிருந்த நீல அம்பாஸிடரின் பின் கதவு திறந்தது.

"உள்ளே வா கலைவாணி!" என்று கரகரப்பான குரல் வந்தது. ராம்குமாரைத் துரத்தும் ஆபத்துக்குப் பயந்து அவன் வெளியே வரவில்லை என்று நினைத்துக் கலைவாணியும், பொன்விழியும் காருக்குள் ஏறியதும் கதவு சாத்திக் கொண்டது. இருட்டும், காரில் ஏற்றப்பட்ட கறுப்புக் கண்ணாடிகளும் உள்ளே என்ன நடக்கிறது என்பதற்குக் கனமான திரை போட்டன. கார் விருட்டென்று புறப்பட்டு நிமிடத்தில் தெருமுனை திரும்பி விட்டது.

ராம்குமார் ரயில் புறப்படும் நேரம் ஸ்டேஷனுக்குள் ஓடிவரும் பிரயாணி போல் பரபரப்படைந்து கார் கிளம்பிப் போன இடத்திற்கு மூச்சிரைக்க வந்து சேர்ந்தான். அவன் தோளில் ஒரு கை விழுந்தது.

"நீதானே ராம்குமார்?" என்று கேட்டான் பாண்ட் அணிந்த அந்த ஆசாமி.

"ஆம். நான்தான். நீ?"

"உன் வழிகாட்டி. கலைவாணி, பொன்விழி இருவரின் மீதும் உனக்குப் பிரியம் இருந்தால், நான் சொல்லுவதைச் செய்."

"என்ன?"

"என்னோடு உள்ளே வா. அந்த நட்டுவாங்க வெற்றிலைக்காரரிடம் ஏதாவது பொய் சொல்-கலைவாணியும் பொன்விழியும் உன்னோடு அவசரமாக எங்கேயோ வருவதாக... நான் உன் பின்னாலேயே நிற்பேன். சொன்னதைத் தவிர வேறு வார்த்தை பேசுவது ஆபத்தானது என்பது உனக்குப் புரிந்திருக்கும்."

"கலைவாணி எங்கே?"



"கவலைப்படாதே. நான் உன்னை அங்கே அழைத்துப் போகிறேன்."

★

அந்த ஹாலில் ஃப்ளாரஸண்ட் வெளிச்சம் பரவியிருந்தது. போடப்பட்டிருந்த சோபாக்களில் எவரும் உட்காரவில்லை.

"நீ இந்த உடையில் வெகு அழகாக இருக்கிறாய் கலைவாணி!" என்றான் விஜய்தாக்கர், கண்களைச் சிமிட்டி. "இந்தக் குட்டிதான் உன் ஆஸ்தான பாடகியா?" என்று பொன்விழியின் தலையைத் தொட்டான். பொன்விழி அவனிடமிருந்து சுருங்கிக் கலைவாணியோடு ஒன்றிக் கொண்டாள்.

"அவர்களைத் தொடாதே..." என்று அலறினான் ராம்குமார், அவனைப் பிடித்திருந்தவர்களை உதறிவிட முனைந்து கொண்டே.

"வானத்தில் பறக்கும் ஆண் புறாவைப் பிடிக்க என்ன செய்வார்கள் தெரியுமா, ராம்? கீழே ஒரு பெண் புறாவைப் பிடித்துக் கொள்வார்கள். அது சிறகுகளைப் படபட வென்று அடித்துக் கொண்டால் ஆண் புறா ஆட்டமாடிக்காகப் பூமிக்கு இறங்கி வரும்."

"உன் உவமானங்களைக் கொண்டு வங்காளக் குடாவில் போடு. என்னிடம் என்ன வேண்டுமோ நேரிடையாகக் கேள். அவர்களை முதலில் விடுவி..." ராம்குமார் குரலில் கோபத்தைக் கூட்டிக் கொண்டான்.

"அவர்கள் எனக்குத் தேவையில்லை. ராம்குமார் நீ

மட்டும் எங்களுடன் சரியாக ஒத்துழைத்தால் இன்னும் ஒரே மணி நேரத்தில் அவர்களோடு கிளம்பிப் போகலாம். எங்கள் ஜீப்பில் சர்வ மரியாதையோடு உங்கள் வீட்டில் கொண்டுவிட நானே ஏற்பாடு செய்கிறேன்."

"என்ன ஒத்துழைப்பு வேண்டும் உனக்கு?"

"மரியாதையைக் காற்றில் பறக்க விட்டு விட்டாய் ராம்..."

"விஷயத்திற்கு வா..."

விஜய்தாக்கர் தன் தலையை அளைந்து கொண்டான். "நீ டில்லியிலிருந்து கொண்டு வந்தாயே ஒரு பெட்டி. அதற்குள் என்ன இருந்தது என்பதைப் பார்த்து விட்டாய் அல்லவா?"

"அதற்கென்ன?"

"அந்த ஃப்ளாப்பியில் என்ன பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நாங்கள் எல்லோரும் ஆர்வமாயிருக்கிறோம்."

"ஃப்ளாப்பியை நீ படிப்பதற்கு ஒரு நல்ல கம்ப்யூட்டர் போதும். நான் எதற்கு?"

"கர்னல் ஜான் செம்பருத்தி உன்னைப் பற்றிச் சொல்லிவிட்டார் ராம் அந்த ஃப்ளாப்பி செயல்பட நீயும் அவரும் சேர்ந்து சங்கேத வார்த்தைகளைக் கம்ப்யூட்டரில் முதல் ஆணையாகச் செலுத்த வேண்டுமாமே..."

"அது உனக்கு எப்படி...?" ராம்குமார் திடுக்கிட்டது போல நடித்தான்.

"விஜய்தாக்கருக்குத் தெரியாமல் எந்த ரகசியமும் ரகசியமாகவே இருந்துவிட முடியாது ராம். புறப்படு..."



"எங்கே?"

"நுங்கம்பாக்கத்தில் இருக்கும் ராணுவ கம்ப்யூட்டர் அறைக்கு. நீ, நான், ஜான் செம்பருத்தி. அதாவது ஒரிஜினல் கர்னல் மூவரும் போகிறோம். அந்த ஃப்ளாப்பி வேலை செய்தால், இன்றிரவே உங்களுக்கெல்லாம் விடுதலை. இல்லையென்றால்..." விஜய்தாக்கர் சற்று இடைவெளி விட்டுத் தொடர்ந்தான். "இல்லையென்றால், என்னிடம் விளையாடியதற்காக வாழ்நாள் முழுதும் நீ வருந்த வேறு ஒரு வழி வைத்திருக்கிறேன். கிரண்... கலைவாணி பாவம். ஆடிக் களைத்திருக்கிறாள். சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய். நாங்கள் திரும்பி வரும்வரை கவனமாகப் பார்த்துக் கொள்..."

ஃ

கல்லூரிச் சாலையிலிருந்து பிரியும் அதே சந்து. உயரமான காம்பவுண்டுக்குப் பின்னே அதே பழைய மாளிகை அதன் நாற்புறமும் நாக்குத் துருத்தியது போல் நீண்டிருக்கும் ஏர்கண்டிஷனர்கள்.

மாளிகையின் கண்ணாடித் தடுப்பு அறைக்குள் அவர்கள் பிரவேசித்தார்கள். ராம்குமார் முதன் முறையாகக் கம்ப்யூட்டரைப் பார்ப்பவன் போலக் கண்களை அகட்டிக் கொண்டு பார்த்தான். அறையின் விஸ்தீரணத்தில் மூன்று கம்ப்யூட்டர்கள் ஆயுத எழுத்தின் புள்ளிகள் போல் நின்றிருந்தன.

விஜய்தாக்கர் ஃப்ளாப்பியை நடுவில் இருந்த கம்ப்யூட்டரில் பொருத்தினான். பட்டன்களைத் தட்டினான்.

"கர்னல், ராம்குமாரின் இளமையான காதலி அங்கே நெஞ்சு படபடக்கக் காத்திருப்பாள். நேரத்தை வீணடிக்காமல் ஆரம்பியுங்கள். ராம், சொல். சங்கேத வார்த்தை என்ன?"

ராம்குமார் சற்றே தயக்கத்தை அவிழ்த்தான்.

"உனக்கு வேறு சாய்ஸ் இல்லை ராம். சொல்லி விடு," என்றார் கர்னல் ஜான் செம்பருத்தி .

"சில்வர்!" என்றான் ராம்குமார்.

S. I. L. V. E. R. என்ற எழுத்துக்களை கீ போர்டில் தட்டினான், விஜய்தாக்கர். அவன் கம்ப்யூட்டரைப் பார்த்துத் திரும்பியவுடன் ராம்குமார் ஒரு காரியம் செய்தான். அந்த அறையிலிருந்த ஏராள ஃப்ளாப்பியில் ஒன்றை எடுத்துச் சட்டைக்குள் அவசரமாய் மறைத்தான். கர்னல் ஜான் செம்பருத்தியின் முகத்தில் எற்பட்ட மெலிதான துடிப்பைக் கவனிக்கவில்லை. சில்வர் என்றால் தப்பிக்கலாம் என்ற ரகசிய அர்த்தம் அவர்கள் அகராதியில் இருப்பது விஜய்தாக்கருக்குத் தெரியாது.

"கோல்டு!" என்றார் ஜான் செம்பருத்தி பதிலுக்கு சம்மதம் என்ற ரகசிய அர்த்தத்தில். G. O. L. D. எழுத்துக்களை விஜய்தாக்கர் அழுத்தினான்.

"மூன்!" என்றான் ராம்குமார் அடுத்ததாக. "இன்று இரவு?"

"ஸ்டார்!" என்றார் கர்னல். 'இன்றிரவே' என்ற அர்த்தத்தில்.

அத்தனை எழுத்துக்களையும் செலுத்தி விட்டு விஜய் தாக்கர் பரபரப்பாகக் கம்ப்யூட்டர் திரையைப் பார்த்தான்.



"ஸாரி, உங்களுக்கு நான் உதவ முடியாது. என்னை என் அம்மாவிடம் அழைத்துப் போங்கள்" என்று பச்சை எழுத்துக்கள் கேலி செய்தன.

"வாட் இஸ் திஸ்?" விஜய்தாக்கர் சூடானான்.

"டில்லியில் வாசுதேவ் சொன்ன வார்த்தைகள் இவை தாம்!" என்றான் ராம்குமார், சற்றும் அயராமல்.

"பாவம் கலைவாணி!" விஜய்தாக்கர் சிரித்துக் கொண்டே சொன்னான். "நாளைக் காலைக்குள் இந்த ஃப்ளாப்பி வேலை செய்யாவிட்டால் சலங்கைகள் கட்டும் அவள் இரண்டு கால்களையும் வெட்டி என்னோடு டில்லிக்கு எடுத்துப் போய் விடுவதாய்த் திட்டம்."

# 14

"நான் வேண்டுமானால் ஒரு முறை கம்ப்யூட்டரில் முயற்சி செய்து பார்க்கட்டுமா?" என்று விஜய் தாக்கரிடம் அனுமதி பெற்று ராம்குமாரும் சிறிது நேரம் கம்ப்யூட்டருடன் போராடினான்.

பலன் : பூஜ்யம்.

★

ஜீப் வெகு வேகமாகப் பெசன்ட் நகர் பங்களாவிற்குத் திரும்பியது.

"இறங்குங்கள்." விஜய் தாக்கரின் ஆணை சீற்றத்தோடு வந்தது. "இதோ பார் ராம், இப்போது மணி பதினொன்று. உனக்குச் சரியாக ஏழுமணி நேரம் தருகிறேன். நாளைக் காலைக்குள் - சரியாக ஆறு மணிக்குள்-நீ அந்த ஃப்ளாப்பியைச் செயல் படுத்திக் காட்ட வேண்டும். தவறினால்..."

"என் கலைவாணியின் கால்களை வெட்டி விடுவாய்! ஆனால் மறுபடியும் சொல்கிறேன். எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் இவைதான். ஒருவேளை கம்ப்யூட்டரைச் சரிவர ஆபரேட் பண்ணத் தெரியாமல் நீ குளறுபடி செய்திருக்கலாம்" என்றான் ராம்குமார், சிரித்துக் கொண்டே.

"உளறாதே, கம்ப்யூட்டரின் வயிற்றைத் திறந்து ஆராய்ச்சி செய்ய எனக்குத் திறமையில்லாமல் இருக்கலாம். ஆனால் ஃப்ளாப்பியை எப்படிப் பொருத்த வேண்டும், ஆரம்பக் கட்டளைகளை எப்படிச் செலுத்த வேண்டும் என்ற அத்தனை விவரங்களையும் முருகபூபதியிடம் நான் கற்றுக் கொண்டு விட்டேன். வர்மா, இவர்களை உள்ளே இழுத்துப் போ."

வர்மா என்ற பெயரைக் கேட்டதும் ராம்குமாரின் கண்களில் மின்னல் வந்தது. பல்லாவரம் பாழ் மாளிகையிலிருந்து தான் தப்புவதற்கு உதவியவன் இந்த வர்மாதானே?

"கர்னலை அவருடைய அறையில் அடைத்துப் போடு. இந்த முட்டாள் இளைஞனை அவன் காதலியை அடைத்த அதே அறையில் தள்ளு. இரவு முழுவதும் பேசி, நல்ல முடிவுக்கு வரட்டும்." என்றான் விஜய் தாக்கர், ஜிப்பைக் கிளப்பி காரேஜ் இருந்த பக்கம் விரட்டிக் கொண்டே.



பங்களாவிற்குள் நுழைந்ததும் வர்மா இரு புறமும் பார்த்துவிட்டு நின்றான்.

"ராம்குமார், நீங்கள் அடைக்கப்படும் அறைக் கதவுகளை மிகச் சரியாக இரவு ஒரு மணிக்கு நான் வெளியே திறந்து வைக்கிறேன். தயாராயிருங்கள்" என்று கிசுகிசுப்பான குரலில் சொன்னான். "கர்னல், இப்போது என்னை மன்னியுங்கள்!" என்று இருவர் கழுத்திலும் கை பதித்து மறுபடியும் தள்ளிக்கொண்டு படிகளில் ஏறினான்.

"நன்றி வர்மா. உன் உதவி நினைவில் வைத்துக் கொள்ளப்படும்," என்று முணுமுணுத்தார் கர்னல் ஜான் செம்பருத்தி.

கலைவாணியும் பொன்விழியும் அடைக்கப்பட்ட அறையில் ராம்குமாரைத் தள்ளிவிட்டு, கர்னலை முன்னிருந்த அதே அறையில் வைத்துப் பூட்டினான். வர்மா ஒரு தொய்ந்து போன நாற்காலியில் உட்கார்ந்தான். துப்பாக்கியை மடி மீது படுக்க வைத்து, ஒரு சிகரெட்டைத் தேர்ந்தெடுத்துப் பற்ற வைத்தான்.

"வர்மா!" கீழேயிருந்து குரல் வந்தது. விஜய் தாக்கரின் ஆவி பறக்கும் குரல்.

வர்மா சிகரெட்டை அவசரமாகக் கீழே போட்டான். தன் முரட்டுப் பூட்ஸ் காலால் தேய்த்துப் புகையிலைத் துகள்களைத் தரையெங்கும் பாழாக்கினான். இரண்டிரண்டு படிகளாகக் கீழே இறங்கினான். விஜய் தாக்கரின் எதிரே நின்று கால்களை இரு முறை தரையில் உதைத்து ஒரு சல்யூட் அடித்தான்.

"என்ன செய்கிறாய் வர்மா?"

"மாடியில் கைதிகளைப் பூட்டி வைத்த அறைகளுக்குக் காவல் இருக்கிறேன், ஆபீசர்."

"இந்த விஜய் தாக்கரிடம் நீ எவ்வளவு விசுவாசமாக நடந்து கொண்டிருக்கிறாய்! உன்னைப் பற்றிக் கிரண் வெகுவாகப் புகழ்ந்தான்."

"கடமைப் பட்டிருக்கிறேன் ஆபீசர்."

"அப்பேர்ப்பட்ட விசுவாசியான உன்னை, கேவலம் கைதிகளுக்குக் காவலாகப் போடுவதா?" விஜய் தாக்கர் சொல்லிவிட்டு வர்மாவின் முகத்தை வெகு ஆழமாக நோட்டமிட்டான். அவன் இமையின் மில்லி மீட்டர் துடிப்பைக் குறித்துக் கொண்டான்.

"அதனால், வர்மா, நீ என்னோடு வெளியே வருகிறாய். கிரண் வேறு ஆட்களைக் காவலுக்கு ஏற்பாடு செய்து கொள்ளட்டும்."

"நீங்கள் சொன்னால் மறுப்பேது, ஆபீசர்?"

"நீ போய் ஜீப்பைப் போர்ட்டிகோவிற்கு எடுத்து வா." விஜய் தாக்கர் ஜீப்பின் சாவியை எறிந்தான். வர்மா, அதை லாகவகமாகப் பிடித்து, வெளியே நடந்தான். காரேஜில் நுழைந்து ஜீப்பில் ஏறினான். சாவியைப் பொருத்தி ஜீப்பின் சக்தி வாய்ந்த இன்ஜினை உறுமச் செய்தான். அவன் கியரைப் பொருத்தும் நேரம், "வர்மா," என்று விஜய் தாக்கரின் குரல் மறுபடியும் மிதந்து வந்தது.

"இன்ஜினை அணைத்துவிட்டுக் கீழே இறங்கு வர்மா. உன்னுடன் நான் இரண்டொரு வார்த்தை பேசவேண்டும்."

வர்மாவுக்கு முதன் முறையாகக் குழப்பம் வந்தது. இன்ஜினை அணைத்து விட்டு ஜீப்பிலிருந்து கீழே குதித்தான்.

"என்னுடன் புறப்படு என்று சொன்னபோது, உன் மனத்தில் என்ன எண்ணம் ஓடியது, வர்மா?



ராம்குமாருக்கு இரவு ஒரு மணிக்குக் கதவு திறந்து விடுவதாக ப்ராமிஸ் செய்திருக்கிறோமே, இந்த விஜய் குறுக்கில் புகுந்து குட்டையைக் குழப்புகிறானே, என்றுதானே?"

வர்மா ஒரு கான்க்ரீட் தூண் கலைந்து தலையில் விழுந்தது போல் துடித்து நிமிர்ந்தான். தான் ஜான் செம்பருத்தியின் ஆள் என்பதைக் கண்டு பிடித்து விட்டார்களா என்ன? அவகாசம் இல்லை. அவன் கையில் சரேலெனத் துப்பாக்கி முளைத்த அதே கணம் காரேஜின் இன்னொரு துப்பாக்கி 'டப்க்' என்றது. வர்மாவின் கையிலிருந்த துப்பாக்கி வெடிக்காமலேயே தரைக்கு நழுவியது. வர்மா அப்படியே பின்புறம் சாய்ந்து ஜீப்பில் பின் மண்டை மோதி அதில் இரத்தக் கோடிழுத்துத் தரையில் சொத்தென்று விழுந்தான்.

"விஜய் தாக்கரை ஏமாற்ற நினைத்தவர்களுக்குச் சந்தோஷமான சாவு கிடையாது, வர்மா" என்றான் விஜய் தாக்கர் பிணத்திடம். "இவனைச் சகல மரியாதைகளோடு புதைத்துவிடு கிரண்" என்று குரல் கொடுத்தான். காரேஜின் கதவின் பின்னே மறைந்திருந்த கிரண் வெளிப் பட்டு, தன் காலால் ஒரு முறை வர்மாவைப் புரட்டினான். "த்சு...த்சு...உன்னால் பார் வர்மா, என் இரவுத் தூக்கம் போய்விட்டது. அந்த ராம்குமார் வேறு கடிகாரத்தை பார்த்துக் கொண்டு ஒரு மணி எப்போது வரும் என்று காத்திருந்து ஏமாறப் போகிறான்."

ஃ

கலைவாணி பயத்தில் பக்கெட் பக்கெட்டாக வியர்த்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் என்னை நன்றாக ஏமாற்றி விட்டீர்கள் ராம்."

"பெண்கள் என்றாலே இப்படித்தானா?" என்றான் ராம்குமார். "செவ்வாய்க் கிரகத்திற்கே நாம் போய்த் திரும்புகிற காலம் வந்தாலும் சின்ன விஷயத்திற்கெல்லாம் கண்ணைக் கசக்குவதை மட்டும் விட மாட்டார்கள்."

"நீங்கள் சாதாரண இன்ஜினீயர் என்று என்னை நம்ப வைத்து விட்டு..."

"இரு இரு, இப்போது மட்டுமென்ன? நான் இன்னும் சாதாரண இன்ஜினீயர்தான்."

"பச்சைப் பொய். உங்களைச் சுற்றி என்னவோ மர்மம் இருக்கிறது."

"அக்கா...ராம்குமார் அங்கிள் பாவம் ஏற்கனவே தன்னால்தானே இவ்வளவு துன்பம் என்று பலமுறை புலம்பி விட்டார். நீங்கள் வேறு வெந்த புண்ணை உப்புக் காகிதத்தால் தேய்க்கிறீர்களே" என்று பொன்விழி இடையில் புகுந்தாள்.

"பார்த்தாயா? பொன்விழிக்குத்தான் என் தங்கமான மனசு சரியாகப் புரிந்திருக்கிறது" என்றான் ராம்குமார், பொன்விழியின் தலையைப் பாசத்துடன் தடவிக் கொண்டே. "நாம் மாட்டிக் கொண்டோம். இருந்தாலும், தப்பித்து விடப் போகிறோம், கலைவாணி."

"நம்மை மீட்கும் படை ஏதாவது வருகிறதாமா?" என்றாள் கலைவாணி, சற்றே எரிச்சலுடன்.

"சரியாக ஒரு மணிக்கு இந்தக் கதவு திறக்கும் கலைவாணி."

"என்னது! ஒரு மணிக்குப் பூட்டிய கதவு திறக்குமா? அது எப்படி?"



"ஐயாவிடம் அதற்கொரு மந்திரம் இருக்கிறது" என்று கையிலிருந்த வாட்ச்சைப் பார்த்தான் ராம்குமார். மணி ஒன்று ஆவதற்கு இன்னும் இரண்டே நிமிடங்கள் பாக்கி இருந்தன.

ராம்குமாரின் நெஞ்சில் தடக் தடக் என்று மின்சார ரயில் ஓடியது.

"தயாராயிருங்கள். கலைவாணி, உன்னுடைய நாட்டிய நகைகள், சலங்கைகள் எல்லாவற்றையும் கழற்றி விடு. ஓடும்போது குலுங்கினால் சப்தம் வரும்."

ராம்குமாரின் முன்னெச்சரிக்கைக்கு அவசியமே இல்லை. மணி ஒன்று ஆகியது. இரண்டு நிமிடங்கள் ஐந்து நிமிடங்கள், பதினைந்து நிமிடங்கள்...ஊஹூம்! அவன் எதிர்பார்த்த கதவு திறக்கவில்லை.

"என்ன ஆயிற்று உங்கள் மந்திரம்?" கலைவாணி சின்னதாய்ச் சிரித்துக் கேட்டாள்.

"அக்கா, உங்களுக்குச் சிரிப்புக் கூட வருகிறதா என்ன?" பொன்விழி சீண்டினாள்.

குழாயடியில் காத்திருக்கும் தாய்மார்களைப் போல ராம்குமார் பொறுமையைத் தொலைத்து விட்டுக் காத்திருந்தான்.

கதவு திறக்கவேயில்லை.

"சே, வர்மாவின் பேச்சை நம்பி நான் வேறு ஐடியா கூட யோசிக்கவே இல்லை."

"என்ன முணுமுணுக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை..."

ராம்குமார் தீவிரமாகச் சிந்தனை செய்ய ஆரம்பித்தான்.

"அங்கிள்..." பொன்விழி திடீரென்று சற்றே பரபரப்பான குரலில் கூப்பிட்டாள்.

"என்ன பொன்விழி?"

"இந்த அறைக்கு மொத்தம் இரண்டு கதவுகள் இருக்கின்றனவா?"

"இல்லையே, ஒன்றுதான். அப்புறம் தோட்டத்தைப் பார்த்து ஒரு ஜன்னல். குறுக்கில் கெட்டியான இரும்புக் கம்பிகளைக் கோர்த்த ஜன்னல்..."

"சரியாகப் பாருங்கள் அங்கிள். எனக்கு நேர் பின்னே தோட்டத்தைப் பார்த்து ஒரு கதவு இருக்கிறது."

"இரண்டு கண்ணாலும் பார்த்து விட்டுதான் சொல்கிறேன். பொன்விழி. நீ சொல்வது போல் எந்தக் கதவும் இல்லை."

"அங்கிள், எனக்கு இரண்டு கண்களாலும் பார்க்க முடியாதுதான். ஆனால் என் காது கூர்மையாயிருக்கிறது. தோட்டத்துக் காற்று தரைமட்டத்தில் அறைக்குள் ஸ்ஸ்ஸ்ஸ் என்று சீறி நுழையும் சப்தம் எனக்குக் கேட்கிறது. ஒரு மரக் கதவின் மிக மிக மெலிதான அதிர்ச்சி கூட எனக்குக் கேட்கிறது."

ராம்குமார் முதன் முறையாகக் குறுகினான். "ஸாரி பொன்விழி!" என்றான். பொன்விழி சொன்ன இடத்திற்குப் பரபரப்புடன் ஓடினான். தரையில் காதை வைத்துக் கேட்டான். அவனுக்கு அந்தச் சன்னமான ஒலி கேட்கவில்லை. ஆனால் அந்த இடத்தில் மட்டும் தரை சிலீர் என்று இருந்தது. வெளிக் காற்று உள்ளே வருவதால் தான் அந்தக் குளிர்ச்சி இருக்க முடியும்.



ராம்குமார் சுவரை அணுகித் தட்டிப் பார்க்க ஆரம்பித்தான்.

ஃ

"நீ ஒரு முட்டாள் விஜய்" என்றான் முருகபூபதி, தன் கோப்பையில் இருந்த ஸ்காட்சை உறிஞ்சிக்கொண்டே.

"முருபூபதி!" விஜய் தாக்கரின் கண்கள் சிவந்தன.

"கத்தாதே விஜய்! அந்த ஃப்ளாப்பியைப் பற்றி அன்றைக்கே நான் என்ன சொன்னேன்?"

"என்ன சொன்னீர்கள்?"

"அது ஸீரியலைஸ்டு ஃப்ளாப்பி. ஒரு குறிப்பிட்ட கம்ப்யூட்டரில்தான் படிக்க முடியும் என்று சொல்லவில்லை? அப்புறம் ராம்குமாரையும், கர்னலையும் தவறான கம்ப்யூட்டருக்கு அழைத்துப்போய் நேரத்தை வீணடித்து விட்டாயே! இரண்டு ஜான் செம்பருத்திகளா என்று! உலகமே விழித்துக் கொள்ளும் என்பதால் நானும் வர முடியவில்லை. கர்னல் சங்கேத வார்த்தை என்று சொன்னது அந்தத் தாய் கம்ப்யூட்டரில் தான் செல்லுபடியாகும். அது எந்தக் கம்ப்யூட்டர் என்று ராம்குமாருக்கோ, கர்னலுக்கோதான் தெரிந்திருக்கும். அதை முதலில் விசாரி."

"யூ ஹாவ் எ பாயிண்ட்," என்றான் விஜய் தாக்கர்.

ஃ

ராம்குமார் சுவரில் தட்டிக் கொண்டே வந்தான்.

ஜன்னலையொட்டி ஒரு பகுதி வந்ததும் அவன் முட்டி டப்டப் என்று ஒரு மரப்பலகையில் மோதும் ஒலி

கேட்டது. குனிந்து உட்கார்ந்து உன்னிப்பாக ஆராய்ந் தான். "பொன்விழி! யூ ஆர் கிரேட்!" அப்படியே பொன்விழியை அணைத்து அவள் உச்சந் தலையில் ஒரு முத்தம் கொடுத்தான்.

"முன்பு எப்போதோ ஏ. ஸி. யூனிட் பொருத்தியிருக் கிறார்கள். அதை எடுத்த பின் அந்த ஓட்டையை ஒரு மரப் பலகையால் அழகாக மூடி, சுவருக்கு அடித்த பெயின்டையே அடித்துச் சாமர்த்தியமாக மறைந்திருக்கி றார்கள்."

"அந்த வழியே நாம் தப்ப முடியுமா ராம்?" என்றாள் கலைவாணி ஆர்வமாய்.

"ப்பூ என்று ஊதிவிடுவேன் பார். இதன் ஸ்க்ருக் களைக் கழற்ற வேண்டும். உன் ஹேர்பின்னைக் கழற்றிக் கொடு."

"கர்னல்?"

"நல்ல வேளை! அவருடைய அறை ஜன்னலுக்குக் கம்பிகள் கிடையாது."

சரியாக அரை மணி நேரத்தில் அந்தப் பலகையைப் பொருத்தியிருந்த ஒரு டஜன் ஸ்க்ருக்களும் கழற்றப்பட்டு ஓர் ஆள் சுலபமாக வெளியேறக் கூடிய சதுரம் பிளந்து விட்டது. ராம்குமார் முதலில் எட்டிப் பார்த்தான்.

"இந்த பக்கம் கீழே கூடக் காவல் இல்லை. இருட்டு நமக்குத் துணையாக இருக்கிறது. தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு திருடர்கள் எப்படிச் சுவரில் இறங்கு கிறார்கள் என்பதை இன்றைக்கு நீங்கள் கற்றுக் கொள்ளப் போகிறீர்கள். நான் கர்னலை இறக்கிக் கொண்டு வருகிறேன்."

★



கர்னல் ஜான் செம்பருத்தி நம்ப முடியாத கண்களால் ஜன்னல் வழியே நுழையும் ராம்குமாரைப் பார்த்தார்.

"வர்மா உதவவில்லை?"

"இல்லை, கர்னல். பேச நேரமில்லை. உங்கள் வயதை மறந்து நீங்களும் என்னுடன் குழாய் வழியே இறங்க வேண்டும்."

நான்கு பேரும் சிராய்ப்புகளோடு இறங்கியாகி விட்டது. சுவரோடு தேய்த்து இருட்டில் ஒன்றிக் கொண்டார்கள்.

"எப்படி ராம் வெளியே போகப் போகிறோம்?" கலை வாணி கிசுகிசுப்பாகக் கேட்டாள்.

"காரேஜ் வாசலில் ஒரு ஜீப் நிற்கிறது."

"அதற்கான சாவி?"

"சாவிக்கென்ன, உன்னுடைய இரண்டு ஹேர்பின் கள் எனக்குப் போதும். ஆனால் அதற்கு முன்னால் ஜீப்பை அடைய வேண்டுமே. அந்தப் பக்கம் ஓர் ஆள் துப்பாக்கி யோடு நடமாடிக் கொண்டிருக்கிறான்." ராம்குமார் குரலில் பரபரப்பு இருந்தது.

"அங்கிள்... அந்த ஆளை நான் சமாளிக்கிறேன். நீங்கள் தப்பி விடுங்கள்!" பொன்விழி சொன்னதை அவர்கள் உணருமுன், பொன்விழி அவர்கள் ஒளிந்திருந்த இடத்தை விட்டு விலகி ஜீப் இருந்த இடத்திற்கு எதிர்த் திசையில் சப்தம் செய்து கொண்டே ஓட ஆரம்பித்தாள்.

காவலுக்கு இருந்த ஆள் அந்த சப்தத்தால் கவரப் பட்டு நிமிர்ந்தான். ஓடும் பொன்விழியைப் பார்த்துத் திடுக்கிட்டான். "ஏய், நில், நில்" என்று குரல் கொடுத்து கொண்டே ஓடி வந்தான்.

பொன்விழி நிற்காமல் ஓட, துப்பாக்கியை உயர்த்தி விசையை இழுத்தான்.

'ட்புக்'

இருபதடி தூரத்தில் பொன்விழி அப்படியே சுருண்டு விழுந்தாள்.

# 15

கலைவாணி 'ஹெக்' என்று மிக மெலிதாகக் குரல் எழுப்பினாள். அதற்கு மேல் அவள் தொண்டையிலிருந்து வேறு சப்தங்கள் வெளிப்பட மறுத்தன. துப்பாக்கியால் சுட்ட ஆசாமி நெருங்கி ஓடி வந்தான்.

பொன்விழி "அம்மா!" என்று மிக மெலிதாகக் குரல் கொடுத்தாள். வேதனையின் விளிம்பிலும், குரல் வெளியே எழுந்து மற்றவர்களை அழைத்து வந்துவிடக் கூடாதே என்கிற எச்சரிக்கை உணர்வுடன் எழுந்த மிக மெலிதான 'அம்மா' அது.

கர்னல் ஜான் செம்பருத்திதான் முதலில் செயல் பட்டார். கலைவாணி கையில் பிடித்திருந்த நகைகளில் ஒட்டியாணத்தை மட்டும் அவள் அனுமதியின்றி உருவிக் காற்றில் வீச, ஒட்டியாணம் காற்றை 'ஷிக்' என்று



கிழித்தது. பொன்விழியைச் சுட்டவன் கையில் இருந்த துப்பாக்கி அதன் உலோக மினுமினுப்புடன் அந்தரத்தில் பறக்க, ராம்குமார் அந்தத் துப்பாக்கியை தாவி பிடித்தான்.

கர்னல் ஒட்டியாணத்தை இரு கைகளிலும் பற்றி, பொன்விழியைச் சுட்டவன் கழுத்தில் சட்டென்று மாட்டிப் பின்னால் இறுக்கி இழுக்க, அந்த ஆசாமி நிலை குலைந்தான். கால்களைத் தரையிலிருந்து உயரத் தூக்கி அந்தரத்தில் உதைத்தான். கைகளை இலக்கு இல்லாமல் காற்றில் வீசினான். கர்னல் தன் கை இறுக்கத்தை மேலும் அதிகப்படுத்த அந்த இடத்தில் மண்ணில் இருவருடைய திமிறல்களினால் ஒரு பூந்தொட்டி உடைந்தது. மண்ணை விரல்கள் உழுதன. பொதுவாக அந்த இடத்தில் நிலவிக் கொண்டிருந்த அமைதி கலைந்து போக, இப்போது கேட்டருகே நின்றிருந்த இன்னொரு காவலாளி சந்தேகம் ஏற்பட்டு உள்ளே பார்த்து விபரீதத்தை உணர்ந்து தன் மூளை எங்கிலும் அபாய மணியின் அலறல் கேட்க கண்மூடி தனமாக ஓடி வந்தான்.

ராம்குமாரின் கையில் இருந்த துப்பாக்கி முனை அவனை வரவேற்றது. அந்தத் துப்பாக்கியின் இரக்கமற்ற வாயைக் கண்டதும் அந்த இன்னொருவன் நின்றான் தயங்கினான். கைகளை உயரத் தூக்கினான்.

ராம்குமாருக்கு அந்தத் தயக்கம் போதுமானதாக இருந்தது. துப்பாக்கியைச் சட்டென்று திருப்பி, வெகு உன்னதமான பலத்துடன் எதிரியின் பின் மண்டையில் இறக்க, கருங்கல்லில் தேங்காய் மோதும் சத்தம் கேட்டது. எதிரி ஒரு முறை தள்ளாடி, ஒரு காலை எட்டி வைத்து; ஏதோ குரல் கொடுக்க நினைத்து, முடியாமல் கீழே சரிந்தான்.

கர்னல் ஒட்டியாணத்தை நீவி விட்டுக் கொண்டிருந் தார். அவர் காலடியில் பொன்விழியைச் சுட்டவன் ஆங்கில எஸ் போல இயலாத கோணங்களில் கிடந்தான். கர்னல் ராம்குமாரை நெருங்கி வந்து அவன் தோளைப் பிடித்து மெல்ல அழுத்தினார்.

"வெல்டன் மை பாய்!" என்றார்.

கலைவாணி பொன்விழிக்கு அருகில் இருந்து ராம் குமாரை நோக்கிச் சத்தமின்றி ஓடி வந்தாள்.

"என்ன ஆயிற்று கலைவாணி?"

"பொன்விழிக்கு... பொன்விழிக்கு... காலில் அடிபட்டு இருக்கிறது. ரத்தம் நிறைய வீணாகி மணலில் கலக்கிறது." கர்னல் மார்பில் சிலுவைக் குறி இட்டுக் கொண்டார்.

"கடவுள் இன்னும் நம் பக்கததில்தான் இருக்கிறார் ராம்!" என்றார்.

இரண்டே எட்டில் நடந்து மயங்கி இருந்த பொன் விழியை வாரி எடுத்துத் தோளில் சார்த்திக் கொண்டார்.

"லெட்ஸ் கோ!" என்று ஜீப்பில் ஏறினார்.

ராம்குமார் டிரைவர் இருக்கையில் அமர்ந்தான். கலைவாணி ஜீப்பின் பின்னால் இருந்த பகுதியில் ஏறி அமர்ந்து கொண்டாள். அவளுடைய நெஞ்சம் தடால் தடால் என்று அடித்துக் கொண்டிருந்தது. பொன்விழிக்கு ஒன்றும் ஆகக்கூடாது. ஆகக்கூடாது. ஆகாது!

"கர்னல், கடவுள் நம் பக்கம் இருக்கிறார் என்றீர் களே... நூற்றுக்கு நூறு சத்தியமான வாக்கியம் கர்னல். ஜீப் இக்னிஷனிலேயே சாவி இருக்கிறது."

ராம்குமார் உற்சாகமாகச் சாவியைத் திருகினான்.



ஜீப் ஒரு முறை கமறிவிட்டு அடர்த்தியான கருநீல டீசல் புகையை விட்டது.

ஜீப் அந்தக் காம்பவுண்டை விட்டுச் சரேல் என்று வெளியேறியது.

ஏறக்குறையப் பதினைந்து நிமிடத்திற்குள் நிழல் நாடகம் போல அந்தத் தப்பிக்கும் படலம் சுத்தமான இருட்டு வானின் ஒரே ஒரு நட்சத்திரக் கண் சிமிட்டலுக் குக் கீழே நடந்து முடிந்தது.

ஃ

ஜீப் பெசன்ட் நகரிலிருந்து இருட்டைத் துளைத்துக் கொண்டு சீறி வந்து அடையாறு பாலத்தைத் தொட்டுக் கடந்து கடற்கரைச் சாலையில் திரும்பி வேகம் பிடித்தது.

ஸ்பீடா மீட்டரின் முள் தடுமாறித் தடுமாறி அறுபது, எழுபது, எண்பது என்று முன்னேறி இப்போது எண்பதிற்கும் தொண்ணூற்றுக்கும் இடையில் துடித்துக் கொண்டு இருந்தது.

வார் மெமோரியல் அருகே இடப் பக்கம் வளைந்து தீவுத் திடலின் ஒரு ஓரத்தில் ஆபீஸர்ஸ் மெஸ் என்று மஞ்சள் விளக்கில் பளிச்சிட்ட ஒரு போர்டைக் கடந்து இரண்டு அம்பாஸிடர்களை ஓரம் கட்டச் செய்து சென்ட் ரல் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் செல்லும் பாதை யில் திரும்பியது. ஜெனரல் ஆஸ்பத்திரியின் பில்டிங்கைக் கடந்தபோது மெலிதான பினாயில் வாசனை ஜீப்புக்குள் அனுமதியின்றி நுழைந்து நழுவியது.

தினத்தந்தி அலுவலகத்தைக் கடந்து சிறிது தூரம்

போனவுடன் கர்னல் சடாரென்று 'ரைட்' என்று ஆணையிட ஜீப் டயர்கள் கதறக் கதற நின்று, டடக் படக் என்று கியர் மாறிச் சிறிது தூரம் சிவப்பு விளக்கு ஒளிரப் பின்னால் வந்து வலப் பக்கத்தில் திரும்ப, லாரிக்காரன் ஒருவன் திடீரென்று திரும்பிய ஜீப்பைத் தவிர்ப்பதற்காக சடன் பிரேக் அடித்து வலது பக்கம் ஸ்டீயரிங்கைத் திருப்பி மஞ்சள் கோட்டைக் கடந்து சிறிது தூரம் சென்று மறுபடியும் அவனுக்கு விதித்திருந்த பாதையில் தன்னைச் செருகிக் கொண்டு விரைந்தான்.

அந்த டிரைவர் மிக மோசமான கெட்ட வார்த்தைப் பிரயோகம் செய்தது காற்றில் பறந்து வந்து ஜீப்பில் ராம்குமாரின் காதில் வந்து மோத, ராம்குமார் அந்தத் திட்டலை உதாசீனம் செய்தான்.

"எங்கே, கர்னல்?" என்றான்.

"இந்தத் தெரு முடிவதற்குள் இடப் பக்கம் டோம் விளக்கு வைத்த ஒரு காம்பவுண்ட் வரும் பார். வாசலில் டாக்டர் 'உத்தம்' என்று போர்டு போட்டிருக்கும் அதில் நுழை."

கர்னல் சொல்லி முடிப்பதற்குள் காம்பவுண்ட் இரு புறம் டோம் விளக்குகளுடன் வந்துவிட, சரிவாக ஏறிய சிமெண்ட் பாதையில் ஜீப்பை ஏற்றி மூடியிருந்த கேட் டிற்கு முன் ஜீப்பை நிறுத்தினான். ராம்குமார். கர்னல் ஜீப்பின் சீட்டில் பொன்விழியைப் படுக்க வைத்துக் கீழே இறங்கினார். டோம் விளக்கை மிகச் சீரான நடையில் நெருங்கி டோம் விளக்கின் கீழே இருந்த ஒரு பித்தானை அமுத்தினார்.

லேசான படபடப்புடன் காத்திருந்தார். போர்ட் டிகோ விளக்கு எரிந்தது. ஓர் அல்சேஷனின் குரைப்பு ஒலித்துக் கடைசியில் கதவு திறந்து லுங்கி கட்டியிருந்த,



தூக்கம் தொங்கிக் கொண்டிருந்த கண்களுடன் அவர் வெளிப்பட்டு, "ஹூ ஈஸ் இட்?" என்றார் அதிகாரமாக.

"உத்தம், ஐ'ம் கர்னல்!" என்றார் கர்னல் சிக்கனமாக.

கர்னலின் அந்த வாக்கியம் மந்திர வாக்கியம் போல் செயல்பட்டது.

லுங்கி கட்டிய உத்தம் சடாரென்று சிமெண்ட் காரி டாரில் ஓடிவந்து கேட்டைத் திறந்து விட்டார்.

"வாட்ச் மேன் இல்லை!" என்றார். "என்ன கர்னல்? எனிதிங் இம்பார்ட்டன்ட்?"

"டாக்டர் உத்தம், திஸ் ஈஸ் ராம்குமார், இந்தக் குழந்தை பொன்விழி. ஷி ஈஸ் ப்ளைன்ட். அவளுடைய காலில் ஒரு புல்லட் பாய்ந்திருக்கிறது. அதை எடுத்து விட்டு டிரெஸ் பண்ணிவிடு. பொன்விழியை ஒரு ப்ரைவேட் ரூமில் உன்னுடைய நேரடிக் கவனிப்பின் கீழ் வைத்திரு. இரண்டு மூன்று நாட்கள் ஆகும் நான் திரும்பி வர. அதுவரை இவள் உன்னிடம் இருப்பது யாருக்கும் தெரியக் கூடாது."

"தெரியாது கர்னல்!" என்ற டாக்டர் உத்தம் பொன்விழியின் காலை அந்த இருட்டில் பரிசோதித்தார் "நீங்கள் கவலையின்றிப் போகலாம் கர்னல். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

"உங்கள் போனை உபயோகிக்கலாமா?"- கர்னல் டாக்டர் வீட்டு முன்னறையில் இருந்த டெலிபோனில் யாருடனோ பேசிவிட்டு வந்தார்.

"ராம், லெட் அஸ் கோ."

"ஹௌ அபவுட் எ ட்ரிங்க் கர்னல்?" என்றார் டாக்டர்.

"அப்புறம் - இன்னொரு நாள்!" என்றார். கர்னல் ஜீப்பின் கமறலினூடே.

★

அதே நேரம் பெசன்ட் நகர் பங்களாவின் கேட் அருகே வந்து நின்ற அம்பாஸிடர் காரிலிருந்து, விஜய் தாக்கர் இறங்கினான். முருகபூபதி அந்த 'தாய் கம்ப்யூட்டர்' எது என்று தெரிந்து கொள் என்று சொன்னபின் அவன் தூக்கம் போய் விட்டது. கலைவாணியின் கால்களில் கத்தியை வைத்தே ராம்குமாரை மிரட்டலாம். என்று புறப்பட்டு வந்தால்...

இது என்ன கேட் திறந்து கிடக்கிறது?

பரபரப்பாக உள்ளே ஓடினான்.

விஜய்தாக்கர் மண்ணில் கோலம் போட்டு விழுந்திருந்த இருவரைப் பார்த்தான். மண்ணில் சிந்தி உறைந்திருந்த ரத்தத்தைப் பார்த்தான். படபடவென்று மூச்சிரைக்க மேலே ஓடினான். காற்று மட்டும் நிறைந்த அறைகள் அவனை வரவேற்றன.

விஜய்தாக்கர் காலால் ஒரு முறை மெக்ஸிகன் காளை போலத் தரையை உதைத்தான். ஏதோ தீவிரமாக யோசித்தான். பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்து ஆழமாக இழுத்தான்.

"கண்ணாமூச்சியா ராம்குமார் - கண்ணாமூச்சியா கர்னல்? நான் விடப் போவதில்லை-எங்கே சென்றாலும், எந்தப் பொந்தில் நுழைந்தாலும்!" என்றான் பற்களுக்கிடையில் சிகரெட் புகையைத் துப்பிக் கொண்டே.



ராம்குமார் ஆவடிப் பிரதானச் சாலையிலிருந்து ஜீப்பைத் திருப்பினான். ஒரு குறுகலான சாலையில் ஜீப் விரைந்தது. சாலை சமீபத்தில் தாரால் மெழுகப்பட்டு இருக்க, சிறு கற்கள் ஜீப்பின் சக்கரப் பகுதியில் தகட்டில் அறைந்தன.

ஃ

"ராம்! இது டோனேகேலாவிற்குப் போகும் பாதை. ஒரு நான்கு கிலோ மீட்டர்கள் போனவுடன் இடப்பக்கம் கான்வாஸ் முகாம்களாகத் தெரியும். ஸ்கவுட் கேம்பிற்காக இந்த இடம் இத்தனை நாட்கள் உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. தற்சமயம் அந்த முகாம்கள் காலியாக உள்ளன. அந்த முகாம்களில் ஒன்றை நோக்கி நாம் போகிறோம். இன்று இரவை அங்கே கழிக்கிறோம். கலைவாணிதான் பாவம். நம்முடன் சேர்ந்து அவளும் அவதிப்படுகிறாள்."

"பொன்விழி பத்திரமாக இருப்பாளா கர்னல்?"

"உன்னிடம் இருப்பதைவிட டாக்டர் உத்தமிடம் மிகப் பத்திரமாக இருப்பாள். டாக்டர் உத்தம் நான் சொன்னால் கேள்வி எதுவும் கேட்காமல் சொன்னதைச் செய்யும் அலாவுதீன் பூதம் போல!"

கர்னல் தன் ஜோக்கைத் தானே ரசித்தார். சிரித்துக் கொண்டார். கலைவாணி சிரிக்கவில்லை. ராம்குமார் சிரிக்கவில்லை.

ஜீப் அதன் இன்ஜின் உறுமலுடன் நகர்ந்து கர்னல் காட்டிய திசையில் திரும்பிக் கல்லும், முள்ளும், மரங்களும் நிறைந்த ஒரு தோட்டத்தில் பிரவேசித்தது.

சாயம் போன சுவர் போல வானம் தன் கருமையை இழந்து சாம்பல் தேய்த்துக் குளிக்க ஆரம்பிக்கும் நேரம். சற்றே பச்சை வர்ணம் தோய்ந்த கான்வாஸ் முகாம்கள் ட்ரேட் விளையாட்டில் வைக்கும் வீட்டுப் பொம்மைகள் போல அந்தத் திறந்த வெளியில் சிதறியிருந்தன.

"நிறுத்து!" என்றார் கர்னல்.

அங்கிருந்த முகாம் பசித்த வயிறு போலக் காலியாக இருந்தது. மூவரும் உள்ளே நுழைந்தனர்.

"சிறிது நேரம் ஓய்வெடுப்போம் ராம். விடிந்ததும் ப்ரிகேடியர் நஞ்சப்பாவுடன் தொடர்பு கொள்வோம்."

நாட்டிய உடையின் அசௌகரியத்தோடு கலைவாணி ஓர் ஓரமாக முடங்கிக் கொண்டாள். "பொன்விழியை நினைத்தால் என் நெஞ்சே வெடித்து விடும் போலிருக்கிறது."

"ராம்! அந்த ஃப்ளாப்பி?" என்றார் ஜான் செம்பருத்தி.

"கம்ப்யூட்டர் அறையில் போலி ஃப்ளாப்பியை வைத்து விட்டு அசல் ப்ளாப்பியை எடுத்து வந்தேன். கர்னல்!" ராம்குமார் தன் சட்டைக்குள்ளிருந்து அந்த லாரென்ட்ஸ் என்று பெயரிட்ட ஃப்ளாப்பியை எடுத்துக் கர்னலிடம் நீட்டினான். பாலிதீன் கவரில் பத்திரமாக் கப்பட்டிருந்தது அது.

திடீரென்று வானில் படபடபடவென்று அந்தச் சப்தம். பூமியில் மசமசப்பான நிழலைத் தூவிக் கொண்டு ஒரு ஹெலிகாப்டர் பறந்து வந்தது.

"கர்னல், ஹெலிகாப்டர் சத்தம்!" ராம்குமார் பதறினான்.



ஹெலிகாப்டர் நேரே அவர்களிருந்த முகாமின் எதிரே கால்களால் பதிந்து நின்றது. ஹெலிகாப்டரில் இருந்து இயந்திரத் துப்பாக்கிகளோடு பொலபொல வென்று ஆறு ஆசாமிகள் உதிர்ந்தார்கள். அந்த முகாமைச் சூழ்ந்தார்கள்.

"கர்னல், வெளியே வாருங்கள்" என்றான் முதன்மையாய் நின்றவன்.

"ராம்!" கலைவாணி அச்சத்தோடு ராம்குமாரின் தோளைப் பிடித்துக் கொண்டாள்.

துப்பாக்கி ஆசாமி கர்னலின் சட்டையைக் கொத்தாகப் பற்றித் தூக்கினான். அவர் அவசரமாக முதுகுப்புறம் மறைத்த ஃப்ளாப்பியைக் கைக்குட்டையால் பற்றி இழுத்தான். அவரை மட்டும் தரதரவென்று இழுத்து கொண்டு போய் ஹெலிகாப்டரில் தள்ளினான். ஃப்ளாப்பியை ஒரு முறை வான்வரை தூக்கிப் பார்த்துப் புன்னகைத்தான். துப்பாக்கி ஆசாமிகள் யாவரும் ஹெலி காப்டரில் ஏறிக்கொள்ள, ஹெலிகாப்டர் செங்குத்தாக மேலேறி விரைந்தது.

# 16

ராம்குமார் கலைவாணியின் தோளில் ஆதரவாய் அழுத்தினான்.

"இனி நம் கையில் எதுவும் இல்லை கலைவாணி... நம் கண்ணெதிரிலேயே கர்னலை மறுபடியும் கடத்தி

விட்டார்கள். அவரோடு சேர்ந்து அந்த ஃப்ளாப்பியும் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது..."

கலைவாணி அண்ணாந்து பார்த்துக் கொண்டேயிருந்தாள். கர்னலைக் கட்டாயப்படுத்தி ஏற்றிக் கொண்ட ஹெலிகாப்டர் ஒரு பறவை போல், அப்புறம் கொசுவைப் போல் மாறிக் கண்ணிலிருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இனி இங்கே நாம் நின்றால் ஆபத்து, கலைவாணி வா..." ராம்குமார் அவளை அவசரமாக இழுத்துக் கொண்டு ஜீப்புக்கு ஓடினான்.

"ராம், இந்த இடம்தான் பாதுகாப்பானது. விஜய் தாக்கரின் பார்வையில் படாதது என்று கர்னல் சொன்னாரே?" என்று ஓடும்போது மூச்சிரைத்துக் கொண்டே கேட்டாள்.

"போன நிமிடம்வரை பாதுகாப்பானது என்றுதான் நானும் நினைத்தேன். ஆனால் ஹெலிகாப்டரில் வந்தவர்கள் நம்மைக் கவனித்து விட்டார்கள். இதற்கு மேல் ஒரு நிமிடம் கூட இங்கே இருப்பது என்பது நீச்சல் தெரியாதவன் இருபதடி ஆழத் தண்ணீரில் குதிப்பதற்குச் சமம்."

ராம்குமார் ஜீப்பில் கலைவாணியைத் திணித்துக் கொண்டு வெகு வேகமாகக் கிளப்பினான்.

ஜீப்பின் டயர்கள் புழுதியைக் கிளப்பி வாரி எறிந்து கொண்டு கதறலோடு மண் திரையில் தேய்ந்து உருண்டன.

ஃ

விஜய்தாக்கர் அந்த அறைக்குள் நுழைந்த போது, ஆவேசமாய் இருந்தான். அவனுடைய பூட்ஸ் கால்



கதவை அறைந்து மூடியதில் கோபம் தெரிந்தது. அந்தச் சப்தம் கேட்டு நாற்காலியில் உட்கார்ந்தே கண்ணயர்ந்திருந்த முருகபூபதி ஒரு திடுக்கிடலோடு விழித்துக் கொண்டான்.

"விஜய், என்ன ஆயிற்று?"

"பேசுங்கள், பீரங்கி அளவுக்கு வாயைத் திறந்து நீங்கள் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அந்தத் திருட்டு எலிகள் தப்பி விட்டன."

"வாட் டு யூ மீன்?"

"நம் ஆட்களைத் துணி துவைப்பது போல் துவைத்து விட்டுக் கர்னல் ஜான் செம்பருத்தியும் ராம் குமாரும் அந்த இரண்டு பெண் குதிரைகளுடன் தப்பி விட்டார்கள் என்றேன்."

"மை காட்! அந்த வீட்டிற்குக் காவலை அதிகப் படுத்த வேண்டும் என்று நான் அப்போதே சொல்லவில்லை?"

"சாதாரண வீடு என்று வெளியிலிருந்து பார்ப்பவர்கள் நினைத்து ஏமாற வேண்டும் என்பது திட்டம். ஷோவாக அதிக ஆட்களைப் போட வேண்டாம் என்று நினைத்தேன். அது தப்பா?"

"தப்பு அது இல்லை. அவர்களை ராணுவச் சித்ரவதைகளுக்கு உட்படுத்தாமல் மயிலே மயிலே என்று கெஞ்சியதுதான் தப்பு! அந்த ஃப்ளாப்பி உன்னிடம்தானே இருக்கிறது?"

"ஆம்.... அதற்கென்ன இப்போது?"

"அந்த ஃப்ளாப்பிதான் இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் காரணம். ஸோ, கர்னல் ஜான் செம்பருத்தி நம்

கம்ப்யூட்டர் அறைக்கு வரக்கூடும். வந்து ஃப்ளாப்பியைத் தேடக்கூடும். அதற்கு முன் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது..."

"என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?"

''வா. உடனே கம்ப்யூட்டர் மாளிகைக்குப் போவோம்.'' முருகபூபதி தூக்கம் அத்தனையையும் தொலைத்து விட்டு வேட்டை நாய் போல் எழுந்தான்.

★

இருபுறமும் டோம் விளக்குகள் வைத்த அதே காம்பவுண்ட். ராம்குமார் ஜீப் ஹாரனை பீய்ங்ங் என்று அழுத்திக் கூப்பிட்டான். அல்சேஷன் தன் ஆட்சேபத் தைக் குரைத்துக் காட்டியது. ஜன்னலைத் திறந்து டாக்டர் உத்தம் தலையைக் கொக்கு போல் நீட்டினார். சற்றே குழம்பிவிட்டு, ''நீயா?'' என்று கதவைத் திறந்தார். "கர்னலுடன் வந்தவன்தானே நீ?"

"ஆம் டாக்டர்... பொன்விழி எப்படியிருக்கிறாள்?"

"தோட்டாவைத் தோண்டி எடுப்பது என்பது சுவரில் இருந்து ஆணியைப் பிடுங்குவது போல் சுலபம் இல்லை இளைஞனே. அதுவும் வசதிகள் நிறைந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகாமல் என் வீட்டிலேயே ரகசியமாய் அந்த ஆபரேஷனைச் செய்ய வேண்டும் எனும் போது, விஷயம் இன்னும் தீவிரமாகிறது... கர்னல் எங்கே?''

"கர்னல் அவசரமாய் வேறு ஒரு பொறுப்பை ஏற்கும் படியான சூழ்நிலை. தன் வாழ்த்துகளைத் தெரிவிக்கச் சொன்னார். இன்னொரு உதவியும் உங்களிடம் கேட்கச் சொன்னார்."



"என்ன?"

"பொன்விழிக்குத் துணையாக இவளையும் இங்கே உங்கள் பொறுப்பில் விட்டு வைக்கச் சொன்னார்..."

"கர்னலுக்காக நான் எதையும் செய்வேன். ஏன் என்றால், போர் முனையில் என் தம்பியை அவர்தான்..."

"அந்தக் கதையைக் கர்னல் என்னிடம் பல முறை சொல்லியிருக்கிறார். டாக்டர்!" என்று கண் சிமிட்டாமல் புளுகினான் ராம்குமார். ''நான் இப்போது வெகு அவசரத்தில் இருக்கிறேன்... கலைவாணி... பத்திரமாய் இரு... இந்தா, இந்தப் பணம் உனக்கு மாற்றுத் துணிகள் வாங்கப் பயன்படும்."

"ராம்!" கலைவாணியின் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. "டெல்லி புரோகிராமுக்கு எந்த வேளையில் ஒப்புக் கொண்டேனோ? நாம் இருவரும் ராமனும், சீதையும் போலப் பிரிந்தே இருக்க வேண்டியுள்ளது..."

"கவலைப்படாதே... பட்டாபிஷேகத்தில் சந்திப் போம்!" ராம்குமார் அவளிடமிருந்து விடுபட்டு ஜீப்பில் தாவி ஏறினான்.

"கம் இன் மை சைல்ட்!" என்றார் டாக்டர் உத்தம்.

விஜய்தாக்கருக்கு சல்யூட் வைக்கும் ராணுவ ஆபீசர்கள் சற்றே குழம்பினார்கள். இந்த ஆபீசர் என்ன சில மணி நேரங்களுக்கொரு முறை கம்ப்யூட்டர் அறையை விசிட் செய்கிறார்?

அவர்களைப் பற்றிச் சற்றும் சிந்தனை செய்யாமல் விஜய்தாக்கர் முருகபூபதியுடன் குளுமை செய்யப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்தான்.

"கேப்டன்!" என்று குரல் கொடுத்தான்.

உடன் அந்த அறையின் ஆரம்ப மேஜைக்குப் பின்னே இருந்தவன் விரைந்து எழுந்தான்.

"கேப்டன் .. கர்னல் ஜான் செம்பருத்தியை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்..." என்று முருகபூபதியைச் சுட்டிக் காட்டினான்.

"யெஸ் ஆபீசர். ஐ நோ ஹிம்..."

"கர்னலைப் போலவே தோற்றமளிக்கும் இன்னொரு போலி மனிதன் இருப்பதாக எங்களுக்கு நம்பகமான தகவல்கள் வந்துள்ளன..."

"கர்னலைப் போலவே... அது எப்படிச் சாத்தியம், ஆபீசர்?"

"லிஸன்... அந்தப் போலி ஆளும் கர்னலைப் போல யூனிபார்ம் அணிந்து தான்தான் ஒரிஜினல் செம்பருத்தி என்று சொல்லிக் கொண்டு நம் ராணுவ ரகசியங்களை அறியும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறானாம்..."

"ஈஸ் இட்?"

"ஒன்றைக் கவனத்தில் வையுங்கள் கேப்டன். ஒரிஜினல் கர்னல் என்னுடன் சேர்ந்துதான் வருவார். தனியே கர்னல் என்று அடையாள அட்டையைக் காட்டும் எந்த ஆளையும் இந்தக் கம்ப்யூட்டர் அறைக்குள் பிரவேசிக்க அனுமதிக்காதீர்கள். அப்படி யாராவது வந்தால் மடக்கி வைத்துக் கொண்டு உடனே எனக்குத் தகவல் கொடுங்கள். அண்டர்ஸ்டாண்ட்?"

"யெஸ் ஆபீசர்..."

"கர்னல், கமான்!" என்று முருகபூபதியுடன் விஜய் தாக்கர் திரும்பினான்.

"விஜய், ஒரு நிமிடம்!" என்றான் முருகபூபதி. "அந்த ஃப்ளாப்பி எங்கே?" என்றான் கதவருகே வந்தவுடன்.



"ஏன்? என்னிடம்தான் இருக்கிறது."

"எங்கே?"

"இதோ இங்கே..." விஜய்தாக்கர் தன் கையிலிருந்த காக்கி கவரைத் தட்டிக் காட்டினான்.

"கம்ப்யூட்டரில் ஒரு முறை அதை முயற்சி செய்து பார்க்கலாம் என்று நினைக்கிறேன், விஜய்."

"உங்களுக்கென்ன பைத்தியமா? அதுதான் வேலை செய்யாதே."

"முயற்சி செய்வதில் தவறில்லை விஜய். ராம்குமாரும், ஜான் செம்பருத்தியும் சொன்ன சங்கேத வார்த்தைகளைச் சற்றுப் புரட்டிப் போட்டுப் புது வார்த்தைகள் அமைத்தால்?"

"உங்கள் ஆசையைக் கெடுப்பானேன்? இந்தாருங்கள்." விஜய்தாக்கர் வேகமாக அந்தக் கவரை முருகபூபதியிடம் நீட்டினான்.

முருகபூபதி கம்ப்யூட்டரை நெருங்கினான். சுழல் இருக்கையில் உட்கார்ந்து பவர் சுவிட்சைத் தட்டினான். ஃப்ளாப்பியை வெளியே எடுத்தான். உடன் அவன் கண்கள் நிலா போல் விரிந்தன.

"விஜய்! எங்கே அந்த ஒரிஜினல் ஃப்ளாப்பி!"

"என்ன சொல்கிறீர்கள் முருகபூபதி?"

"சக்கையாக ஏமாற்றப்பட்டிருக்கிறாய், விஜய்! ராம்குமார் டில்லியிருந்து கொண்டு வந்து ஃப்ளாப்பியில் ரஷ்ய எழுத்துக்களும் இருந்தன. இது அதே லாரென்ட்ஸ் கம்பெனியிலிருந்து நாம் தருவித்த வேறொரு ஃப்ளாப்பி... எப்படி இது மாறிப் போனது?"

விஜய்தாக்கர் ஆத்திரத்துடன் நாற்காலி முதுகில் தன் கையை வேகமாக இறங்கினான்.

"கம்ப்யூட்டரைத் தானும் ஆப்பரேட் செய்து பார்ப்பதாக அன்றைக்கு ராம்குமார் கேட்டபோது நான் அனுமதித்தேன். அப்போதுதான் மாற்றியிருக்கிறான், ப்ளடி..." என்று அச்சிட முடியாத மொழியில் ராம்குமாரைச் சபித்தான். "முதலையிடம் விளையாடும் குரங்கு போல் என்னிடம் விளையாடுகிறான் அவன். இன்னும் ஐந்தே நிமிடத்தில் அவனைப் பிடிக்கிறேன், பாருங்கள்..."

"எப்படி?"

"அவன் தப்பித்துப் போயிருப்பது ஒரு ராணுவ ஜீப்பில் அதன் எண்ணை இப்போதே எமர்ஜென்ஸி ஸ்க்வாடிடம் சொல்லி... ராம்... நீ என்னிடம் மாட்டும் போது, கண்ணீர் சிந்த உன்னிடம் கண்களே இருக்கப் போவதில்லை..."

ஃ

ராம்குமார் ஜீப்பை விமான வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தான். இளங்காலைப் போக்குவரத்து அவனது வேகத்திற்கு எந்தத் தடையும் சொல்லவில்லை. அவனுடைய சிந்தனை அந்த ஜீப்பை விடவும் வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

இருக்கும் நிலைமையில் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. கர்னல் சந்திக்கச் சொன்ன ப்ரிகேடியர் நஞ்சப்பாவைச் சந்தித்து நடந்தவரை விஷயங்களைத் தெளிவாக்கி விடவேண்டும்.



பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஜீப்பை விரட்டிக் கொண்டிருந்தபோதுதான் ராம்குமாருக்கு அந்தச் சந்தேகம் வந்தது. ரியர்வியூ கண்ணாடியில் கவனித்தான். வெகுசீரான இடைவெளிக்குப் பின்னே பச்சை வண்ணம் பூசிய இன்னொரு ஜீப் வால் போல் தொடர்ந்து கொண்டிருந்தது. ராம்குமார் தன் டீஸல் பெடலைத் தரையோடு தரையாக அழுத்தினான். பின்னாலிருந்த ஜீப்பும் அந்த வேகத்தை உடனே பிடித்துக்கொண்டது. சாலை துப்புரவாக இருக்கும் பட்சத்தில் அந்த ஜீப்பால் தன்னை நெருங்க முடியாது என்று ராம்குமார் கணித்தான்.

எழும்பூர் பாலத்தைத் தாண்டும் நேரம் சரேலென ஒரு பஸ் வந்து பாதையில் முன்னே செருகிக் கொள்ள ராம்குமார் வேறு வழியின்றி ப்ரேக்கைப் பலம் கொண்ட மட்டும் அழுத்தினான். டயர்கள் கிய்ங் கிய்ங் என்று கதற, பின்னாலிருந்த ஜீப் நூறு, ஐம்பது, இருபது என்று பத்தடி இடைவெளிக்குள் வந்து விட, பின் ஜீப் டிரைவரை உன்னதமாகப் பார்க்க முடிந்தது.

கிரண்!

கிரண் தன் இடுப்பிலிருந்து துப்பாக்கியை அவிழ்த்தான். ராம்குமாரை எந்த யோசனையுமில்லாமல் அவனால் சுட முடியும்! லைசென்ஸ் இருக்கிறது. காரணம் கேட்டால் ராணுவ ஜீப்பை ராம்குமார் திருடிக் கொண்டு ஓடினான்.

மிகச் சரியாகக் கார்ப்பரேஷன் மாளிகையருகில் முன்னால் சென்ற பஸ் எதற்கோ க்ரீய்ச் என்று நிற்க ராம்குமார் அதன்மீது மோதுவதைத் தவிர்க்க, இடதுபுறம் ஜீப்பை வளைக்க...

கிரணின் உயர்த்தப்பட்ட துப்பாக்கியின் நேர்கோட்டில் அவன் வந்து சேர்ந்தான்.

கிரண் வெகு கவனத்துடன் துப்பாக்கியின் விசையை இழுத்தான்.

# 17

கிரணின் துப்பாக்கியிலிருந்து .38 தோட்டா, அதி வேகமாகச் சுழன்று வந்து, ராம்குமாரை நூலிழை இடைவெளியில் தவறவிட்டு ஜீப்பின் முன் கண்ணாடியில் பொத்தலிட்டு, முன்னால் நின்றிருந்த பஸ்ஸின் பின்புறத்தில் வலிமையிழந்து மோதி விழுந்தது.

கண்ணாடி உடைபட்ட 'டிஷ்யூங்' சப்தம், அந்தப் பிரதேசத்தில் இருந்த அத்தனை பேரையும் திரும்ப வைத்தது. போலீஸ்காரரின் வாயிலிருந்த ஊதல் நழுவித் தரைக்குப் போனது. குறுக்கில் நீட்டிய கையை அவர் அவசரமாக இழுத்துக் கொண்டார்.

ராம்குமார் வெகு துடிப்பாகி சீட்டில் அப்படியே படுத்துக் கொண்டான். ஆனால் ஜீப்பின் கட்டுப்பாட்டை விட்டுவிடவில்லை. ஸ்டீயரிங்கை ஒரு சுழற்றுச் சுழற்றினான். அவனுடைய ஜீப் இப்போது போக்குவரத்திற்கு முற்றிலும் குறுக்காக 90 டிகிரி கோணத்தில் வந்து பஸ்ஸின் பின்புறத்திற்கும், பின்னால் வேகம் குறைந்த கிரணின் ஜீப்புக்கு குறுக்கில் நுழைந்து திடீர் வேகத்துடன் பாய்ந்து பறந்தது.



ஸைடன்ஹாம்ஸ் சாலையில் ராம்குமார் அதிவேகமாக ஜீப்பை ஓட்டினான். போலீஸ்காரர் விசிலைத் தேடி எடுத்துப் "பீய்ங் பீய்ங்" என்று ஊதிக் கொண்டிருக்க, பஸ்ஸிலிருந்து அத்தனை ஜன்னல்கள் வழியாகவும் தலைகள் எட்டிப் பார்த்தன.

கிரண் தன் குறி தவறியதற்காகத் தன்னைத் தானே சபித்துக் கொண்டான். ஜீப்பை வளைத்துத் திருப்பி ராம்குமாரின் ஜீப்பை விரட்ட ஆரம்பித்தான்.

அந்தப் பரந்த சாலையில், அந்த ஜீப்கள் ஒன்றன்பின் ஒன்றாக விரைந்த காட்சி, ஏதோ பல ஒத்திகைகளுக்குப் பிறகு நடத்தப்படும் ஹாலிவுட் படப்பிடிப்புப் போல இருந்தது. ராம்குமார் அதிகமாகத் தலையை உயர்த்தாமல், அதே சமயம் எதிர் வரும் வாகனங்களைத் தவற விடாமல் வெகு சாதுரியமாக ஜீப்பை வளைத்து வளைத்து ஓட்டினான். தன் கைவசம் எந்த ஆயுதமும் இல்லாததற்காக வருத்தப்பட்டான். அவனுக்குத் திடீரென ஒரு திட்டம் மனதில் உருவானது.

ஜீப்பின் பிரேக்கைப் பலங்கொண்ட மட்டும் அழுத்தினான். தார் ரோட்டில் ரப்பர்கள் தேய நான்கு சக்கரங்களுக்கு சிறிது தூரம் சறுக்கி விட்டுச் சாலையோரமாக விளக்குக் கம்பத்தின் அருகே ஜீப் ஒதுங்கியது. கிரண் இந்த திடீர் நிறுத்தத்தை எதிர்பாராததால், ஜீப்பின் வேகத்தைக் குறைத்து அவன் நிறுத்தத்திற்கு வருமுன், ராம்குமார் காணாமல் போயிருந்தான். அவன் ஓட்டி வந்த அந்த ஆர்மி ஜீப் அநாதையாக நின்று கொண்டிருந்தது.

கிரண் தன் ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினான். சுற்றுமுற்றும் பார்த்தான். அதற்குள் ராம்குமார் எங்கே போய்விட முடியும்?

படபடவென்ற சப்தத்தோடு ஒரு புல்லட் மோட்டார் சைக்கிள் அவனை நெருங்கியது. நின்றது. வெள்ளை மேல் சட்டை அணிந்த ஒரு போலீஸ் அதிகாரி இறங்கினார். அவர் அனுகலில் ஓர் உஷார் இருந்தது.

"என்ன நடக்கிறது இங்கே? துப்பாக்கியைப் பயன் படுத்தியவர் நீங்கள்தானே?" என்று உறுமினார்.

"என் பெயர் கிரண். ராணுவத்தைச் சேர்ந்தவன். இதோ பாருங்கள் அடையான அட்டை. ஒரு துரோகி தப்பித்து வந்தான். அவனை நான் துரத்தினேன்."

போலீஸ் அதிகாரியின் முகத்திலிருந்த கடுமை விலகியது. ஒரு மரியாதை வந்து அமர்ந்தது.

"ஐ, ஸீ..." என்றார். "நான் உங்களுக்கு உதவலாமா?"

"நிச்சயமாக!" என்றான் கிரண். "அவன் இங்கே தான் எங்கோ ஒளிந்திருக்கிறான். திறந்திருக்கும் இந்தக் கடைகளில் சோதனை போட நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்..."

ஃ

கிரணும், அந்த அதிகாரியும் ஒவ்வொரு கடையாக நுழைந்து கொண்டிருந்த நேரத்தில் ராம்குமார் ஒரு லாரியின் முதுகில் ஒளிந்திருந்தான். ஓடும் லாரியிலிருந்து அவனுக்குக் கை கொடுத்து உள்ளே இழுத்துக் கொண்ட முண்டாசு ஆசாமியை ராம்குமார் வியப்போடு பார்த்தான்.

"மாணிக்கம், நீயா?"

விக்டோரியா ஹோட்டலில் ஜான் செம்பருத்தியைச் சந்திப்பதற்காகப் போனபோது, பெயிண்ட் கம்பெனியைச் சேர்ந்தவன் போல நூறாம் எண் அறைக்குச் சாரங்கள் வழியே ஏறிப் போக உதவிய அதே மாணிக்கம்!



"ஏம்ப்பா ஆக்டரு, டைரக்டர் ரூம்ல பூந்தியே, என்னோட பெயிண்ட் டப்பாவையும், பிரஷ்ஷையும் திருப்பித் தர வேணாம்?"

"தப்புதான்!" என்றான் ராம்குமார். "அன்றைக்கு அடுத்தடுத்துச் சில பரபரப்பான சம்பவங்கள். அதனால் தான் உன்னிடம் வந்து நன்றி சொல்லக்கூட முடியவில்லை..."

"அத்த வுடு. செலீக்ட் பண்ணாங்களா இல்லியா?"

"செலக்ட் செய்து ஷூட்டிங் கூட ஆரம்பித்தாயிற்று மாணிக்கம், இப்போது ஜீப்பிலிருந்து குதித்து ஓடி வந்து லாரியில் ஏறினேனே, அது கூட ஒரு ஸ்டண்ட் காட்சிக்காகத்தான்."

"இந்த மாதிரி ஸீனுக்கெல்லாம் டூப் போட்டுக்க வாத்தியாரே! கீய வியுந்து கை கால் பூடப் போவுது."

"மாணிக்கம் லாரியை அப்படி ஓரமாக நிறுத்தச் சொல். நான் இறங்கிக் கொள்கிறேன்." ராம்குமார் ஒரு நூறு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினான். "என் அன்பளிப்பாக வைத்துக் கொள்."

"அட, துட்டு யார் கேட்டாங்க? நீ பெரிய ஆக்டராவா! ரோட்டுல எல்லா போஸ்டர்லயும் உன் மூஞ்சியைப் பாத்தா அதுவே எனக்கு சந்தோஷம்."

ஃ

விஜய்தாக்கர் ரிசீவரை ஆத்திரத்தோடு அதன் தொட்டிலில் எறிந்தான்.

"கிரணுக்குப் பூச்சி காட்டிவிட்டு மறுபடியும் ராம் குமார் தப்பி விட்டானாம்."

"இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்றான் முருகபூபதி.

"துப்பாக்கியை எடுத்து உங்கள் உடம்பைச் சல்லடையாக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"விஜய்! நிதானம் இழந்து பேசாதே...துப்பாக்கிக்குப் பலியாக்குவதற்காகவா என்னை இத்தனை கஷ்டப்பட்டு கர்னல் ஜான் செம்பருத்தியாக உருமாற்றினாய்?"

"கஷ்டப்பட்டேன். பணத்தை வாரி இறைத்தேன். உண்மை. ஆனால் எதற்காக உங்களைக் கர்னலாக மாற்றினேனோ அது இனிமேல் கைகூடாது."

"விஜய்! இப்பொழுதாவது சொல். என்னதான் திட்டம் வைத்திருக்கிறாய்?" விஜய்தாக்கர் முருகபூபதியைச் சற்று நேரம் வெறித்தான். சிகரெட்டை வேக வேகமாக உறிஞ்சிப் புகையைத் துப்பினான்.

"தெரிந்து கொள்ளுங்கள். எத்தனை பெரிய வாய்ப்பை நாம் இழக்கவிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்..." தன் காலால் நாற்காலியை நெம்பி அருகே இழுத்து அதில் அமர்ந்தான்.

"ரஷ்யா இந்தியாவோடு நட்பு வைத்திருக்கிறது. தன் விஞ்ஞான சாதனைகளைக்கூட இந்தியாவோடு பகிர்ந்து கொள்ளத் தயாராயிருக்கிறது. நவீன உலகில் விஞ்ஞானம் அதிவேகமாக வளர்ந்து வருகிறது. கம்ப்யூட்டர்கள் நாடுகளை ஆளத் துவங்கி விட்டன. இதே வேகம் ஒற்றர் வேலைகளிலும் வந்து விட்டது. அடுத்த நாட்டுக்குச் சந்தேகம் வராமல் ஸ்பை வேலைகளைச் செய்வது எப்படி என்று மூளையைக் கசக்கிக் கொண்டு ரஷ்யர்கள் சில தியரிகளை உருவாக்கியிருக்கிறார்கள். படு ரகசியமாக தகவல்களைப் படுபடு ரகசியமாக கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைத்துக் கொள்வது எப்படி என்று ஆராய்ந்திருக்கிறார்கள்."



"அதற்கும் நான் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டதற்கும் என்ன தொடர்பு, விஜய்?"

"இந்த ரகசிய ஆராய்ச்சிகளின் பலன்களை இந்தியாவோடு பகிர்ந்து கொள்ள ரஷ்யா சம்மதித்தது. இந்தியாவிலிருந்து ஒரு ராணுவ அதிகாரியை ரஷ்யாவுக்கு அனுப்பி அங்கு அவருக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிடப்பட்டது. பதின்மூன்று மாதங்களுக்கு முன் பயிற்சிக்காக அனுப்பப்பட வேண்டியவர் யார் என்பது தீர்மானமானது."

"கர்னல் ஜான் செம்பருத்திதானா அது?"

"ஆம். மிக உயர்மட்டத்திற்கு மட்டுமே அது தெரியும். கர்னலுக்குப் பதிலாக மாற்று ஆளை அனுப்பும்படி இன்னொரு நாடு என்னைக் கேட்டுக் கொண்டது."

"அமெரிக்கா?"

"அந்த விவரங்கள் உங்களுக்கு வேண்டாம் முருகபூபதி. உங்களை ஜான் செம்பருத்தியாக உருமாற்றி ராணுவ ஆபீஸ்களில் நடமாட விட்டு யாருக்கும் சந்தேகம் வரவில்லை என்று அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். ரஷ்யாவிற்கு நீங்கள் கர்னலாகப் பயணம் செய்து, அவர்களுடைய திட்டங்களைப் பூரணமாக அறிந்து வருவீர்கள் என்று காத்திருந்தேன். ஆனால்

டெல்லியிலிருந்து வந்த ஒரு பெட்டி, நம் திட்டத்தையே தவிடு பொடியாக்கி விட்டது."

"ஜான் செம்பருத்தி ரஷ்யாவிற்குப் போகும் விஷயம் மிக உயர் மட்டத்திற்குத்தான் தெரியும் என்றாயே, அவர்கள் யார் யார்?"

"அது தெரிந்து என்ன ஆகப் போகிறது?" என்றான் விஜய் தாக்கர். ஆனால் உடனே அவன் கண்கள் பிரகாச மாயின. "யூ ஆர் கரெக்ட் முருகபூபதி. தப்பித்துப்போன ஒரிஜினல் கர்னலும், ராம்குமாரும் அவர்களைத் தேடித்தான் போயிருப்பார்கள். சென்னையில் ஒருவர் இருக்கிறார். ப்ரிகேடியர் நஞ்சப்பா, அவர் கர்னலின் ஆத்ம நண்பர். எனக்கு இது ஏன் முன்னாலேயே தோன்றாமல் போய் விட்டது?"

"ஆத்திரப் படும்போது அறிவு மழுங்கிப் போகும் விஜய்!"

ஃ

ராம்குமார் பஸ்ஸிலிருந்து உதிர்ந்து கொண்டான்.

கடற்கரைச் சாலையில் காலைப் போக்குவரத்து மும்முரமாகி விட்டது. நேர் எதிரே சென்னையின் பெருமையைப் பேசிக் கொண்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அதில் உயரமான கம்பத்தின் உச்சியில் பறக்கும் மூவர்ணக் கொடி கல் சுவர் காம்பவுண்டுக்குப் பின்னே இந்தியன் நேவி சர்வீஸின் அதிகார பூர்வமான அலுவலகம்.

அங்கேதான் போக வேண்டும். ப்ரிகேடியர் நஞ்சப் பாவைச் சந்திக்க வேண்டும்.



ராம்குமார், சாலையைப் பாதசாரிகளுக்கென பெயிண்ட் செய்யப்பட்ட இடத்தில் கடந்தான்.

பாதி கடக்கும்போதுதான் நிமிர்ந்தான். அதிர்ந்தான்.

கோட்டையின் வெளியே மப்டியில் கறுப்புக் கண்ணாடி அணிந்து ராம்குமாரையே பார்த்துக் கொண்டு...

விஜய் தாக்கர்!

ராம்குமார் சரேலெனப் பின் வாங்கினான்.

விஜய் தாக்கர் உஷாராகி ராம்குமாரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தான். அந்த நேரம் பார்த்தா இருவருக்கும் நடுவில் வரிசையாக வாகனங்கள் விரைய வேண்டும்? கடைசியாக ஒரு பல்லவன் பஸ் கடந்ததும், ராம்குமார் மறைந்து விட்டான். 'ஓடும் பஸ்ஸில் ஏறி விட்டாயா, ராம்? வருகிறேன்.'

விஜய் தாக்கர் தன் மோட்டார் சைக்கிளில் தாவி ஏறினான். போக்குவரத்தின் குறுக்கே புகுந்து அந்த பஸ்ஸைத் துரத்தினான். ராம்குமார் ஒளிந்திருந்த மரத்தின் பின்னிருந்து வெளிப்பட்டான். தான் பஸ்ஸில் ஏறிவிட்ட தாக நினைத்து விஜய் தாக்கர் ஏமாந்து விட்டதைத் திருப்தி யோடு ரசித்தான். சாலையைக் கடந்து கோட்டைக்குள் நுழைந்தான். நேவி அலுவலகத்திற்குள் நடந்தான். அனுமதி பெற்றுக் கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்தான்.

ப்ரிகேடியர் நஞ்சப்பா தன் இருக்கையிலிருந்து நிமிர்ந்தார்.

"வா, ராம்குமார்."

ராம்குமார் விறைப்பாக மரியாதை செலுத்திவிட்டு அவர் சுட்டிக் காட்டிய நாற்காலியில் பதியாமல் உட்கார்ந்தான்.

"தவறு நடந்து விட்டது. ப்ரிகேடியர், கர்னல் ஜான் செம்பருத்தியை அவர்கள் மறுபடியும் கடத்தி விட்டார் கள்."

ப்ரிகேடியர் நஞ்சப்பா மூன்று விரல் அகலத்திற்குப் பறவை இறகு போல் படர்ந்திருந்த தன் மீசையை வருடிக் கொண்டார்.

"யங் மேன், நீ நினைப்பது போல் கர்னல் கடத்தப் படவில்லை, பத்திரமான இடத்திற்குத்தான் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்..."

"என்ன!"

"ஆம் டியர் ராம்குமார். டாக்டர் உத்தமின் வீட்டி லிருந்து அவர் போன் மூலம் தொடர்பு கொண்டார். டோனே கேலா கேம்ப்பில் தன்னை வந்து பிக் அப் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். உன்னுடன் இன்னொரு பிரஜை - கலைவாணி என்று சொன்னார் இருப்பதால் அந்த நடவடிக்கை பட்டவர்த்தனமாக இருக்க வேண்டாம் என்றார். அதற்காகத்தான் துப்பாக்கி நாடகம்."

"கர்னல் இப்போது எங்கே?" ராம்குமார் பரபரப் பாகக் கேட்டான்.

"பெங்களூரில் ஆர்மி ஆபீஸில். ரஷ்யாவிலிருந்து வந்த அந்த ஃப்ளாப்பியைச் சென்னையில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட கம்ப்யூட்டரும், பெங்களூரில் இருக்கும் இன்னொரு கம்ப்யூட்டரும் மட்டுமே படிக்க முடியும்."

"கர்னல் அந்த ஃப்ளாப்பியைப் படித்து விட்டாரா?"

"அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறாய், இல்லை?" நஞ்சப்பா தன் இருக்கையில் நிமிர்ந்தார்.



'அதைத் தெரிந்து கொள்ள நானும் வெகு ஆவலாய் இருக்கிறேன்' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான் அந்த அறைக் கதவின் மீது தன் காதை வைத்துக் காத்திருந்த முருகபூபதி.

# 18

விஜய்தாக்கர் போர்முனையில் ஆயுதங்களை இழந்தவன் போல அச்சமுற்றான்.

பஸ்ஸைத் துரத்திப் போய் அடுத்த ஸ்டாப்பிலேயே அதை இந்த முனையிலிருந்து அந்த முனைவரை ஆராய்ந்து விட்டான். ராம்குமார் அதில் இல்லை. கண் களில் மண்ணைத் தூவிவிட்டுக் கோட்டைக்குள் நுழைந்து விட்டானா?

அவன் ப்ரிகேடியர் நஞ்சப்பாவைச் சந்தித்து விட்டால் ஆபத்து!

தான் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் தனக்குச் சம்பளம் கொடுக்கும் வெளிநாட்டு ஏஜென்ஸி என்னென்ன தண்டனைகள் கொடுக்கும் என்று யோசித் தான். அவன் உடல் தீர்மானமில்லாமல் நடுங்கியது.

தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது. இனி ராம்குமாரோ, நஞ்சப்பாவோ உயிரோடு இருக்கக்கூடாது. தன் ரிவால்வரைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். மோட்டார் சைக்கிளை ஆவேசமாகத் திருப்பினான்.

★

ப்ரிகேடியர் நஞ்சப்பா தன் மீசையை வருடிவிட்டுத் தொடர்ந்தார்.

"ராம்குமார், அந்த ஃப்ளாப்பியில் இருந்ததைச் சொல்வதற்கு முன்னால் சில விஷயங்களை உனக்குத் தெளிவு படுத்தவேண்டும். இந்தியா பரந்த மனப்பான்மை கொண்ட நாடு. எந்த நாட்டைச் சேர்ந்தவர்களையும் இனிய முகத்தோடு இருகரம் நீட்டி வரவேற்று வந்திருக் கிறது. நம் நாட்டிற்குள் மாணவர்கள் என்ற பெயரில், கம்பெனி ஊழியர்கள் என்ற முகங்களில், இன்னும் சுற்றுலாப் பயணிகளோடு கலந்து என்று பல வழிகளில் வெளிநாட்டு ஒற்றர்கள் புகுந்து விட்டார்கள்."

"நான் அறிவேன்" என்றான் ராம்குமார், இன்டர்வியூ போர்டுக்கு முன்னே அமர்ந்திருக்கும் இளைஞனைப் போல.

"அப்படி நம்மோடு கலந்து விட்டவர்கள் தனியாகச் செயல்பட்டு விட முடியாது. அதற்கு உள்ளே ஒவ்வொரு மட்டத்திலும் ஆட்களைத் தயார்ப்படுத்தி விட்டார்கள். எனக்குச் சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது. நம் நாட்டில் பிறந்து, நமது உணவைத் தின்று, இந்திய ராணுவ முகாம்களில் பயிற்சி பெற்று முன்னேறிய சிலர், இன்றைக்கு அந்நியச் சக்திகளிடம் செஸ் போர்டு காயின் களைப் போல சிக்கி விட்டார்கள். பணமும், வசதியும் அவர்களை விலை போக வைத்துவிட்டன. நமது அதி முக்கிய ராணுவ ரகசியங்கள் வெகு சாமர்த்தியமாக வெளி யேற்றப்பட்டு வரும் நிலை உருவாகிவிட்டது. இதைச் சரி செய்ய வேண்டும். எப்படி?"



"அந்தத் துரோகிகள் யார் யார் என்ற பட்டியலைத் தயாரித்து அவர்களுடைய முகத் திரைகள் கிழிக்கப்பட வேண்டும்."

"ஆவேசப்படாதே இளைஞனே! அதைத்தான் செய் திருக்கிறோம். நேர்மையான சில அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்தோம். இந்த விஷயத்தில் நமக்கு ரஷ்யர்களின் உதவி தேவைப்பட்டது. அவர்கள் நம் நண்பர்கள். மற்ற நாடுகளில் அவர்களுக்கிருந்த அமைப்பை வைத்து நம் நாட்டிலிருந்து யார் யார் ரகசியங்களை வெளியே விடு கிறார்கள் என்ற பட்டியலை ரஷ்ய ரகசிய இலாகா ஒரு வருடமாகத் தயாரித்து வருகிறது. இந்திய முனையில் அதற்கு கர்னல் ஜான் செம்பருத்தியைப் பொறுப்பா ளராய் நியமித்திருந்தோம்."

ராம்குமார் சற்றே ஆர்வம் தெறிக்க மேஜையருகே சாய்ந்தான்.

"அப்படியென்றால் காம்ரேட் விலாடிமீரும், காம்ரேட் சுபோவ்ஸ்க்கியும் டில்லி வந்தபோது..."

"கரெக்ட். அவர்கள்தாம் அந்த ஃப்ளாப்பியைக் கொண்டு வந்தார்கள். அந்த ஃப்ளாப்பியில் இந்தியத் துரோகிகள் அத்தனை பேருடைய பெயர்களும், அவர்க ளுடைய கான்டாக்ட் நபர்களைப் பற்றிய விவரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன."

"அதைச் சென்னையிலோ அல்லது பெங்களூரிலோ உள்ள இரண்டு குறிப்பிட்ட கம்ப்யூட்டர்களில் மட்டுமே படிக்க முடியுமா?"

"ஆம் அந்த ரஷ்யர்களுக்கே குறிவைத்து எதிரி களால் ஒரு திட்டம் தீட்டப்பட்டிருந்தது. அந்தத் தகவல்

நமக்கு வந்ததும், அந்தத் திட்டத்தை முறியடிக்க வாசுதேவ் ஏவப்பட்டான். டில்லியின் பனி மிகுந்த இளங்காலையில் எதிரிகள் சென்ற ஜீப்பைக் கவிழ்த்து அவர்களைப் பாதையிலிருந்து விலக்கினான் வாசுதேவ்..."

"ஆனால் அவரே எதிரிகளிடம் சிக்கிக் கொண்டார் பாவம். இப்போது நாம் எப்படிச் செயல்படப் போகிறோம் என்பதை எனக்குச் சொல்ல உங்களுக்கு விருப்பமா ப்ரிகேடியர்?" ராம்குமார் ஆர்வமாகக் கேட்டான்.

ப்ரிகேடியர் நஞ்சப்பா சிரித்தார். "நீ துடிப்பான இளைஞன். அவசரமான கட்டங்களில் சாதுர்யமாக நடந்து எதிரிகளை அலைக்கழித்திருக்கிறாய். உனக்கு ஒரு வளமான எதிர்காலம் அமைக்கப்பட்டிருக்கிறது."

"தவறு, ப்ரிகேடியர். அவனுடைய எதிர்காலத்தை ரப்பர் போட்டு அழிப்பதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன்..." என்று குரல் வந்தது. கதவைத் திறந்து முருகபூபதி அங்கே நின்றிருந்தான். சைலன்ஸர் பொருத்தப்பட்ட அவன் துப்பாக்கி தோட்டாக்களைத் துப்பத் தயாராய் இருந்தது.

"கர்னல் ஜான் செம்பருத்தி! நீங்களா?"

"இல்லை, ப்ரிகேடியர். இது போலி, பெயர் முருகபூபதி..." என்றான் ராம்குமார், தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டே.

"ப்ரிகேடியர், உங்கள் துப்பாக்கியையும், ராம்குமாரின் துப்பாக்கியையும் இங்கே தூக்கி எறியுங்கள்."

முருகபூபதி சொன்னபடியே ப்ரிகேடியர் செய்தார். முருகபூபதி சிரித்தான்.

"என்ன சொன்னாய், கண்மணி? எங்கள் முகத்திரைகள் கிழிக்கப்பட வேண்டுமா? இப்போது பார், உன் வயிற்றை உன் நெஞ்சை, உன் நெற்றியை என் துப்பாக்கி எப்படித் கிழிக்கப் போகிறது என்று...எழுந்திரு."



ராம்குமார் எதிர்பார்த்திருந்த அந்தச் சின்ன வாய்ப்பு வந்து விட்டது. நாற்காலியிலிருந்து எழுந்திருக்க முற்பட்டு, சரேலெனக் குனிந்தான். தன் கால்களால் குதிரை போல் நாற்காலியை உதைத்துப் பின்புறம் வெகு வேகமாகத் தள்ளினான். நாற்காலி ஐஸ் கட்டிகளில் விளையாடும் ஸ்கேட்டிங் வீரர்களைப்போல் வழுக்கிக் கொண்டுபோய் முருகபூபதியின் முழங் கால்களில் மோதியது.

அதற்குள் முருகபூபதியின் துப்பாக்கி 'டபுக்' என்று இரும, ஒரு தோட்டா பாய்ந்து ராம்குமாரையும், குனிந்து விட்ட ப்ரிகேடியரையும் தப்பவிட்டு, மேஜை மீது வைத்திருந்த அலங்காரமான பூமிக் கோளத்தைத் தூள் தூளாக நொறுக்கியது. பறக்க விட்டது.

ராம்குமார் கணமும் தாமதிக்காமல், முருகபூபதியின் மீது பாய்ந்தான். அவனுடைய தலை முருகபூபதியின் நெஞ்சில் நடுநாயகமாய் மோதிச் சட்டென்று உயர்ந்து முகவாயையும் தாக்க, முருகபூபதி தன் கையிலிருந்த துப்பாக்கியை நழுவவிட்டான். ராம்குமார் அவனைத் தரையோடு அழுத்தி நெஞ்சில் ஏறி உட்கார்ந்த நேரம் மறுபடியும் கதவு திறக்க...

இப்போது அங்கே துப்பாக்கியோடு விஜய்தாக்கர்!

"அவரை விடு, ராம்!" என்றான்.

ராம்குமார் முருகபூபதியின் நெஞ்சிலிருந்து மெல்ல எழுந்தான்.

அடுத்த கணம் விஜய்தாக்கரின் துப்பாக்கி எகிறியது. அவன் ரத்தம் பொங்கும் கையைப் பிடித்துக் கொள்ள

ப்ரிகேடியர் நஞ்சப்பா தன் புகை கக்கும் துப்பாக்கியை மெல்ல இறக்கினார்.

இந்த முறை சுட்டது சைலன்ஸர் பொருத்தப்படாத துப்பாக்கி. அதன் 'டிஷ்யூங்' அந்த அறையெங்கும் எதிரொலிக்க, காரிடாரில் ஷூக்களின் தடதட தடதட கதவு உதைத்துத் திறக்கப்பட்டுத் துப்பாக்கி வீரர்கள்.

"விளையாட்டு முடிந்து விட்டது. விஜய்!" என்றார் ப்ரிகேடியர் நஞ்சப்பா. "இத்தனை நேரம் உன்னைச் சேர்ந்த ஆசாமிகள் அத்தனை பேருக்கும் வலை விரிந்திருக்கும்."

ராம்குமார் தன் கசங்கிய உடைகளை நீவிவிட்டுக் கொண்டான்.

"ப்ரிகேடியர், இப்போது வெளியே செல்ல எனக்கு அனுமதி கிடைக்குமா?" என்று பணிவாகக் கேட்டான்.

"எங்கே போகிறாய், ராம்?"

"டாக்டர் உத்தம் வீட்டிற்கு."

"போ. ஆனால் உன் கலைவாணிக்கு உன்னைப் பற்றிய விவரங்களை எல்லாம் சொல்லிப் பயமுறுத்தி விடாதே..." என்று சிரித்தார்.

ராம்குமாரும் சிரித்தபடி வெளியேறினான்.

ஃ

பொன்விழி தன் உலர்ந்த உதடுகளை விரித்துப் புன்னகை செய்தாள். "அங்கிள், எப்போது வந்தீர்கள்?"

"உனக்குக் கால் எப்படி இருக்கிறது, பொன்விழி?"



ராம்குமார் அவள் தலையை அன்பாகத் தடவிக் கொடுத்தான்.

"சிறப்பான டாக்டர் அங்கிள். ஆபத்து ஒன்றுமில்லை என்று சொல்லி விட்டார். இன்னும் மூன்று வாரங்களுக்குப் படுக்கைதான்."

"ராம்... எங்களைப் பற்றியே கேட்கிறீர்களே, நீங்கள் எப்படி அந்த அரக்கர்களிடமிருந்து தப்பினீர்கள்?" என்றாள் கலைவாணி, அவன் கண்களையே பார்த்துக் கொண்டு.

"அது ஒரு ஜாலியான கதை. நம் குழந்தை தூக்கம் வராமல் கேட்கும்போது சொல்லலாம் என்றிருக்கிறேன்."

"ராம்! பொன்விழியை வைத்துக் கொண்டு..." கலைவாணியின் கன்ன மேடுகளில் உதய சூரியனின் சிவப்பு.

"நீ வேறு. நம் ரிசப்ஷனில் கானமழை பொழியப் போவது யார் என்று நினைக்கிறாய்? இந்தத் தேன்குயில் தான்."

"அங்கிள்!" என்று பொன்விழி செல்லமாகச் சிணுங்கினாள்.

ஃ

திருமண மண்டபம் ஆடம்பரமில்லாமல் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ராம்குமார் பெருமிதம் ததும்ப நிமிடத்துக்கு நூறு தரம் கலைவாணியைப் பார்த்துப் புன்சிரிப்பைச் சிந்திக் கொண்டிருந்தான்.

"ராம், என்ன இது! காலையிலேயே கல்யாணம் முடிந்து விட்டது. இப்போது நாம் கணவன்-மனைவி. பக்கத்தில் நின்று மாலை போட்டுக் கொண்டிருக்கிறோம். அப்புறம் எதற்கு இந்த அசட்டுச் சிரிப்பு?"

"கல்யாணத்திற்கு அப்புறம் மனைவியின் கழுத்தில் தாலி ஏறுவது போல் கணவன் முகத்தில் அசட்டுச் சிரிப்பு ஏறிவிடும் என்று பெரியவர்கள் சொல்லி இருக்..வாருங்கள் கர்னல்..."

ராம்குமார் கல்யாண சூட் போட்டிருந்தாலும், ஏதோ யூனிஃபார்மையே அணிந்தவன் போல் சற்று விறைத்தான்.

கர்னல் ஜான் செம்பருத்தி தன் அரைக் கண்ணாடி வழியாக இரண்டு பேரையும் பார்த்துச் சந்தோஷம் காட்டினார்.

"காட் ப்ளெஸ் யூ" என்றார். "ராம்! இது என் மனைவி அகிலா. இந்தப் பொடியன் என் மகன் திலீப்."

"ஹாய் திலீப்! உன் அப்பாவைப் போலவே நீயும் ஆர்மியில் பெரிய ஆபீசராக வர வேண்டும்!" என்றான் ரம்குமார் திலீப்பைத் தூக்கிக் கொண்டு.

"நீங்கள் எப்போது பெரிய நாடு போகிறீர்கள் கர்னல்?" என்றான் கிசுகிசுப்பாக.

"இன்றைக்கு ஒரு நாள் யாவற்றையும் மறந்து சந்தோஷமாய் இரு, இளைஞனே!" என்றார் கர்னல்-அவனிடமிருந்து தன் மகனைப் பெற்றுக் கொண்டே.

மேடையில் பொன்விழி மைக்கின் முன்னே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய அமுத கானம் துல்லியமான ஸ்பீக்கர்கள் வழியே அரங்கையே



குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. வெற்றிலை சீவல் வைத்த ட்ரேக்களுக்குப் பின்னே சிவப்பிரகாசம் அலைந்து கொண்டிருந்தார். கலைவாணியின் மாமாவும், அத்தையும், டாக்டர் உத்தம், ப்ரிகேடியர் நஞ்சப்பா, இன்னும் கர்னலின் ராணுவ சகாக்கள் அனைவரும் தனித் தனிக் குழுவாகப் பிரிந்திருந்தனர்.

"ராம்......இப்போதாவது சொல்லுங்கள். உங்கள் உண்மையான வேலை என்ன? துப்பாக்கி நாட்கள் இன்னும் தொடருமா?"

"என்ன கலைவாணி, இன்னும் நம்பிக்கை வர வில்லையா? நான் ஒரு சாதா சிவில் இன்ஜினீயர். ஹல்லோ நரேந்திரன்..."

ராம்குமார் மலர்ந்து சிரித்து வரவேற்றான்.

வெளிர் பச்சைச் சட்டையை இன் செய்து, பெல்ட்டில் கழுகு பக்கிஸ்களைப் பதித்து நீட்டிய கையுடன் வந்தான் நரேந்திரன். அவனை ஒட்டி அவன் வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு ஸல்வாரில் வைஜயந்தி!

"கங்கிராட்ஸ் ராம்..."

"கலைவாணி! இவர்..."

"தெரியும். நரேந்திரன். ஈகிள்ஸ் ஐ துப்பறியும் நிறுவனத்தைச் சேர்ந்தவர். கூட வருவது அவருடைய எஜமானி..." கலைவாணி சிரித்துக் கொண்டே சொன்னாள். "ஆமாம், ஏன் இவ்வளவு லேட்?"

"கேட்டீர்களே ஒரு கேள்வி, வைஜயந்தியைக் கண்ணாடி முன்னாலிருந்து எழுப்புவது என்பது விமானத் தாக்குதலைச் சமாளிப்பதைவிடக் கடினம்.

ஏதோ இந்த நேரத்திற்காவது வந்தோமே...ரிசப்ஷன் எல்லாம் முடிந்து சாத்திய கதவைத் தட்டி உங்களை எழுப்ப வேண்டி வருமோ என்று நான் பயந்தேன் தெரியுமா?"

"நரேன்!" வைஜயந்தி நெயில் பாலிஷ் அணிந்த தன் இரண்டு விரல்களால் அவனைக் கிள்ளினாள். "கொஞ்சம் டீஸன்ட்டாக நடந்து கொள். இல்லை யென்றால் அடுத்த கதையிலும் உன்னைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்."

**முற்றும்**